சேகர் பதிப்பகம்

தொல்லியல்

கட்டுரைகள்

நடன. காசிநாதன் எம்.ஏ.,

தொல்லியல் கட்டுரைகள்

2550

நடனா. காசிநாதன், எம்.ஏ.,

சேகர் பதிப்பகம்
புத்தகம் வெளியிடுவோர்,
விற்பனையாளர் :
66, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர்,
சென்னை-83.

முதற் பதிப்பு : மார்ச், 1977

விலை ரூ 5-00

அச்சிட்டோர் :
அன்னை அஞ்சுகம்
சென்னை–14

ஆசிரியர் உரை

நான் சிலகாலமாக ஒரு சில நாளிதழ்களிலும் திங்களிதழ், காலாண்டிதழ், ஆண்டிதழ்களிலும் எழுதி வந்த கட்டுரைகள் தொகுக்கப் பெற்று நூலாக வெளி வருகிறது.

இக் கட்டுரைகள் தொல்லியலின் சிறு சிறு அங்கங்களாக விளங்குகின்ற காரணத்தால் 'தொல்லியல்' என்ற பொதுப் பெயரோடு உலா வருகிறது.

இக் கட்டுரைகள் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறைக் காலாண்டிதழ் ''கல்வெட்டு'', ஆராய்ச்சி, புலமை, கொங்கு, தமிழம், நவமணி, குவ்வத் ஆகிய இதழ் களில் வெளி வந்தவை.

எனது கட்டுரைகளை வெளியிட்டுதவிய தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறைக்கும், ஏனைய இதழ்களின் ஆசிரியர்களுக்கும் எனது மனம் திறந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

நான் இக் கட்டுரைகளை எழுதுகையில் ஆக்க பூர்வமான ஆலோசனைகள் தந்து என்னை ஊக்குவித்த தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை இயக்குனர் டாக்டர் இரா. நாகசாமி அவர்களுக்கும், கட்டுரைகளுக்குச் சில சான்றுகளைத் தந்துதவிய என் உடன் பிறப்புக்களான தமிழ் நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறைப் பதிவு அலுவலர் கள், கல்வெட்டாய்வாளர்கள் ஆகியோருக்கும் இந்நூலை நல்ல முறையில் வெளிக் கொணரும் என் அருமை நண்பர் திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

நடன. காசிநாதன்

காணிக்கை

பணமும் பாசமும் தந்து என்னைப் படிக்கவைத்து ஆளாக்கிய அன்புத் தெய்வங்களாம் என் மாமன், மாமி திருமிகு பு. சி. கலியமூர்த்தி, திருமதி சரசுவதி ஆகியோருக்கு எனது நன்றிக் காணிக்கையாக இச்சிறு நூலைப் படைக்கிறேன்.

ஆசிரியரின் பிறநூல்கள்

1. கல்வெட்டின் கதை.
2. காலச் சுவடுகள்.
3. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள்
   தொகுதி—1
   தொகுதி—2
   தொகுதி—3
4. முத்தரையர்

பிற ஆசிரியர்களோடு கூட்டாக எழுதியவை

1. கல்வெட்டியல்
2. கல்வெட்டு ஓர் அறிமுகம்
3. பூம்புகார்
4. இராசராசன் கொடைவளம்

உள்ளடக்கம்

தமிழிக் கல்வெட்டுகள்

தமிழ்நாட்டில் காணப்பெறும் கல்வெட்டுகளில் மிகவும் பழமையானவை தமிழிக் (பிராமி) கல்வெட்டுகளாகும். இவை தமிழ்க் கல்வெட்டுகள் தான் என்று முதன் முதலில் கூறியவர் காலஞ்சென்ற திரு. கே. வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஆவார்கள். சென்ற ஒரு நூற்ருண்டுக் காலமாக இக்கல்வெட்டுகளைப் பற்றி பெரும் ஆய்வு நடைபெற்று வந்தது. பலரும் பலவிதமாகப் படித்தனர். ஆனுல் அனைவரும் இவை தமிழ்மொழியில்தான் உள்ளன என்பதை ஒப்புக் கொண்டனர். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக திரு. ஐ. மகாதேவன் இக்கல்வெட்டுகளை நல்ல பொருள்பட படித்துக் காட்டி சீரியதொரு விளக்கமும் அளித்துள்ளார்.

அண்மையில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் வெளியிடப் பெற்றுள்ள கல்வெட்டியல் என்ற நூலில் அத்துறையின் இயக்குநர் திரு. நாகசாமி அவர்கள் திரு. மகாதேவன் அவர்கள் படித்ததிலிருந்த சில சிறு குறை பாடுகளை செப்பம் செய்து படித்துத் தமிழில் அரியதோர் கட்டுரை எழுதியுள்ளார்கள். சந்தனம் அரைக்க அரைக்க மணப்பதுபோல், சுடச்சுடத் தங்கம் மேலும் ஒளிருவது போல், அக்கல்வெட்டுகளை மேலும் மேலும் படிக்க சில சிறு சிறு திருத்தங்களைச் செய்ய வேண்டுமாய்த் தோன்றுகிறது,

அரச்சலூர்

கோவை மாவட்டத்தில் ஈரோட்டிலிருந்து காங்கேயம் செல்லும் நெடுஞ்சாலையில் பன்னிரண்டு கல் தொலைவில் அரச்சலூர் என்ற சிற்றூர் உள்ளது. ஊரின் அருகே நாகமலை என்ற குன்று உண்டு. இக்குன்றின் ஒரு பகுதியிலே காணப் படும் கல்வெட்டை அரச்சலூர்க் கல்வெட்டு என்று வழங்கு கின்றனர். இக்கல்வெட்டை,

'எழுத்துப் புணருத்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்'

என்று படித்துள்ளனர். மணிவண்ணக்கன் தேவன் சாத்தன் என்பான் எழுத்துக்களைச் சேர்த்தவன் என்று பொருள் கொள்கின்றனர். மணிய் வண்ணக்கன் என்று படித்ததை 'மணிய வண்ணக்கன்' என்று படிக்கவேண்டும் என்று திரு. இராசு கூறியுள்ளார். 'தேவன் சாத்தன்' என்று படித்ததைத் 'தேவன் ஙாத்தன்' என்று படிக்கவேண்டியதாக உள்ளது. 'சாத்தன்' என்று படிக்கப்பட்டவற்றில் காணப்பெறும் 'சா' 'ஙா' என்று தான் படிக்க வேண்டும். இந்த 'ஙா' என்ற எழுத்து முன்னர் புதிய எழுத்தாக இருந்தமையாலோ அல்லது சரியான கல்வெட்டுப்படி கிடைக்காததாலோ, முன்னர் படித்த அறிஞர்கள் 'சா' என்று படிக்க நேர்ந்து விட்டது. சென்ற ஆண்டு தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையில் கண்டுபிடித்துள்ள பல நடுகற்களில் இவ்வெழுத்து மிகத்தெளிவாக எழுதப்பட்டு அது 'ங' வருகின்ற இடத்திலே கையாளப்பட்டிருக்கிறது. எனவே 'தேவன் சாத்தன்' என்பதைத் 'தேவன் ஙாத்தன்' என்று படிக்க வேண்டும்.

பிள்ளையார்பட்டி

இராமநாதபுரம் மாவட்டம் குன்றக்குடிக்கு அருகில் உள்ள பிள்ளையார்பட்டி என்ற ஊரில் காணப்படும் குகைக் கோயிலின் சுவரில் ஒரு சிறு கல்வெட்டு இரண்டு வரிகளில்

பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டைத் திரு. மகா தேவன் அவர்கள் 'எரு காட்டூருக் கோன் பெருபரணன்' என்று படித்தார்கள்.[1] திரு. இரா. நாகசாமி அவர்கள் அதிலே ஒரு திருத்தம்செய்து 'எரு காட்டூருக் கோன் பெருந் தசன்' என்று படித்துள்ளார்கள்.[2] மேன்மேலும் உன்னிப்பாக அக்கல்வெட்டைப் பார்த்ததால் இப்பொழுது ஒரே ஒரு எழுத்து மாற்றிப் படிக்க வேண்டியுள்ளது.

'எரு காட்டூரு' என்பதை 'எக்காட்டூரு' என்று படித்தல் வேண்டும். ஏனெனில் 'எ'க்குப் பக்கத்தில் 'க' தான் காணப்படுகிறது 'ரு' இல்லை. எனவே,

''எக்காட்டூருக் கோன் பெருந்தசன்'' என்று படிக்க வேண்டும். எக்காட்டூரு என்ற ஊரைச் சார்ந்த பெருந் தச்சன் என்ற பொருள்படுகிறது.

திருநாதன் குன்று

தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சிக்கு அருகில் உள்ள சிங்கவரம் என்ற ஊருக்கு அண்மையில் காணப்படும் திருநாதர் குன்றில் ஒரு கல்வெட்டு உள்ளது. இது நான்கு வரிகளில் எழுதப் பெற்றுள்ளது. சந்திரநந்தி என்ற சமணக் குரவர் உண்ணு நோன்பு நோற்று உயிர் துறந்ததைத் தெரிவிக்கிறது. 'நோற்றல்' என்ற சொல் இங்கு கையாளப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரை இக்கல் வெட்டை

''ஐம்பத்தே[ழ]ன
சனங் நோற்ற
சந்திர நந்தி ஆ
சிரிகர் நிசிதிகை''

என்று படித்துள்ளார்கள். இக்கல்வெட்டில் காணப்படும் இரண்டு எழுத்துக்களில் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. முதல் வரியில் உள்ள 'ழ வை 'மு' என்று படிக்கவேண்டும்.

நான்காம் வரியில் உள்ள 'ர'வை 'ரு' என்று படித்தல் வேண்டும். அப்படி மாற்றினல்

ஐம்பத்தேழுன
சனந் நோற்ற
சந்திர நந்தி ஆ
சிரிகரு நிசிதிகை

என்று படிக்கப்பட வேண்டும்.

காலத்தால் முந்தைய கல்வெட்டுகள் அனைத்திலும் 'ரு' பெரும்பாலான இடங்களில் கையாளப்பட்டிருக்கின்றன. 'கங்கரைசர் சேவகர்' என்பதற்குக் 'கங்கரைசரு சேவகரு' என்றும் 'பட்டார் கல்' என்பதற்குப் 'பட்டாரு கல்' என்றும் எழுதியிருப்பதைப் பல்லவர் கால நடுகல் கல்வெட்டுகளில் காணலாம். எனவே 'சந்திர நந்தி ஆசிரிகர்' என்பதைச் 'சந்திர நந்தி ஆசிரிகரு' என்று படிப்பதில் தவறில்லை. கல்வெட்டில் 'ஆசிரிகரு' என்றுதான் எழுதப்பட்டுள்ளது.

தமிழிக் கல்வெட்டுகளை மென்மேலும் உன்னிப்பாக ஆராய்வோமானல் இன்னும் சில மாற்றங்கள் செய்ய வேண்டி இருக்கலாம். ஒவ்வொரு கல்வெட்டையும் நேராக அது இருக்கும் இடத்துக்குச் சென்று படித்தலும் நல்லபடி எடுத்துப் படித்தலும் இன்றியமையாததாகும். உற்று நோக்கலும் ஒப்பு நோக்கலும் பெரும்பயன் தரும்.

---

1. I. Mahadevan, Corpus of the Brahmi inscriptions, p. 12.
2. டாக்டர், இரா. நாகசாமி, கல்வெட்டியல், p. 79.

வட்டெழுத்தாக வளர்ந்த விதம் | தமிழி ↓ | தமிழாக வளர்ந்த விதம்



வட்டெழுத்து

தமிழகத்தின் சில பகுதிகளில் கல்லின் மேலும், செப்பேடுகளிலும், ஓலைச்சுவடிகளிலும் வட்ட வடிவமான எழுத்துகளால் பல நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டருப்பதைக் காண்கிறோம். இவ்வெழுத்துகள் வட்ட வடிவமாய்க் காணப்படுவதால் இவைகளுக்கு வட்டெழுத்து என்ற பெயர் ஏற்பட்டது. ஒரு சில இடங்களில் வட்ட வடிவிலும் பிற இடங்களில் வேறு வகையிலும் எழுத்துகள் தோன்றக் கரணியமென்ன என்று ஆராய்கையில் எழுத்துகளை எழுதும் போது கல்லின் மேல் எழுதுவதுபோன்று நேர் நேராக ஓலையில் எழுதினால் ஓலை கிழிந்துவிடும் எனக்கருதி எழுத்துகளை வளைத்து வளைத்து எழுதப் பெற்றிருத்தல் வேண்டும் என்று தெரியவருகிறது. இவ்வெழுத்துகள் காணப்படும் எல்லாவிடங்களிலும் மிக அழகாகத் தோற்றமளிக்கின்றன. மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு எழுத்துகளைப் பொறித்தாற் போன்று தோன்றுகிறது.

ஒரு சமயம், இவ்வெழுத்துகள் தமிழகத்தின் தென்கோடியில் (அஃதாவது பாண்டி மண்டலத்தில்) மட்டுமே வழங்கி வந்தனவாக எண்ணியதுண்டு. ஆனால் மற்ற பல இடங்களிலும் இவ்வெழுத்துகளில் கல்வெட்டுகள் காணக் கிடைக்கவே, ஒரு சமயம் இவ்வெழுத்து தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும்

என்பது புலனாகிறது. பெரும்பாலும் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் இவ்வெழுத்து கிடைக்கிறது. ஆனால் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இவ்வெழுத்தில் கல்வெட்டைக் காண முடியவில்லை. அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தஞ்சை மாவட்டத்தில் ஊது சங்கின்மீது பொறிக்கப்பட்டுள்ள வட்டெழுத்துச் கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது.

இதுவரையில் இவ்வெழுத்தில் கிடைத்த கல்வெட்டுகளில் மிகவும் பழமையானது தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த இருளப்பட்டியில் கிடைத்த கல்வெட்டேயாகும்.[1] இவ் வெழுத்து தொடர்ந்து கி. பி. 17–18ஆம் நூற்றாண்டு வரை பழக்கத்தில் இருந்திருக்கிறது. பாண்டி மண்டலப் பகுதியில் கி.பி. 8ஆம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. 10ஆம் நூற்றாண்டு வரை தனித்த ஓர் எழுத்தாகக் கோலோச்சி வந்திருக்கிறது. சோழர்களின் ஆளுகையின் கீழ் பாண்டிய நாடு வந்தபின்னர் வட்டெழுத்தின் பயன் சிறிது சிறிதாகக் குறையத் தொடங் கியது. ஆனால் மேலைக் கடற்கரைப் பகுதியான சேர நாட்டில் வட்டெழுத்து தொடர்ந்து மேலாண்மை செலுத்தியது. மலையாள எழுத்து வளரத் தொடங்கிய பின்னரும் வட்டெழுத்து அங்குப் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.

இவ்வெழுத்து 'தெக்கன் மலையாளம்' என்றும் 'நாநா மோன' என்றும் அழைக்கப்பட்டு வந்தது[2] சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறும் 'கண்ணெழுத்து' என்பது இதுதான் என்றும் கூறுவர். கல்வெட்டுகளில் இது ''வட்டம்'' என்று குறிக்கப் பட்டுள்ளது. ''திருமலை ஜீன்னக்கையால் உத்தாரணம் பண்ணினவிடத்து திருமலையிற் கல்வெட்டு வட்டம் ஆகை யால் தமிழாகப்படியெடுத்து'' என்று ஒரு கல்வெட்டு குறிப் பிடுகிறது (எண். 454 of 1917). திருக்குற்றாலத்துக் குற்றால நாத சுவாமி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு ''புரிந்து

---

1. தமிழகம், பகுதி I டாக்டர் இரா. நாகசாமி.
2. T. A. S. Vol. I p. 283.

கொள்ள முடியாத வட்டம் நீங்கலாக மற்ற எல்லா கல்வெட்டுகளும் திரும்பவும் சுவரில் எழுதப்பெற்றுள்ளன''[3] என்று குறிக்கிறது.

வட்டெழுத்தினுடைய தோற்றத்தைப் பற்றிப் பலர் பலவகையாகக் கூறுகின்றனர். திரு. டி. ஏ கோபிநாத ராவ் அவர்கள் ''வட்டெழுத்தும், பிராமி எழுத்திலிருந்தே வளர்ச்சியடைந்தது'' என்று குறிப்பிட்டுள்ளார்.[4] பேராசியர் பண்டாரகர் அரபிரசாத் சாஸ்திரி என்பார் 'கரோஷ்டி' எழுத்திலருந்துதான் வட்டெழுத்து உருவாகியிருத்தல் வேண்டும் என்று கூறிப்போந்துள்ளார்.[5] பண்டாரகர் பர்னல் என்பார் 'போனிசியன்' எழுத்துகளிலிருந்து வட்டெழுத்து வளர்ச்சியடைந்திருத்தல் வேண்டுமென்றும்; அசோகன் பிராமியிலிருந்தும் வேறுனவையென்றும் கூறியுள்ளார்.[6] மேலும் ''வடமொழி தமிழ் நாட்டில் பரவுவதற்கு முன்னரே வட்டெழுத்து பயன்முறையில் இருந்துள்ளதால், வட்டெழுத்து, பிராமியிலிருந்துதான் வளர்ந்திருத்தல் வேண்டுமென்பது ஒப்புக்கொள்ள முடியாத ஒன்று'' என்று கூறுகின்ருர்.

பண்டாரகர் பூலர் அவர்கள் வட்டெழுத்தானது தமிழினுடைய ஒரு மாறுபட்ட வடிவம்தான் என்றும் அது மராட்டியர்களின் 'மோடி' எழுத்து எப்படி பால் போத்துகளுக்குப் பயன்பட்டதோ அது போன்றே வாணிகர் மட்டும் பயன்படுத்தும் எழுத்தாக இருந்தது'' என்றும் கூறியுள்ளார்.[7] எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழி கல்வெட்டுகளே தமிழின் முந்தைய வடிவம் என்று கருதப்படும் இந்நாளில் வட்டெழுத்தும்

---

3. T.A.S. Vol. I. P. 286
4. T.A S. Vol. I. P. 286
5. JBORS, Vol. I. P. 58
6. ESIP, pp. 49–52
7. I.A. Vol. XXXIII, App. p. 75.

தமிழினுடைய ஒரு காலகட்டப் பகுதியின் (periodical) வளர்ச்சியே என்று கொள்ள வேண்டியுள்ளது.

வட்டெழுத்தில் கல்வெட்டுகள் மட்டுமல்லாமல் செப்பேடுகளும் கிடைத்திருக்கின்றன. வட்டெழுத்தில் காணப்பெறும் செப்பேடுகளில் பராந்தக நெடுஞ்சடையனைச் சார்ந்த வேள்விக்குடிச் செப்பேடு மிகவும் பழமை வாய்ந்தது. வட்டெழுத்தில் மட்டும் எழுதிய செப்பேடுகளும் உள. கிரந்த எழுத்திலும் வட்டெழுத்திலும் எழுதிய செப்பேடுகளும் உள. இவ்வகையான செப்பேடுகளில் சமஸ்கிருதப் பகுதிக்குக் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தியுள்ளனர். வட்டெழுத்திலே எழுதப்பெற்ற கல்வெட்டுகளாயினும் சரி செப்பேடுகளாயினும் சரி காலத்தால் பழமையானவை அனைத்தையும் நன்கு படிக்கும் வண்ணம் ஒவ்வொரு எழுத்துக்கும் உள்ள வேற்றுமைகள் நன்கு உணரும் வண்ணம் எழுதப் பெற்ளன. ஆனல் பிற்காலத்தியக் கல்வெட்டுகளையோ, செப்பேடுகளையோ நாம் பார்ப்போமாயின், ப, ம, ய, வ ஆகிய எழுத்துகளுள்ளும், த, ற, ண ஆகிய எழுத்துகளுள்ளும் ஒன்றுக்கொன்று வேற்றுமை புரியாவண்ணம் எல்லாம் ஒரே வகையாக எழுதப்பெற்றிருக்கும். அவற்றைப் படிப்பது மிகவும் கடினமானது. அங்குக் காணப்பெறும் சொற்றொடர் அமைப்புகளுக்கு ஏற்ப மிகவும் ஆய்ந்துதான் படித்தல் வேண்டும். தொடக்கக் காலத்தில் மிக்க கவனம் செலுத்தி எழுதியவர்கள், வர வரக் கவனக் குறைவின் மேலீட்டால் அவ்வாறு எழுதியிருக்கலாம்; அல்லது அவ்வெழுத்துகளின் பழக்கம் மக்களுக்கு மிகவும் பேரளவில் ஏற்பட்டுவிட்ட கரணியத்தாலும் அவ்வாறு எழுதப் பெற்றிருக்கலாம்.

வட்டெழுத்தின் வளர்ச்சியை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். முதல் நிலை வளர்ச்சியை கி. பி. 300 முதல் 950 வரை எழுதப் பெற்றுள்ள வட்டெழுத்துகளுக்குக் கூறலாம். சான்முக இருளப்பட்டி கல்வெட்டுகள்,[8] திருநாதற்குன்று

8. Dam Jica, P. 21

 2550

கல்வெட்டு[9], நடுகல் கல்வெட்டுகள், சென்னைப் பொருட் காட்சிச் செப்பேடு,[10] ஆனைமலைக் கல்வெட்டு[11] 'வேள்விக் குடிச் செப்பேடு[12], ஐவர்மலைக் கல்வெட்டு[13], திருச் செந்தூர்க் கல்வெட்டு[14], இராசசிம்மனின் சின்னமனூர் (பெரிய) செப்பேடு[15] ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இச் செப்பேட்டில் உள்ள எழுத்துகள் அனைத்தும் வழக் கத்துக்கு மாறாக நேர் நேராக எழுதப்பெற்றுள்ளன. மற்ற இடங்களில் காணப்படும் வட்டெழுத்துகள் இடதுபுறம் சாய்ந்து காணப்படுவதால் இத்தகைய நேராக எழுதப் பெற்ற எழுத்துகள் முந்தைய கட்டத்தைச் சேர்ந்தவை என்று கருதப்பட்டது. இருளப்பட்டி கல்வெட்டைக் காணின் அக்கருத்து முற்றிலும் உண்மையே என்று உணர முடிகிறது. அதோடு மட்டுமல்லாது தமிழி எழுத்துகளி லிருந்து வட்டெழுத்து வளர்ச்சியடைந்திருத்தல் வேண்டும் என்று கருதும்போது தமிழி எழுத்தைப் போன்றுதான் வட்டெழுத்தின் தொடக்ககால எழுத்துகளும் நேர் நேராக எழுதப்பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதலாம்.

தொடக்கக்கால எழுத்துகளில் காணப்பெறும் சில தனித் தன்மைகளாவன. (1) உயிரில்லா மெய்யெழுத்துகள் சில இடங்களில் புள்ளியோடு காணப்படுகின்றன. அதே போன்று எகர ஒகரமும் சில இடங்களில் புள்ளி தாங்கி நிற்கின்றன. (2) யகரமானது இரண்டு வகைகளாக எழுதப் பெற்றிருகின்றன, 'ய' வின் வளைவு ஒருவகை. மற்றொரு வகையில் காணப்பெறும் வளைவானது பெரும்பாலும் உட் பக்கம் வளைந்தே காணப்படுகிறது. (3) கி, ஙி, சி ஆகிய

9. T.A.S. Vol I. p. 231
10. I.A. Vol. XXII
11. E.I. Vol. VIII.
12. Ibid. Vol. XVII.
13. A.R.E. 705 of 1905.
14. E.I. Vol. XXI.
15. S.I.I. Vol. III.

எழுத்துகளை எழுதுவதற்கு க, ங, ச வோடு வலதுபுறம் ஒரு வளைவை சேர்த்து எழுதப் பெற்றிருக்கின்றன. சில சமயம் பக்கவாட்டில் வளைவு இல்லாமல் எழுத்தின் மேலே வளைவு காணப்படுகிறது. (4) ளு, சூ, நா, லூ, வூ ஆகிய எழுத்து களில் காணப்பெறும் நேர்க்கோட்டின் அடிப்பகுதியில் வளைவு காணப்படுகிறது, (5) 'ம' வுக்கு எழுத்தின் வலப்பக்கத் தில் காணப்பெறும் வளைவு முழுமையாக இல்லை; கோட்டைத் தொடமல் இருக்கிறது. சில கல்வெட்டுகளில் வலப்பக்க நேர்க் கோட்டில் ஒரு குறுக்குக் கோடு உள்ளது. (6) எகரத் துக்கு, எழுத்துகளின் தொடக்கத்தில் திறந்தவளைவு காணப் படுகிறது. சில கல்வெட்டுகளில் முழு வட்டமாக எழுதப் பெற்று நடுவில் புள்ளியிடப்பட்டு காணப்படுகிறது.

அடுத்த கட்ட வளர்ச்சியை கி.பி. 950 முதல் 1350 வரை யான காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகளில் காணலாம், பாண்டிய மண்டலத்தைச் சோழர்கள் கைப்பற்றிய பின்னர் தங்களுடைய கல்வெட்டுகளை முதலில் வட்டெழுத்தில்தான் எழுதினர். முதலாம் இராசராசனின் ஆட்சித் தொடக் கத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் பெரும்பாலும் இப்பகுதியில் வட்டெழுத்தில்தான் காணமுடிகிறது. மலை நாட்டிலும் கூட கிரந்த எழுத்து வளர்ச்சியடையு முன்னர் வட்டெழுத்தில் தான் கல்வெட்டுகள் எழுதப்பெற்றுள்ளன.

சோழர்களின் ஆட்சி பாண்டி மண்டலத்தினுள் பரவவே, தமிழ் எழுத்தின் சில அமைப்புகள் வட்டெழுத்திலும் புகுந்த கரணியத்தாலோ என்னவோ இக்காலத்தில் சில மாறுதல்கள் ஏற்படலாயின. எடுத்துக் காட்டாக பராந்தகச் சோழனின் ஆனைமலைக் கல்வெட்டையும்,[16] வேணாடு பாஸ்கர ரவிவர்மனின் திருக்கடித்தானம் கல்வெட்டையும் (பதி னொன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி)[17], கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த உதயமார்த்தாண்ட வர்மனின்

16. S.I.I. Vol. III.
17. T.A.S. Vol. II.

கொல்லூர் மடம் செப்பேட்டையும்[18] கூறலாம். இக்காலத்து எழுத்துகளில் ஏற்பட்ட சில மாற்றங்கள்.

1. ன, த, ற ஆகிய எழுத்துகளில் காணப்பெறும் வளைவு எழுத்தின் தொடக்கத்தைத் தொடுவதாக அமைந்துள்ளது.

2. கா. சா. போன்ற எழுத்துகளில் உள்ள நெடிலைக் காட்டுவதற்காக தொடக்கக் காலத்தில் எழுதப்பட்டதைப் போன்ற தனியான ஒரு குறி இல்லாது, எழுத்தில் வரும் கோட்டையே சிறிது நீட்டித்துக் காண்பிக்கப் பெற்றுள்ளன.

3. 'ஞ' எழுத்தின் பழைய வடிவம் மறைந்து புதிய வடிவம் உருவாயிற்று.

4. 'லு' வுக்குப் பல வடிவங்கள் உருவாகின.

5. எகர ஏ காரத்தை வேற்றுமைப் படுத்திக் காட்டுவதற்குப் பயன் படுத்திய புள்ளி இக்காலத்தில் காணப்பெறவில்லை. மாறுக இரண்டிலும் சிறுகோடு சேர்க்கப்பட்டுள்ளது.

கி. பி. 14–ஆம் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகள் இறுதிக்கட்ட வளர்ச்சியைச் சார்ந்தவை எனக் கொள்ளலாம். சான்றுக கி . பி. 15–ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கல்பாத்தி கல்வெட்டையும்[19] கி. பி. 17–ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த பாழியம் செப்பேட்டையும்[20], கி . பி . 18-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த மின்சிறை மடம் செப்பேட்டையும்[21] கூறலாம்.

---

18. T.A.S. Vol. V.
19. E.I. Vol. XV.
20. T.A.S. Vol. I.
21. Ibid

இந்தக் காலத்தில் ந, ப, ய, வ ஆகிய மெய்யெழுத்துகள் ஒரே வகையாய் எழுதப் பெற்றுப் படிப்பதற்குத் தொல்லை தருவனவாய் உள்ளன. ஞ, லை ஆகிய எழுத்துகள் ஒரே வகையாய் எழுதப் பெற்றுள்ளன. 'க' வுக்கும் 'ச'வுக்கும் வேறுபாடு தெரியாத வண்ணம் காணப்படுகின்றன. வட்டெழுத்து நாளடைவில் அழிந்து போனதற்கு இதுதான் காரணியம் என்று திரு. டி. என். சுப்பிரமணியம் அவர்கள் கருதுகிறார்கள்[22].

சில கல்வெட்டுகளில் வட்டெழுத்தும் தமிழும் கலந்து எழுதப் பெற்றுள்ளன. ஒட்டப்பட்டி[23] அனுமந்தபுரம்[24] (சேலம் மாவட்டம்), கோலார் மாவட்டத்திலுள்ள எபினி[25] ஆகிய இடங்களில் கிடைத்த வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் தமிழ் எழுத்துகளும் இடம் பெற்றுள்ளன. அதே போன்று வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள கீழ் முட்டுக்கூர்[26], குளிடிக்கி[27] ஆகிய இடங்களில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுகளில் வட்டெழுத்து எழுத்துகளும் காணப்படுகின்றன.

இவ்வகையான கலப்பட எழுத்துகள் உள்ள கல்வெட்டுகள் அறச்சலூர், இருளப்பட்டி, பிள்ளையார் பட்டி, திருநாதற்குன்று, திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களிலும் கிடைத்திருக்கின்றன.

---

22. S.I. T.I. Vol. III, Part II.
23. A.R.E. 211 and 212 of 1910.
24. E.I. Vol. VII.
25. Ibid.
26. Ibid. Vol. IV.
27. Ibid. Vol XXI.

தமிழ் மக்களின் எழுத்தறிவு

எழுத்தின் தோற்றம்

சென்ற ஒரு சில ஆண்டுகளாக உலகத்தின் பல்வேறு பகுதியினரும் தங்களுடைய நாட்டில் வழக்கில் உள்ள எழுத்தின் தன்மை, தோற்றம், மாறுதல் ஆகியவற்றைப் பற்றி எண்ண ஆரம்பித்துப் பல நாட்டினரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.[1] அனைவரின் கருத்துக்களிலும் முடிபாக எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை கீழ் வருபவை ஆகும்.

1. சித்திரம் வரைதலே எழுத்துகளின் தோற்றத்திற்குக் காரணம்
2. சித்திர எழுத்து கருத்தெழுத்தாகிக் கருத்தெழுத்து ஒலி எழுத்தாகியது.
3. ஒலியெழுத்து தோன்றிய பின்னர்தான் நிலையான எழுத்துக்கள் எழுதப்படலாயின.
4. ஒலி எழுத்திலும் இருவகை முறைமை கையாளப் பட்டன.
5. அவை (1) அகரவகை எழுத்துகள் (2) உயிர்மெய் வகை எழுத்துகள்.

தமிழர்களின் நுண்ணறிவு

தமிழர்கள் இத்தகைய எழுத்தாய்வை சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நடத்தி மேலே குறிப்பிட்டுள்ள முடிவுகளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் என்று அறியும் போது தமிழர்களின் அறிவுக் கூர்மையை எண்ணி யெண்ணி வியக்கும் வண்ணம் உள்ளது-

எழுத்து என்றால் என்ன என்பதை நன்னூல்,

''மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே''

என்று தெரிவிக்கிறது.

அதாவது ''செவிக்குப் புலனாகும் அணுக்களின் அமைப்பினாற் சொல்லுக்கு முதற்காரணம் ஆவதான ஒலியே எழுத்தெனப்படும். அது முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்'' என்று உரை கூறப்பட்டுள்ளது.

எழுத்தை மேலும் விளக்குகையில் யாப்பருங்கல உரை மேற்கோள்களாகச் சில வரிகள் தரப்பட்டுள்ளன. அவை கீழ் வருமாறு :[2]

காணப்பட்ட வுருவ மெல்லா
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
வெழுதப்படுவ துருவெழுத் தாகும்

கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
யுண்டென் றுணர்வ துணர்வெழுத்தாகும்

இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப்புல னாவ தொலியெழுத் தாகும்

முதற்காரணமுந் துணைக் காரணமுந்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வு
மவற்ருெடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே

இங்கே தரப்பட்டுள்ள மேற்கோள் எழுத்தின் வளர்ச்சி யைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இருபதாம் நூற்ருண்டில் விஞ்ஞான முறையில் ஆய்ந்து தந்திட்ட முடிவுகளை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் தெரிந்து வைத்திருக்கின்றனர். எழுத்துகள் முதலில் சித்திர எழுத்தாக (Pictogtaphy) இருந்து, பின்னர் கருத்தெழுத்தாக வளர்ந்து (Ideography) நாளடைவில் ஒலியெழுத்தாக (Phonography) மாறி இன்றுள்ள எழுத்தின் தன்மையை அடைந்திருக்கிறது என்பதை இம்மேற்கோள் உருவெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து, தன்மையெழுத்து என்று சுட்டுகிறது.

உருவெழுத்து (Pictography)

காணப்பட்ட வுருவ மெல்லா
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
வெழுதப் படுவ துருவெழுத் தாகும்.

தாம் கண்ட உருவத்தைத் தெளிவாக மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக உருவமாக வரைந்து காட்டுவது உருவெழுத்து எனப்படும். உதாரணமாக மாடு என்பதற்கு மாட்டின் உருவத்தை வரைந்து காட்டுவதாகும்.

உணர்வெழுத்து (Ideography)

கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
யுண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்.

தெளியப்பட்ட குறி ஒன்றினுல் அது இன்னது என்று உணர வைப்பது உணர்வெழுத்தாகும். மாடு என்று அறி வதற்கு இரு கொம்புகளை மட்டும் எழுதி அது மாடு என்று உணர வைப்பது.

ஒலியெழுத்து (Phonography)

இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப்புல னுவ தொலியெழுத் தாகும்.

பறவைகள் பறக்கின்றன என்பதை அவை எழுப்புகின்ற ஒலியால் அது என்னவென்று உணர வைக்க எழுதப் படுவதற்கு ஒலி எழுத்து என்று பெயர். இவ்வகையான எழுத்துகள் உருவெழுத்து, உணர்வெழுத்து ஆகிய எழுத்து களின் வளர்ச்சியாகும்.

தன்மையெழுத்து

முதற்கா ரணமுந் துணைக்காரண முந்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வு
மவற்ருெடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந்திசைப்பது தன்மை யெழுத்தே.

ஒருவன் தான் என்ன கூற நினைக்கிருன் என்ற முதற் காரணமும், யாருக்காகக் கூற நினைக்கிருன் என்ற துணைக் காரணமும் அது தொடர்பான உணர்வும், அவ்வுணர்வோடு சேர்ந்து உள்ளத்திலிருந்து எழுகின்ற காற்றும் தொண்டை வழியாகப் பிறந்து வெளிப்படுவதே தன்மை எழுத்தாகும். அதாவது உணர்வும் ஒலியும் சேர்ந்து இசைப்பது தன்மை யெழுத்து. வெறும் ஒலியோடில்லாது உணர்வு கூடிய ஒலியாக ஒலிக்கும்போதுதான் எழுத்தின் முழுப் பொருளை வெளிக்காட்டுவதாக அமைகிறது. மாடு என்று எழுதப்பட் டுள்ள எழுத்தை ஒலிக்கும்போதே அது மாடு என்ற விலங்கைக் குறிக்கிறது என்ற உணர்வையும் ஏற்படுத்தும். இத்தன்மையாக இருப்பதால் தன்மையெழுத்து என்று அது பெயர்பெற்றது போலும்.

ஓவ்வெழுத்துகள் அகரவகை எழுத்துகள் (Alphabetic) என்றும், உயிர் மெய் வகை எழுத்துகள் (Syllabary) என்றும் இருவகைப்படும் என்று கூறியுள்ளனர். தமிழ்மொழி போன்ற ஒரு சில மொழிகளின் எழுத்துகள் இருவகைகளை யும் கலந்தனவாக உள்ளன.

மொழிநிலை மூவகைப்படும் என்பதைத் தமிழ் மக்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்திருக்கின்றனர். சான்றாகத் தொல்காப்பிய வரிகளைக் கூறலாம்.

> ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
> இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுள்படட
> மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

என்று அது அறுதியிட்டுக் கூறுகிறது.

ஓரெழுத் தொரு மொழி

ஓரெழுத்தொருமொழி என்பது உயிர்மெய் வகை எழுத்துகளைக் கொண்டு பயில்வது. நம் தமிழ்மொழி இவ் வகையைச் சேர்ந்தது. தமிழ் மொழியில் 'க' என்ற உயிர் மெய்யை எழுதுவதற்கு 'க்' என்ற மெய்யைத் தனியாகவும் 'அ' என்ற உயிரைத் தனியாகவும் எழுதுவதில்லை.

ஆதலால் இது உயிர்மெய் வகை (Syllabary) எழுத்து வகையைச் சேருகிறது.

ஈரெழுத் தொரு மொழி

ஈரெழுத்தொருமொழி என்பது அகரவகை எழுத்து களைக் கொண்ட மொழி என்பதாகும். இது ஆங்கிலம் போன்ற மொழிகளில் எழுதப்படுகிறது. உதாரணமாக "A" என்பது உயிர். "K" என்பது மெய். "க" என்னும் உயிர் மெய் எழுத வேண்டுமானால் K முதலில் எழுதி அருகில் A எழுதினால்தான் Ka ஆகும். ஆகவே இவ்வகையான மொழி களை ஈரெழுத்தொருமொழி என்று வழங்கியிருக்கின்றனர்.

இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி

இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி என்பது அகர வகை எழுத்துக்களையும் உயிர்மெய் வகை எழுத்துக்களை யும் கலந்து எழுதும் இயல்புடைய மொழியென்ப தாகும். தமிழ்மொழியையே இதற்கு உதாரணமாகக் கூறலாம். தமிழில் உயிர் ஒலிகளைத் தனித்தனி எழுத்து களால் எழுதுகிறோம். ஆயினும் உயிர்மெய் ஒலியை எழுதும் போதும் ஒரே எழுத்தால் எழுதிவிடுகிறோம். இங்கு உயிர் ஒலி தனியாகவும், மெய் ஒலி தனியாகவும் எழுதுவதில்லை. ஆதலால் தமிழ்மொழி இருவகை எழுத்துகளையும் உள்ளடக் கிய தொர்டர்மொழி என்றும் கூறலாம்.

ஆகவே தமிழர்கள் பன்னெடுங்காலத்துக்கு முன்பே மொழியறிவு நிரம்பியவர்களாகவும், எழுத்து வரிவடிவத் தின் வளர்ச்சியைத் தெளிவாக உணர்ந்தவர்களாகவும் விளங்கி உலகத்தின் மற்ற பகுதி மக்களுக்கு வழிகாட்டி களாக அமைந்திருக்கிறார்கள் என்று கூறலாம்.

---

1. தொல்லெழுத்தியல், கல்வெட்டியல், டாக்டர் இரா. நாகசாமி.

2. நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை, பக்கம் 34, மோசசு பொன்னையா, பதிப்பு, 1968.

சோழர் கல்வெட்டுகளில் யாண்டு இதனெதிராமாண்டு

ஆண்டு குறிப்பிடும் பழக்கம்

ஒரு நிகழ்ச்சி எப்பொழுது நிகழ்ந்தது என்பதைக் கணக்கிட்டுக் குறிப்பிடும் பழக்கம் இந்தியாவில் கி. மு. 6-ஆம் நூற்றாண்டு முதல் இருந்து வந்திருக்கிறது. அக்காலத்தில் குறிப்பிடத்தக்க வகையில் நிகழ்ந்த எதாவது ஒரு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு அந் நிகழ்ச்சி நடந்து முடிந்த இத்தனுவது ஆண்டு என்று குறிப்பதை வழக்கமாக முதன் முதலில் பெற்றிருந்திருக்கிருர்கள் என்பதை மகாவீரர் நிர்வாணம் அடைந்து இத்தனுவது ஆண்டு என்று தெரிவித் திருப்பதிலிருந்தும்[1], புத்தர் நிர்வாணம் அடைந்து இத் தனுவது ஆண்டிலிருந்து என்பதிலிருந்தும் தெரிந்துகொள்ள முடிகிறது.

ஆட்சி ஆண்டு புகுத்தப்பட்ட காலம்

நாளடைவில், பெரும் பேரரசர்கள் எந்த ஆண்டிலிருந்து அரசாளத் தொடங்கினுர்களோ அந்த ஆண்டில்ருந்து இத் தனுவது ஆண்டில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது என்று குறிப்பிடுவது ஆரம்பமானது. இவ்வழக்கம் கி. மு. 3-ஆம் நூற்ருண்டிலிருந்து தொடங்கப் பெற்றிருக்கிறது. இவ் வழக்கம் இந்தியாவில் ஏற்பட்டதற்குக் காரணம் இந்தோ-

கிரேக்க மன்னர்களால் ஏற்பட்ட தொடர்பாக இருக்கலாம். இப் பழக்கம் முதன் முதலில் மௌரியப் பேரரசன் அசோகனின் (கி. மு. 273-232) கல்வெட்டுகளில் காணப் படுகிறது.[3]

பலவகை ஆண்டு முறை

காலப் போக்கில் பலவகையான ஆண்டு முறை இந்தியா வில் நிலவியிருக்கிறது. உதாரணமாக விக்ரம ஆண்டு முறை[4], குப்த ஆண்டு முறை[5], களச்சூரி ஆண்டு முறை[6], கலி ஆண்டு முறை[7], சக ஆண்டு முறை [8], கொல்லம் ஆண்டு முறை[9], பிரபவ, விபவ ஆண்டு முறை[10], ஆகியவைகளைக் காட்ட லாம். கொல்லம் ஆண்டைத் தமிழ் ஆண்டு என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுவது அறிந்து இன்புறத் தக்கது.[11]

ஆட்சியாண்டு:

மேற் கூறப்பட்ட ஆண்டு முறைகளும் வழக்கத்தில் இருந்தாலும் அதிக அளவில் அரசன் ஆட்சிக் கட்டில் ஏறிய திலிருந்து கணக்கிடும் முறைதான் கல்வெட்டுகளில் கை யாளப்பட்டிருக்கின்றன. இவ்வாண்டு முறையை வட மொழியில் ''ராஜ்யவர்ஷம்''[12] என்றும், தமிழில் "செங்கோல் பற்றியாண்டு"[13] என்றும் ஒரு செப்பேடும், ஒரு கல்வெட்டும் முறையே புலப்படுத்துகின்றன. அரசனின் ஆட்சி ஆண்டைக் குறிப்பிடுவதிலும் தமிழகத்தில் ஒரு புதுமையைக் கையாண் டிருக்கிறார்கள் ஆன்றோர்கள். அதாவது ஒரு ஆண்டைக் குறிப்பிட்டு அதற் கெதிராமாண்டு என்று வழங்கப்படுவதா கும். எதிராமாண்டு என்பது எதிர்வந்த ஆண்டு என்பதன் குறுகிய வடிவமாக இருக்கலாம். ஏனெனில் அவ்வாறு எதி ராமாண்டு இன்னது என்று குறிக்கப்பட்டிருப்பதைக் கூட்டித் தான் கணக்கிடப்படவேண்டும் என்பதை வேறொரு கல் வெட்டால்[14] அறியப்படுவதிலிருந்து ஆகும்.

யாண்டு எதிராமாண்டின் தொடக்கம்

இந்த ஒருமுறை பெரும் அளவில் பாண்டியர்களால் கை யாளப்பட்டு வந்திருக்கிறது. தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த

பிற குல மன்னர்களான பல்லவர்[15], கேரள மன்னர்[16], யாதவ மன்னர்[17], சோழர்[18] ஆகியோர் இம்முறையைச் சிறு அளவில் தங்கள் கல்வெட்டுகளில் எடுத்தாண்டிருக்கின்றனர். பெரும் அளவில் பயன்படுத்திய பாண்டியர்கள் இம்முறையை எங்ஙனம் உருவாக்கினுர்கள் என்று ஆராய்கையில் அவர்களுக்கு முன்னமேயே இம்முறை இந்தியாவின் சில பகுதிகளில் பயன்படுத்தப் பட்டிருந்தமை தெரிய வருகிறது.

சாதவாகன மன்னர் கௌதமபுத்ர ஸ்ரீசாதகர்னியின் (கி. பி. 80-104) நாசிக் குகைக் கல்வெட்டில் ஆட்சி ஆண்டு 10+8 என்று குறிக்கப்பட்டிருக்கிறது[19].

ருத்ரதாமன் காலத்திய (கி.பி, இரண்டாம் நூற்ருண்டு) ஜுனுகத் பாறைக் கல்வெட்டில் 70+2 என்று ஆட்சி ஆண்டைக் காணமுடிகிறது.

வாகடக மன்னன் ப்ரவரசேனன் காலத்தியக் (கி பி மூன்ரும் நூற்ருண்டு) கல்வெட்டு ஒன்றில் 10+8 என்று ஆட்சி ஆண்டு எழுதப்பட்டுள்ளது[20].

முதன் முதலில் யாண்டு எதிராமாண்டைப் புகுத்தியவர்கள்

எனவே, முதன் முதல் இம்முறையை இந்தியாவில் புகுத்தியவன் சாதவாகன மன்னன் கௌதமி ஸ்ரீசாதகர்னி என்று அறியலாம். அவர்களைத் தொடர்ந்து சகவமிச மன்னன் ருத்திரதாமன், வாகடக மன்னன் ப்ரவரசேனன் ஆகியோரும் இம்முறையைப் பயன்படுத்தி யிருக்கின்றனர். அதற்குப் பிறகு இம்முறை தமிழ் நாட்டில் பாண்டியர்களால் கையாளப் பட்டிருக்கிறது. பாண்டியர்களின் தொடர்பினுல் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த பிற குல மன்னர்களும் இம்முறையைப் பயன்படுத்தியிருக்கிருர்கள். குறிப்பாகச் சோழ மன்னர்கள் யார் யார் இம்முறையைப் பயன் படுத்தியிருக்கின்றனர்; எந்தப்பகுதியில் இம்முறை அவர்களால் கையாளப் பட்டிருக்கிறது என்பதை ஆராய்வது அவசியமாகிறது.

முதலாம் பராந்தகன்

சோழர்களில் முதன் முதலில் இம்முறையைக் கையாண்டிருப்பவன் முதலாம் பாரந்தகன் ஆவான். இவன் கி.பி. 907 முதல் 945 வரை ஆட்சி புரிந்தவன் தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றுக்குப் பக்கத்தில் உள்ள தில்லைஸ்தானத்து திருநெய்யாடியப்பர் கோயிலின் உண்ணாழியின் தெற்குச் சுவரில் காணப்படும் முதலாம் பராந்தகனின் கல்வெட்டு[22],

'ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு 35 ஆவது எதிரா மாண்டு ....' என்று தொடர்ந்து செல்கிறது. இக்கல்வெட்டு முதலாம் பராந்தகனின் முப்பத்தாறும் ஆட்சி ஆண்டைக் குறிப்பதாக இருக்கிறது.

அரிஞ்சயன்

பராந்தகனின் மைந்தர்களில் ஒருவனான அரிஞ்சயனும் இம்முறையை எடுத்தாண்டிருக்கிறான். தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் உள்ள திருவீழிமிழலை வீழிநாதசுவாமி கோயிலில் சுந்தரகுச்சாம்பாள் சந்நிதியின் தூண் ஒன்றில் காணப்படும் கல்வெட்டு[23],

'கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு உ ஆவதின் எதிரா மாண்டு.........' என்று குறித்துச் செல்கிறது.

இக்கல்வெட்டு விஜயாலயனைச் சார்ந்தது என்று முன்பெல்லாம் கருதப்பட்டது[24]. ஆனால் இப்பொழுது இது அரிஞ்சயனைச் சார்ந்தது என்று கருதப்படுகிறது. அம்மன்னனின் மூன்றும் ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

உத்தம சோழன்

சைவ சமயத்துக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட சைவப் பழங்களான கண்டராதித்த சோழனைத் தந்தையாகவும், செம்பியன் மாதேவியாரைத் தாயாராகவும்

கொண்ட உத்தம சோழனும் கல்வெட்டில் இம்முறையைக் கையாண்டுள்ளான்.

தஞ்சை மாவட்டத்தில் அய்யம்பேட்டைக்கு அருகில் உள்ள புள்ளமங்கை பிர்மபுரீஸ்வரர் ஆலயத்துக் கல்வெட்டு[25] ஒன்றில்,

'கோப்பரகேசரிபன்மற்கி யாண்டு உ ஆவதின் எதிராமாண்டு............' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக் கல்வெட்டின் நடுப்பகுதியில் காணப்படும் கோள் நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் இக்கல்வெட்டு உத்தம சோழரின் காலத்தியதாகத் தெரிகிறது. எனவே, உத்தம சோழரின் மூன்ரும் ஆட்சி ஆண்டில் இது பொறிக்கப்பட்டதாகக் காணப்படுகிறது.

மூன்ரும் இராஜராஜன்

உத்தம சோழனுக்குப் பிறகு ஆண்ட சோழ மன்னர்களில் மூன்ரும் இராஜராஜன் காலத்தில்தான் திரும்பவும் இம்முறையைக் காண முடிகிறது. தஞ்சை மாவட்டம் வேதாரண்யத்தில் உள்ள வேதபுரீஸ்வரர் கோயிலில் காணப்படும் இரு கல்வெட்டுகளில் இம்முறை பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு கல்வெட்டுகளும் மூன்ரும் இராஜராஜன் காலத்தியவை. ஒன்று,

'திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு ஏழாவதின் எதிராமாண்டு.........'[26] என்றும்,

மற்ருென்று,

'திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு இருபத்தொன்பதாவதின் எதிராமாண்டு... ...[27]' என்றும் எழுதப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டம் திருவானைக்காவில் உள்ள ஜம்புகேஸ்வரர் ஆலயத்து மூன்ரும் திருச்சுற்று மதிலின் தெற்குச்

சுவரில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றும் இராஜராஜனின் ஆறு கல்வெட்டுகள்,

'ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜராஜதேவற்கு யாண்டு பதினாறு எதிராமாண்டு......[25]' என்று தெரிவிக்கின்றன.

மூன்றும் இராஜேந்திரன்

மூன்றும் இராஜராஜனை அடுத்து அரசு கட்டிலேறிய மூன்றும் இராஜேந்திரனும் தம் ஆட்சிக் காலத்தில் இம் முறையைப் பயன்படுத்தியிருக்கிறான். திருவரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதர் ஆலயத்துக் கல்வெட்டொன்று[26],

'பரம ஸோமீஸ்வர ப்ரதிகுல கால தண்ட திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு ஏழாவதின் எதிராமாண்டு.........' என்று தொடர்ந்து செல்கிறது. இக்கல்வெட்டு மூன்றும் இராஜேந்திரன் காலத்தியக் கல்வெட்டென்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் அம்மன்னனின் 8-ஆம் ஆட்சி ஆண்டு தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள் கிடைத்துள்ள பகுதி

மேற்கூறப்பெற்ற சோழர் கல்வெட்டுகள் அனைத்தும் தஞ்சை மாவட்டத்திலும் தஞ்சை வட்டத்தை ஒட்டியுள்ள திருச்சி மாவட்டத்திலுமே காணப்படுகின்றன.

அவ்வாறு காணப்படுவதற்குக் காரணம்

இக்கல்வெட்டுகள் சோழர் ஆட்சியில் இரண்டு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் காணப்படுகின்றன. முதலில் பராந்தகன் காலத்தில்ருந்து உத்தம சோழன் காலம் வரையிலும், பின்னர் மூன்றும் இராஜராஜன் காலம் முதல் மூன்றும் இராஜேந்திரன் காலம் வரையிலும் கிடைத்துள்ளன.

சங்க காலப் பாண்டியர்களை அடுத்து ஆட்சி புரிந்த கடுங்கோன் முதலாக உள்ள பாண்டிய மன்னர்கள் கி.பி. 10ஆம்

நூற்றுண்டு வரை ஆட்சி செய்திருக்கின்றனர். குறிப்பாகப் பராந்தகன் காலத்திலும் அரிஞ்சயன், உத்தம சோழன் ஆகியோர் காலத்திலும் பாண்டியர்கள் சோழர்களுக்குப் பெரும் இடையூருக இருந்திருக்கின்றனர்[30]. சில சமயங்களில் பாண்டிய மன்னனுல் சோழன் வீழ்த்தவும் பட்டிருக்கிருன்[31]. அந்த சமயத்தில் பாண்டியர்கள் பயன்படுத்திய ஆண்டு முறையைச் சோழர்களும் பயன்படுத்துவது இன்றியமையாததாக இருந்திருக்கலாம்.

பின்னர் முதலாம் இராஜராஜன் காலத்திலிருந்து மூன்றும் இராஜராஜன் காலம்வரை சோழர்களின் ஆதிக்கம் தமிழகமெங்கும் நீக்கமற நிறைந்திருந்தது. பாண்டியர்கள் நிர்மூலமாக்கப்பட்டு விட்டனர். ஆனுல் மூன்றும் இராஜராஜனின் காலத்தில் திரும்பவும் பாண்டியர்கள் தலையெடுக்க ஆரம்பித்து விட்டனர். 'சோணுடு கொண்டருளிய' முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் தம் காலத்தில் தஞ்சையையும் உறந்தையையும் செந்தழலுக்கு உள்ளாக்கினுன் என்று அவனது கல்வெட்டுகள் கூறும்.

அவனையடுத்து ஆட்சிக்கு வந்த 'எல்லாந்தலையாணுன்' என்ற பட்டம் பூண்டிருந்த சடாவர்மன் சுந்தரபாண்டியனும் பெரும் பேரரசனுக விளங்கியிருக்கிருன்.

இவர்கள் இருவரின் காலத்திலும் சோழநாட்டில் ஆட்சி செய்தவர்கள் மூன்றும் இராஜராஜனும் மூன்றும் இராஜேந்திரனும் ஆவர்.

எனவே, அவர்கள் தங்கள் கல்வெட்டுகளில் பாண்டியர்கள் பயன்படுத்திய ஆண்டு முறையைக் கையாள வேண்டியது இன்றியமையாததாக அமைந்திருக்கலாம்.

1. இம்முறையை வீர நிர்வாண சம்வத் என்று சமண சமய நூல்களான விசாரஸ்ரேணியும் மஹாவீரசரியமும் தெரிவிக்கின்றன.
2. The Chinese Pilgrim Fahien who came to India in 399 A.D. mentions 1497 years as having passed after the Buddha's death.
3. The Girnar version of Rock Edict III; The Rampurva version of the Fifth Pillar Edict.
4. கி.மு. 57–ல் ஆரம்பமாகியது.
5. கி.பி. 319–ல் ஆரம்பமாகியது.
6. கி.பி. 248–49ல் ஆரம்பமாகியது.
7. கி.மு. 3101–ல் ஆரம்பமாகியது.
8. கி.பி. 78–ல் ஆரம்பமாகியது.
9. கி.பி. 824–25–ல் ஆரம்பமாகியது.
10. கி.பி. 14–15–ஆம் நூற்றுண்டில் ஆரம்பமாகியது.
11. T.A.S. Vol. VI, No. 38
12. சின்னமனூர் பெரிய செப்பேடு, வரி 146
13. S.I.I. Vol. XIX, No. 136
14. Ibid. Vol. III, part IV, No. 203
15. Epi. Indi. Vol. XX, No 3. P, 16
16. Cochin plates, No. II of Epi. Indi. Vol, III.
17. S. I. I. Vol. IV, No. 287
18. A. R. E. No. 32 of 1937–38
19. Bulletin of the Institute of Traditional culture, Madras, Part I. Section II, P. 61,
20. Bulletin of the Institute of Traditional culture Madras, Part I, Section II, p. 65

21. Ibid. p. 67
22. S. I. I. Vol. V. No. 600
23. S. I. I. Vol. XIX, No 46.
24. M. E. R. for 1909, part II, Para 35
25. S. I. I. Vol. XIX. No. 63
26. Ibid. Vol. IV. No. 542
27. S. I. I. Vol. IV, No. 542
28. A. R. E. Nos. 32–37 of 1937–38
29. S. I. I. Vol. IV, No. 512
30. பராந்தகனுக்குப் பெரும் இடையூருக இருந்த பாண்டிய மன்னன் வரகுணன் மீது போர் தொடுத்து அவனை வெற்றி கொண்டபோது வரகுணன் இலங்கைக்குத் தனது முடியையும் சின்னங்களையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டதைக் குறிப்பிடலாம்.
31. சோழன் தலைகொண்ட வீரபாண்டியனுல் ஆதித்த கரிகாலன் தோற்கடிக்கப்பட்டதை எடுத்துக் காட்டலாம்.

கல்வெட்டுக் காட்டிடும் வீரம்

தமிழ் நாட்டு மக்களின் வாழ்வு பழங்காலத்தில் அகம் புறம் என்ற கூறுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது என்பதை இலக்கியங்கள் மூலமாக உணர முடிகிறது. அக வாழ்விலே திளைத்து இல்லறத்தைப் போற்றியவர்கள் புற வாழ்விலும் நாட்டம் செலுத்தி வெற்றிகளை விளைவித்திருக்கிறார்கள்.

வெற்றியென்பது அடுகளத்தில் கடுகிப் பாயும் வீர மறவனை எதிர் நின்று தாக்கி வீழ்த்துவது மட்டுமல்ல; அந்தக் களத்திலே பாய்ந்து வரும் மதயானையையும் தாக்க வேண்டும். காடுகளிலே உலவுகின்ற விலங்குகளிலே துன்பம் விளைவிக்கின்ற கொடிய விலங்குகளான அரிமா, புலி ஆகியவைகளோடு போரிட்டுச் சாகடிப்பதிலும் வெற்றி தோய்ந்திருக்கிறது. இம்மாதிரியான சில நிகழ்ச்சிகளையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மோத்தக்கல் நடுகற்கள்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தானிப்பாடி வட்டாரத்தில் தானிப்பாடியிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் மோத்தக்கல் என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. இவ்வூரைக் கடந்து ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்றால் தருமபுரி

மாவட்டத்தின் எல்லை வந்து விடுகிறது. இந்த ஊரைச் சுற்றிலும் பெருங்குன்றுகள் காணப்படுகின்றன.

ஊரின் தென் கிழக்கே ஒரு மூங்கில் காட்டில் இரு நடுகற்கள் காணப்படுகின்றன. இரண்டும் பக்கத்துப் பக்கத்தில் அமைந்துள்ளன. இரண்டிலும் வட்டெழுத்தில் கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன. இக் கல்வெட்டுகள் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தைச் சேர்ந்தவையாகும். அதாவது இன்றைக்கு 1,300 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் எழுதப் பெற்றவையாகும்.

மகேந்திரவர்மனின் முப்பத்திரண்டாம் ஆட்சி ஆண்டில் சிற்றரசன் ஒருவன் மற்றொரு சிற்றரசனோடு போர் தொடுக்க விரும்புகிறான். அதனைத் தெரிவிக்கும் அறிகுறியாக மாற்றரசனின் ஆநிரைகளைக் கவர்ந்து வரும்படி ஆணை பிறப்பிக்கிறான். ஆணையை ஏற்றுப் போர்வீரர்கள் சென்று ஆநிரைகளைக் கவர்கின்றனர். மாற்றரசனின் போர் வீரர்கள் இவர்கள் கவரா வண்ணம் காக்கின்றனர். கடும் போர் நிகழ்கிறது. வீரனொருவன் களச் சாவடைகிறான். அவனுக்கு வீரக்கல் நடப்படுகிறது. அவ்வீரன் அக்கந்தை கோடன் என்றும் அவனது மன்னன் பொன்மோதனார் என்றும் ஒரு நடுகல் உணர்த்துகிறது.

புலியோடு போர்

இரண்டாம் நடுகல் கூறும் செய்திதான் இதயத்தைத் தொடுகிறது. இங்குப் போர் நிகழவில்லை. புலியொன்று ஊர் நடுவே வருகிறது. வீரர்கள் பலர் ஆயுதம் ஏந்துகின்றனர் புறப்பட்டுவிட்ட வரிப் புலியை வீழ்த்த. அவர்களிலே ஒருவன் தலைமையேற்கின்றான். புலியைக் கத்தியால் குத்தித் தரையிலே சாய்க்கின்றான். தானும் தரையிலே சாய்கிறான். அவனையும் ஊரார் மறந்தாரில்லை. நடுகல் எடுத்தனர் அவனது நினைவாக. அவன் பெயர் வின்றன் வடுகன். அவனது மன்னனும் பொன் மோதனார்தான். இந்த நடுகல்லில் காணப்படும் செய்தி !

"கோவிசைய மயேந்திர பருமற்கு முப்பத்திரண்டாவது பொன்மோதனுர் சேவகன் வின்றன் வடுகன் புலிகுத்திப்பட்டான் கல்."

கீழ்முட்டுகூர் நடுகல்

வட ஆர்க்காடு மாவட்டம் கீழ்முட்டுகூரில் கிடைத்த மற்ருெரு நடுகல் சோழ மன்னன் பராந்தகனின் காலத்தில் நிகழ்ந்த ஒரு வீரச் செயலே விவரிக்கிறது. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கீழ்முட்டு கூர் என்று வழங்கும் இவ்வூர், முட்டுக்கூர் என்று அழைக்கப் பெற்றிருக்கிறது. இந்த ஊரைச் சார்ந்த குமாரந்தைப் புழவன் என்பான் போருக்குப் புறப்படுகிருன்.

போர் வீரர்களுக்குப் பதிலாகப் புலி ஒன்று தென்படுகிறது. போருக்கு புறப்பட்டவன் மறவனல்லவா! அதனுல் வரிப்புலியை வீழ்த்துவதும் தனக்குப் பெருமைதான் என்று கருதுகிருன். கையிலோ சிறு குறுவாளேத் தவிர வேறெதுவும் வைத்திருக்கவில்லே அதற்காகப் பின் வாங்கிடவும் அவனது மனம் ஒப்பவில்லே. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமல்லவா? குறுவாளே நிமிர்த்திப் பிடிக்கிருன். புலி மீது பாய்ந்து தாவுகிருன். புலியின் மீது அமர்ந்து வாயைப் பிடித்துக் கிழிக்க முற்படுகிருன். புலியும் விடவில்லே. அவனேப் புரட்டி எடுக்கிறது. தனது நகங்களிளுலும், பற்களாலும் மறவனின் மார்பிலும், முகத்திலும் விழுப்புண்களே ஏற்படுத்துகிறது. குருதி வடிகிறது குமாரந்தைக்கு. அப்பொழுதுதான் கோபாவேசம் ஏற்படுகிறது. தனது முழு வலிமையையும் பயன்படுத்திப் புலியைச் சாய்க்கிருன். புலி மடிகிறது. வெற்றிக் களிப்பிலே வீரன் உழலுகிருன். உடல் இரத்த வெள்ளத்தில் மிதக்கிறது. உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தடுமாறுகின்றன. அவனது நிலேயும் தடுமாறுகிறது. கீழே வீழ்கின்ருன் வெற்றிப் பெருமிதத்தோடு. அவனுக்கும் கல் நடப்படுகிறது. இந்நிகழ்ச்சி தில்லேக் கூத்தபிரானின் திருச்சபைக்குப் பொற் கூரை வேய்ந்த சோழ மன்னன் முதலாம்

பராந்தகனின் காலத்தில் நடைபெற்றுள்ளது. நாட்டப் பட்டிருக்கும் நடு கல்லில் காணப்படுபவை:

''ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பந்மற்கு யாண்டு முப்பத்து இரண்டாவது வடகரை முக்கூட்டூர் குமாரந்தை புழவன் புலி குத்திந கன்னூடு''.

நவலை நடுகல்

தகடூர் மாவட்டம், நவலை என்ற ஊரில் உள்ள கிளி யேரியின் ஓரத்தில் காணப் பெறும் நடுகல் மற்றொரு வீரச் செயலைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இங்கு வீரன் புலியோடு பொருதவில்லை. குதிரையோடு மோதுகிறான். குதிரையைக் குத்திச் சாகடித்துவிட்டுத் தானும் வீர மரணம் எய்துகிறான்.

சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி கொங்குநாடு என வழங்கப்பெற்றது. அப்பகுதியைக் கங்க அரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் பல்லவ மன்னர்களிடத்துத் திறை செலுத்தி வாழ்ந்து வந்த னர். ஸ்ரீ புருஷன், சிவமாறன் போன்ற அரசர்கள், அவர் களில் மிகவும் புகழ்பெற்றவர்கள். இம்மன்னர்களுள் ஒருவர் கங்கநாடு, கோயிலூர் நாடு, வேளாள நாடு; கோவூர்நாடு, எயில்நாடு, புறமலைநாடு, அதியனூர்நாடு ஆகிய பகுதிகளை ஆண்டு வருகையில், இம்மன்னனின் வீரன் பூங்குடி வடுகன் வடவல்லூர் என்ற ஊரைத் தாக்குவதற்குப் புரவி மீதேறி வருகிறான். அவனை எதிர்த்திட வடவல்லூரைச் சார்ந்த வீரனும் குதிரை மீது வருகிறான். இருவருக்கும் போர் நிகழ் கிறது. எதிரி மடிகிறான் முதலில். பின்னர் குதிரை அவனை எதிர்த்துப் போராடுகிறது! அதையும் குத்தி வீழ்த்துகிறான். தானும் களச்சாவை அணைக்கிறான்.

அந்த வீரனின் ஆண்மையைப் பாராட்டிக் கல் ஒன்று நடப்படுகிறது. அதில் குறிப்பிட்டிருப்பவை:

''ஸ்ரீ......பர்க்கு யாண்டு பதினேழாவது கங்கநாடும், கோயிலூர் நாடும், வேளாள நாடும், கோவூர் நாடும், எயில்

நாடும், புறமலை நாடும், அதியனூர் நாடும் ஆளாநிற்க இத் தரை யான்று இக்குதிரையோடு வந்து வடவல்லூர் எறிந்த ஞான்று குதிரைகுத்தி பட்டான் பூங்குடி வடுகன்''.

ரெட்டியூர்க் கல்வெட்டு

தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம் ரெட்டியூர் என்னும் ஊரிலிருந்து ஒரு கல்வெட்டு அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப் பட்டது[1]. அது கங்கமன்னன் அத்திமல்லன் காலத்தது. அதில் வீரனொருவன் பன்றியோடு பொருது உயிரிழந்ததைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வீரனது பெயர் அரைய குட்டி என்பதாகும்.

வீரச் செயல் புரிந்து மரணம் எய்திய வீரர்களின் குடும் பங்களுக்கு, இன்று அரசு உதவி செய்வது போன்று அன்றும் அரசர்கள் நிலம் போன்றவற்றைப் பரிசாக அளித்து வந்திருக் கின்றனர். அவ்வாறு அளிக்கப்பெற்ற நிலம் ''உதிரப் பட்டி'' என்று கல்வெட்டுகளிலே காணப்படுகிறது.

---

1. மா. சந்திரமூர்த்தி, மதுரைப் பதிவு அலுவலர், கல்வெட்டாய்வு செய்கையில் கண்டுபிடித்தார்.

நுளம்பர் கால நடுகற்கள்

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில், அரூரிலிருந்து தீர்த்த மலைக்குச் செல்லும் சாலையில், செல்லம் பட்டி என்று ஒரு சிறு கிராமம் உள்ளது.

அவ்வூரின் புறத்தே ஆற்றங்கரையில் வேடியப்பன் கோயில் ஒன்று காணப்படுகிறது. அங்கு இரண்டு நடுகற்கள் உள்ளன.[1] இரண்டு நடுகற்களும் தமிழ் எழுத்தில் எழுதப் பட்டிருக்கின்றன. இவை தருமபுரி நடுகற்கள் என்ற நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.[2]

ஒரு கல்வெட்டு சகரயாண்டு 820 (கி. பி. 898) லும் மற்றொரு கல்வெட்டு சகர யாண்டு 822 (கி. பி. 900) லும் எழுதப்பட்டிருக்கின்றன.

சகர யாண்டு 820-இல் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு "ஐயப்பதேவன் விராச்சியமாள" என்று தொடங்குவதால் ஐயப்பதேவனின் ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்ட தென் பதைத் தெளிவாகச் சுட்டுகிறது.

தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் ரெட்டியூர்,[3] தருமபுரி வட்டம் பலிஞ்சரஹள்ளி,[4] அரூர் வட்டம் பெரிய மன்னி மடுவு[5] போன்ற இடங்களிலிருந்தும் ஐயப்பதேவன் காலத்திய நடுகற்கள் தமிழக அரசு தொல்பொருள்

ஆய்வுத்துறையால் கண்டு பிடிக்கப்பட்டு பதிப்பிக்கப் பட்டுள்ளன.

அய்யப்பதேவன் யார்?

இந்த மன்னன் அய்யப்பதேவன் யாராக இருக்கக்கூடும்? நுளம்பர் குலத்தில் அய்யப்பதேவன் என்ற மன்னன் ஒருவன் இருந்தான் என்பது நுளம்பர் வரலாற்றிலிருந்து தெரியவருகிறது.

நுளம்ப மன்னர்கள் முறையே:-

த்ரிணயம பல்லவன்
|
மங்கள நொளம்பாதிராஜன்
|
சிம்ஹபோதன்
|
சாரு பொன்னேரன்
|
பொழல் சோர நொளம்பன்
|
மஹேந்திரன்
|
அய்யப்பதேவ நன்னிகன்
|
அண்ணிகன் — திலிப்பரசர்

என்று ஹேமாவதி கல்வெட்டு கூறுகிறது.[6] கி. பி. 889-ல் பொறிக்கப்பட்டுள்ள தருமபுரிக் கல்வெட்டு முறையே:-

பல்லவாதி ராஜன்
|
நொளம்பாதி ராஜன்
|
மஹேந்திர நொளம்பன்
|
அய்யப்பதேவ நன்னிகன்

என்று கூறுகிறது.[7] இக்கல்வெட்டு மகேந்திர நொளம்பனின் காலத்தியது. கி. பி. 977ஐச் சேர்ந்த கலுகோட் கல்வெட்டு மஹேந்திரன், அவர் மகன் அய்யப்பன், அவர் மகன் அண்ணிகன், அவர் மகன் இருளன் மற்றும் திலிப்பரசர் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.[8]

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்துக் கல்வெட்டுகளிலும் அய்யப்பன் மஹேந்திரனின் மகனுகக் குறிக்கப் பட்டுள் ளான். கி. பி. 883-இல் மஹேந்திர நொளம்பன் மிகுந்த வலிமை வாய்ந்த மன்னனுகத் திகழ்ந்திருக்கிருன் என்பது 'திரிபுவன மல்லதிரன்' என்ற அவனது விருதுப் பெயரால் உணரமுடிகிறது.[9] கி. பி. 891-இல் மஹேந்திரன், ராச்சய கங்கனை என்பானைப் போரில் வென்றிருக்கிருன் என்பது இக் கலி என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டால்[10] புல னுவதிலிருந்து மஹேந்திரன் கி. பி. 891 வரை ஆட்சி செய் திருக்கிருன் என்பது தேற்றம்.

ஆகவே கி. பி. 891-க்குப் பிறகுதான் அய்யப்பதேவன் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். அய்யப்பதேவனின் செல்லம் பட்டிக் கல்வெட்டு கி. பி. 900-இல் பொறிக்கப்பட்டுள்ளது மேலே கூறிய கருத்துக்கு மிகவும் பொருத்தமாகக் காணப் படுகிறது. எனவே இந்த அய்யப்பதேவன் நுளம்ப மன்னன் தான் என்பதில் ஐயமில்லை. இவன் ஏறக்குறைய கி பி. 922 வரையில் ஆண்டிருக்கிருன்.[11]

செல்லம்பட்டிக் கல்வெட்டு I

ஸ்வஸ்திஸ்ரீ சகரயாண் டெண்ணூற் றிருபது
கங்காணுமன் சாய[டு] மாளத் தகடூர் மாவலிவாண
ராடரடியான் கடல் மாணிக்கன்[னு]னை குன்றினை ஆ[ள]வன்
மாமன் கோவூர் நாட் டைந்நூறுமுடைய மழற்பை
யன் னடியான் சூழி புளியன் புலி எறிந்து பட்டான் மதியுளி . . .

செல்லம்பட்டிக் கல்வெட்டு II

ஸ்வஸ்திஸ்ரீ சகரயா[ண்] டெண்ணூற்றிருபத் திரண்டாவது ஆதித்தன்

மகரத்திலிற்க ஐயப்பதேவன் னிராச்சியம் மாளக் கங்காணுமன்

மகன் பிருதிபதியும் நுளம்பன் மகன் சிவமாரைய்யனும் மற

வ குன்றில் லெறிந்த ஞான்று தகடூருடைய மாவலி வாணராயரடியான்

கூடல் மாணிக்கன் சிவமாரைய்யனுக்காய் எறிந்து பட்டா ரவர்

பெரியம் மகன் மாதேவன் னிக்கல்லு நடுவித்தான் ஸ்ரீ மதியுளி

ரெட்டியூர்க் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ அய்யப்பதேவன்
நாடாள வேணுடைய இருசப்பை
யனுர் அடியான் அரைய குட்டி பன்றி
குத்தி பட்டான்

பெரிய மன்னிமடுவுக் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ ஸிரி
ஐயப்ப
தேவன் புற
மலை நாடு
ப்ரரிசியம்
செய்ய . ம
யனுகர்கு
தின்னுடி இரு

கலம் பகயா
வர் மகன்
பூமயன் தொ
றுன் மீட்டுப் பட்டா.

பலிஞ்சரஹள்ளி கல்வெட்டு

......யப்பதேவன் இ
......[ஆ]ள்கின்ற காலத்
......கலியமன் மகன் [நா]கன் குத்......

அய்யப்பன் ஆட்சிப் பகுதி

பெரியமன்னிமடுவிலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டில் அய்யப்பதேவன் புறமலை நாட்டுப் பகுதியை ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. புறமலை நாட்டுப் பகுதி தருமபுரி பகுதியை அடுத்துள்ள அரூர் வட்டப் பகுதியாகும்.

கங்கரோடு போர்

செல்லம்பட்டிக் கல்வெட்டில் நுளம்பன் மகன் சிவ மாரையனுக்கும் கங்காணுமன் மகன் பிருதிபதிக்கும் மறவ குன்று என்னுமிடத்தில் போர் நிகழ்ந்ததாகக் குறிக்கப் படுகிறது. இங்கு குறிக்கப்பெறும் நுளம்பன் என்பவன் அய்யப்பதேவனுகவே இருக்கக்கூடும். இவன் மகன் சிவ மாரையன் என்று குறிக்கப்படுகிருன். அய்யப்பனுக்கு அண்ணிகன், திலிப்பரசர் என்று இரு குமாரர்கள் இருந்தனர் என்பது ஹேமாவதி கல்வெட்டால் தெரியவருகிறது.

ஆகவே சிவமாரையன் என்னும் பெயர் அண்ணிகன், திலிப்பரசர் ஆகியவர்களில் யாருக்கேனும் ஒருவர்க்கு மாற்றுப் பெயராக இருக்கலாம். அல்லது சிவமாரையன் என்று ஒரு மகன் அய்யப்பதேவனுக்கு இருந்திருக்கலாம்.

இச்சிவமாரையனுக்குத் துணையாகத் தகடூரை ஆண்டு வந்த மாவலிவாணராயன் போரில் உதவியிருக்கிருன்.

இம்மாவலிவாணராயன் பாண மன்னன் இரண்டாம் விஜயாதித்யனுவான். இரண்டாம் விஜயாதித்யன் அய்யப்பதேவனின் தந்தையான மஹேந்திரனுல் வெல்லப்பட்டு மஹேந்திரனுக்கு அடங்கியவனுக இருந்திருக்கிருன்.[12] ஆகவே அவன் அய்யப்பதேவனுக்கு உறுதுணையாக இருந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

ஆனுல் தகடூர் நடுகல்லில்,[13] நுளம்பன் மாவலிவாணராயனை வஞ்சித்து நாடு கொண்டான் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி அய்யப்பதேவன் ஆட்சியின் பிற்காலத்திலோ அல்லது இவன் தந்தையான மகேந்திரனின் ஆட்சிக் காலத்திலோ நடந்ததாகக் கருதலாம்.

பிருதிபதி என்பவன் கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதி ஆவான். இவன் கி. பி. 940 [14]வரையில் ஆண்டிருப்பதால் கி. பி. 900–ல் நிகழ்ந்த போரில் குறிக்கப்பெறும் பிருதிவிபதி இவனுகத்தான் இருக்கவேண்டும்.

அய்யப்பதேவனின் மக்கள்

முன்னரே குறிப்பிட்டது போன்று அய்யப்பதேவனுக்கு அண்ணிக நொளம்பன், இரிவ நொளம்பன் ஆகிய மக்கள் இருந்திருக்கின்றனர். அண்ணிகன் நொளம்பன் கி பி. 920 முதல் 940 வரை ஆண்டிருக்கிருன்.[15] தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் முத்தானூரிலிருந்து ஒரு கல்வெட்டும்;[16] அதே மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம் இளவம்பாடியிலிருந்து ஒரு கல்வெட்டும்[17] அண்ணயன் என்ற மன்னனைக் குறிக்கின்றன.

முத்தானூர்க் கல்வெட்டில் "அண்ணயன் வீர நுளம்பனுக் காண்டி ரண்டும்'' சகர யாண்டு 847ம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில்ருந்து அண்ணயன் 933-இல் ஆட்சிக்கு வந்திருக்கிருன் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்தக் காலம் அண்ணிக நொளம்பன் காலத்தோடு ஒத்து வருகிறது. ஆகவே இந்த அண்ணயன், அண்ணிக

நொளம்பன்தான் என்பதில் ஐயமில்லே. முத்தாஞர்க் கல் வெட்டிலிருந்து அய்யப்பதேவன் கி பி 932 வரையில் ஆண் டிருக்கிருன் என்பதை மறைமுகமாக உணர முடிகிறது.

முத்தாஞூர்க் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சகரையாண்டெண்
ணூற்று நாற்பத்தேழாவது அண்
ணயன் வீர நுளம்பனுக் காண்டி
ரண்டாவது வல்லவரையாந் நாட்டார்
தொறுக் கொ
ள்ள பலா
ன்னேயூர்
காமுண்டர்
மணியர் ம
ணியமஞ
ர் தொறு மீ
ட்டுப்
பட்டார்

இளவம்பாடிக் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ இரண்டா
வது அண்ணயஞர்
ஆளாநில்க கோலூர் நாட்டு
சிறு புலூர் தாழிபுகஞர் ம
கன் மோடன் ஊர் புழிவல ப
ட்டான்

1. இந்நூல் ஆசிரியரும் தஞ்சைப் பதிவு அலுவலர், திரு. கு. தாமோதரனும் படியெடுத்து வந்தனர்.
2. தருமபுரி நடுகற்கள், 1973/14, 1973/15, பொறுப்பாசிரியர் டாக்டர். இரா. நாகசாமி.
3. Ibid 1972/26. திரு. மா. சந்திரமூர்த்தி, மதுரைப் பதிவு அலுவலர், கண்டுபிடித்தார்.
4. Ibid 1973/25
5. Ibid 1974/72
6. Epigraphia Carnatica Vol. XII, C. 24, 28, 35, 36.
7. Nolambas, M. D. Sampath, Prof. K.A. Nilakanta Sastri Felicitation Volume, Page 166.
8. MAR 1924, Para. 4.
9. Nolambas, M. D. Sampath. Prof. K.A. Nilakanta Sastri Felicitation Volume. p. 171.
10. Epigraphia Carnatica Vol. VI, p. 49.
11. தருமபுரி நடுகற்கள், 1974/75
12. Epigraphia Carnatica Vol. X, Sp. 6 and 5.
13. S.I.I. Vol. VII, No. 581.
14. Colas, K. A. Nilakanta Sastri, p. 128.
15. Epigraphia Carnatica. Vol. X.
16. தருமபுரி நடுகற்கள் No. 1974/75
17. செங்கம் நடுகற்கள் 1971/80, டாக்டர், இரா. நாகசாமி

சின்னக்குத்தூர் நடுகற்கள்

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் சின்னக் குத்தூர் என்ற சிற்றூரிலிருந்து தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை மூன்று நடுகற்களைக் கண்டுபிடித் துள்ளது[1]. இம்மூன்று கல்வெட்டுகளில் இரண்டு கல்வெட்டுகள் முழுமையாக உள்ளன. ஒன்று சிதைந்து காணப்படுகிறது.

இம்மூன்றும் 'தருமபுரி கல்வெட்டுகள்' என்ற நூலில் 1973/142, 143, 144 என்ற எண்களாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளன[2] இக்கல்வெட்டுகள், எந்த மன்னனின் காலத்தில் பொறிக்கப்பட்டவை என்பதையும், எந்தக் காலத்தைச் சார்ந்தவை என்பதையும் ஆராய்வது ஏற்புடைத்தாகும்.

கல்வெட்டு-1. *(1973-142)*

1. திரிபுவனமல்ல பூராதிராயன் அத்திம
2. ல்லன் முதலிகளில் தாமந்த தே[த]
3. வற்கடியார் மகன் மாராழ்வ
4. ான் நாரசிங்க தேவநு[க்]
5. கு படைத்துணை போய் பட்டான்

கல்வெட்டு–2. (1973-143)

1. முரசர் காமுண்ட...
2. செல்வநாயகன் [அ]
3. [சு]த்தமல்லன் பட்ட
4. ப் பூசலில் பட்டான்

கல்வெட்டு-3 (1973-144)

1. ஸ்வஸ்திஸ்ரீ பூரா
2; த்தாழ்வார் செலவாண்டை
3. மேலே எடுத்து பொத்தாம
4. ரை திறைலே விட்டு பூசல் (செ)
5. யைசிலே சோமையர் நாய
6. க மகன் வடிவமைய நாயக(ன்)
7. தம்பியும் மகநும் பட்டார்

மேலே கொடுக்கப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுகளில் ஒரு கல்வெட்டில் மட்டும் மன்னனின் பெயர் அத்திமல்லன் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வத்திமல்லன் யாராக இருக்கக்கூடும்.

அத்திமல்லன் யார்?

கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதிக்கு ஹஸ்தி மல்லன் என்று ஒரு பட்டம் இருந்திருக்கிறது.[3] அவன் முதல் பராந்தக சோழனின் சிற்றரசர்களில் ஒருவனாக இருந்தவன். பாணர்களைப் பராந்தகன் வெல்லுவதற்கு அவன் உறுதுணை புரிந்திருக்கிறான். ஆதலால் பராந்தகன் ஹஸ்திமல்லனுக்குப் 'பாணாதிராஜன்' என்ற பட்டத்தை அளித்திருக்கிறான்[4] ஆகவே இந்த ஹஸ்திமல்லன்தான் இக்கல்வெட்டில் காணப் பெறும் அத்திமல்லனாக இருத்தல் வேண்டும்.

அத்தோடு இக்கல்வெட்டில் காணப்பெறும் எழுத்தமைதியும் இதற்கு உறுதுணை புரிவதாக அமைந்துள்ளது. கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டும், பராந்தகனின் கீழ் அடங்கிய சிற்றரசன் என்பதாலும் கி. பி, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இக்கல்வெட்டைக் கூறலாம்.

தனி ஆட்சி

கல்வெட்டு 1-இல் 'திரிபுவனமல்லபூராதிராயன் அத்திமல்லன் என்று இம்மன்னன் தன்னைப் பாராட்டிக் கூறிக் கொள்வதால் இவன் ஒரு சில ஆண்டுகளேனும் தனித்த ஆட்சி புரிந்திருக்கவேண்டும் என்று நம்பலாம்.

பூராத்தாழ்வார்

கல்வெட்டு 3–லிலுள்ள பூராத்தாழ்வார், கல்வெட்டு 1-ல் குறிக்கப்பட்டுள்ள பூராதிராயனையே குறிப்பதாக இருத்தல் கூடும். அவ்வாறெனில் அதுவும் அத்திமல்லனையே குறிப்பதாகும். ஆகவே கல்வெட்டு-3ம் அத்திமல்லன் காலத்தில் பொறிக்கப்பட்டது என்று கொள்ளலாம்.

கல்வெட்டு-2ன் எழுத்தமைதியும் கல்வெட்டு 1,3 ஆகியவற்றின் எழுத்தமைதியும் ஒன்றாகக் காணப்படுவதால் கல்வெட்டு-2ம் அத்திமல்லன் காலத்தைச் சேர்ந்ததாக இருத்தல் கூடும்.

---

1. திரு. ச. ஹரிஹரன், திருநெல்வேலிப் பதிவு அலுவலர் கண்டுபிடித்தார்.
2. தர்மபுரி நடுகற்கள், பொறுப்பாசிரியர் டாக்டர், இரா. நாகசாமி.
3. A. R. E. 1896, Part II, para 8
4. Colas, K. A. Nilakanta Sastri, P. 126. Ed 1955.

இராசராசனைப் பற்றிய வரலாற்றுக் கருவூலங்கள்

பேரரசன் இராசராசனைப் பற்றிய வரலாற்றுக் கருவூலங்களாகத் திகழ்வன, இவன் காலத்தியக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும், இவன் பின்னோர் காலத்திய செப்பேடுகளும், இவனால் வெளியிடப் பெற்ற காசுகளும், இவன் காலத்திய இலக்கியங்கள் சிலவும் ஆகும்.

கல்வெட்டுகள்

இந்தியாவில் 1965–ம் ஆண்டு வரை மத்திய அரசு கல்வெட்டுப் பிரிவினரால் படியெடுக்கப்பட்ட மொத்த கல்வெட்டுகள் 37066. அவற்றில் தமிழ் நாட்டிலிருந்து மட்டும் படியெடுத்த கல்வெட்டுகள் 21500. மைசூர், கேரளம், ஆந்திரம் போன்ற பிற மாநிலங்களிலிருந்து படியெடுக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள் 4000. எனவே மொத்தத் தமிழ்க் கல்வெட்டுகள் 25500 ஆகும். இவைகளில் இதுவரையில் அச்சானவை 8000. அச்சான 8000 கல்வெட்டில் இராஜராஜன் 'காலத்தியது மட்டும் 350 என்றால் மொத்தமுள்ள 25500 தமிழ் கல்வெட்டுகளில் கிட்டத்தட்ட 1050 கல்வெட்டுகள் இராசராசனுடையதாக இருக்கலாம். சிறிது குறைத்துப் பார்த்தாலும் இப்பெருமன்னன் கல்வெட்டுகள் 1000த்துக்கு மேலாகக் கிடைத்திருக்கக்கூடும்,

இவன் காலத்தியக் கல்வெட்டுகள் அண்டைநாடான இலங்கைத் தீவிலும் கிடைத்து இருக்கின்றன.

இராசராசனின் கல்வெட்டுகள் அவனது இரண்டாம் ஆட்சி ஆண்டு முதல் 29-ஆம் ஆட்சி ஆண்டு வரை எல்லா ஆண்டிலும் பொறிக்கப் பெற்று கிடைத்திருக்கின்றன. அவனது 30-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு தான் கிடைக்கவில்லை. அவனது 31-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு கன்னியாகுமரியிலிருந்து கிடைத்துள்ளது. அது ‘பெரும்புகழ் கோவி ராஜகேசரி’ என்று ஆரம்பமாகிறது. அவனது இறுதிக் காலத்தில் அவன் பெரும்புகழ் எய்திவிட்டான் என்பதை இது காட்டுகிறது.

இராசராசனுடைய கல்வெட்டுகள் பெரும்பாலும் அழகு தமிழில் எழுதப்பட்டுள்ளன. தஞ்சைப் பெருவுடையார் கோவில் கல்வெட்டுகளைக் காணின் கண்ணில் ஒத்திக் கொள்ளலாம் போன்று தோன்றும். அந்த அளவுக்கு அழகாகவும், தெளிவாகவும் காணப்படும். எல்லா வகையான செய்தியும் தரப்பட்டிருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இராசராசனது கல்வெட்டுகள் சில வட்டெழுத்தில் காணப்படுகின்றன. இவனது கல்வெட்டுகளுள் சிலவற்றின் ஆரம்பத்திலும், கல்வெட்டுகளில் வடமொழியை எழுதப்பட வேண்டிய இடத்திலும் கிரந்த எழுத்தைக் காண்கிறோம்.

மெய்க்கீர்த்தி

இராசராசனின் முன்னோர்கள் அனைவரும் தங்களது கல்வெட்டுகளில் தங்கள் பெயர்களைக் கூட குறிப்பிடாமல் ‘கோஇராசகேசரி’ என்றும் ‘கோப்பரகேசரி’ என்றும் அழைத்து வந்தனர். சில கல்வெட்டுகளில் இராஜகேசரியாக இருந்தால் இராஜகேசரியையோ, பரகேசரியாக இருந்தால் பரகேசரியையோ பெயர்களுக்கு முன்னால் இட்டு வழங்கி வந்திருக்கின்றனர். ஆனால் இராசராசன் பெரும்பாலான கல்வெட்டுகளில் தனது பெயரான ‘ராசராச’ என்பதை முன்

எழுதிப் பின்னர்தான் ராஜகேசரி என்று எழுதியுள்ளான் அதன் காரணமாகத்தான் அவனுடைய கல்வெட்டுகள் 'கோராஜராஜ ராஜகேசரிவர்மர்க்கு' என்று ஆரம்ப மாகின்றன. சமஸ்கிருதப் பகுதியிலும் 'ராஜ ராஜஸ்ய ராஜ கேசரிவர்மணஹ' என்றே குறிக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல் தம் முன்னோர்கள் பல நாடுகளோடு போர் தொடுத்துப் பல வெற்றிகளைக் குவித்திருந்தாலும் ஏதோ ஒருசில போரில் கிடைத்த வெற்றியையே பெரும் வெற்றி யாகக் கொண்டு அதைத் தங்கள் மெய்க்கீர்த்திகளாக வாழ்நாள்வரை கொண்டிருந்தனர். உதாரணம்: 'தஞ்சை கொண்ட கோப்பரகேசரி', 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி', ஆனால் இராசராசன் தான் ஒவ்வொரு ஆண்டும் எந்தெந்த நாட்டோடு போர் தொடுத்து (அது சிறிய நாடாயினும் பெரிய நாடாயினும்) அங்கெல்லாம் வெற்றி பெற்றானோ அவை அனைத்தையும் ஆண்டுக்கு ஆண்டு தனது கல்வெட்டுகளில் தனது மெய்க்கீர்த்திப் பகுதியில் சேர்த்து வந்திருக்கிறான். இவன் இவ்வாறு தன் மெய்க் கீர்த்திப் பகுதியை எழுதியதற்குக்கூட வேள்விக்குடிச் செப் பேடுபோன்ற பாண்டியர் செப்பேடுகள் தான் காரணமாக அமைந்திருக்க வேண்டும். பல்லவர் செப்பேடுகளிலும், இவனது முன்னோர்களின் செப்பேடுகளிலும் சமஸ்கிருதப் பகுதியில் ஒவ்வொரு மன்னனுடைய வெற்றிச் சிறப்புகளையும் காணமுடிகிறது. தமிழ்ப் பகுதியில் காண முடியவில்லை.

பெருவுடையார் கோவில்

இராசராசனின் வரலாற்றை அறிந்துகொள்வதற்குத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகளைப் படித் தாலேபோதுமானது. அவ்வளவு செய்திகளையும் தனது நேரடி மேற்பார்வையில் அக்கோயிலின் விமானச் சுவர்களில் பொறிக்கச் செய்துள்ளான். பெரியோர்களிடத்து அவன் காட்டிய பணிவு, அக்கோயிலுக்கு அவனால் அளிக்கப்பெற்ற திருமெய்காப்பாளர்கள், திருப்பரிசாரகர்கள், மாணிகள், கரணத்தார்கள், ஸ்ரீ பண்டாரஞ் செய்யும் பிராமணர்கள்,

நிபந்தக்காரர்கள், தளிச்சேரிப் பெண்டுகள், திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் ஆகியோர்களையும், அவன் மலை நாட்டின் மீதும் பாண்டி நாட்டின் மீதும் போர்த்தொடுத்து அங்குக் கவர்ந்து வந்த பொன்னையெல்லாம் ஆடவல்லானின் திருப்பாத கமலமலர்களாகச் செய்தளித்தது ஆகிய எல்லாச் செய்திகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் நம்மால் காண முடிகிறது.

இராசராசன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் பொறுத்தமட்டில் தனது நேரடி மேற்பார்வையிலேயே வைத்திருந்திருக்கிறன் என்பது அக்கல்வெட்டுகளால் புலனுகிறது. தான் அளித்த கொடைகளைப் பற்றிய செய்திகளையும் தமது நெருங்கிய உறவினர்கள் அளித்த கொடைகளைப்பற்றிய செய்திகளையும் கோயிலின் எப்பகுதியில் எந்த முறையில் பொறித்து வைக்க வேண்டுமென்பதை 'நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீராஜராஜீச்வரமுடையார்க்கு நாங்குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும் நம் பெண்டுகள் குடுத்தனவும் ஸ்ரீவிமானத்தில் கல்லிலே வெட்டுக' என்று திருவாய் மொழிந்தருளியிருக்கிறன்.

இராசராசன் தம் கருவூலத்திலிருந்தும் பிற மன்னர்களைத் தோற்கடித்து அந்நாடுகளிலிருந்து கொண்டு வந்தவற்றிலிருந்தும் பொன்னின் சின்னங்களாகவும் பொன்னின் ஆபரணங்களாகவும் செய்தளித்ததையும் 'ஸ்ரீராஜராஜீச்வரம் உடைய பரமஸ்வாமிக்கு உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் தம் பண்டாரங்களிலும் சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்துகொண்ட பண்டாரங்களிலும் குடுத்த பொன்னின் சின்னங்களும் பொன்னின் திரு ஆபரணங்களும் உள்ளிட்டன' எனக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

நிவந்தக்காரர்கள், தளிச்சேரிப் பெண்டுகள்

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்கு நிவந்தக்காரர்களையும் 400 தளிச்சேரிப் பெண்டுகளையும் நியமித்த

போது பல கட்டளைகளையும் குறிப்பிட்டு, நிர்வாகம் பாங்குறச் செயல்படுவதற்காக ஒவ்வொருவருக்கு இவ்வளவு நிலம் நிவந்தம் என்று கூறி வழி வகுத்திருக்கிறான்.

'இப்படி பங்கு பெற்ற இவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனார்க்குந் தலைமாறு இவ்விவர்க்கு அடுத்த முறை கடவார் இக்காணி பெற்றும் பணி செய்யவும். அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்யராய் இருப்பாரை ஆளிட்டு பணி செய்வித்துக் கொள்ளப் பெறவும். அடுத்து முறை கடவார் இல்லாது விடில் அவ்வவர் நியாயங்களிலாரே யோக்யராய் இருப்பாரை இட்ட அவனே காணி பெறவும்' என்று கூறப்பட்டிருகிறது.

இதில் கொடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ள காணி அரசனுடைய சொந்த நிலமா அல்லது கோயிலின் நிலமா என்பது குறிக்கப்படவில்லை.

திருப்பதியம் விண்ணப்பம் செய்வார்

திருப்பதியம் விண்ணப்பிப்பதற்காகப் பிடாரர்களை நியமித்தபோது அவர்கள் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே நெல் பெற்றுக் கொள்ளலாம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று மேலே கண்டுள்ள காணியும் உடையார் ராஜராஜீச்வர முடையாருடையதாக இருக்கலாம். மேற் கூறப்பெற்ற 400 தளிச்சேரிப் பெண்டுகளும் சோழ மண்டலத்திலுள்ள பல தளிச்சேரிகளிலிருந்து வரவழைக்கப் பெற்றவர்கள். தளிச்சேரி என்பது கோயிலோடு ஒட்டிய பகுதி. இந்தத் தளிச்சேரிப் பெண்டுகளுக்கும், நிவந்தக்காரர் களுக்கும், திருப்பதியம் செய்வார்களுக்கும் சந்திராதித்ய வல்வரை நெல் அளிக்கப்படவேண்டும் என்று குறிக்கப்பட வில்லை.

பண்டாரஞ் செய்வார், மாணிகள்

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரமுடையார்க்கு ஸ்ரீபண்டாரம் செய்ய பிராமணரையும், திருப்பரிசாரகஞ்செய்ய

மாணியையும், கணக்கெழுத கரணத்தார்களையும் கீழ்க் கணக்கர்களையும் சோழ மண்டலத்தும், பாண்டி மண்டலத்தும், தொண்டை மண்டலத்தும் பிரம்ம தேயங்களிலிருந்து மட்டும் நியமித்திருக்கிறார். அப்படி நியமிக்கப் பெறுபவர்கள் 'அவ்வவ் பிரமதேயங்களில் பூமி சம்பத்தும், பந்து சம்பத்தும், அர்த்த சம்பத்தும்,' உடையாராயிருக்க வேண்டும் என்று கட்டளைப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அந்த பிரம்ம தேயங்கள் சந்திராதித்தவல் இடக்கடவன என்றும், ஒவ்வொருவருக்கும் நிபந்தம் இவ்வளவு என்றும் குறிப்பிட்டுவிட்டுத் 'திருப்பரிசாரகஞ் செய்யும் மாணிகள் பெறும் நெல்லுங் காசும் உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும்' என்றும், பண்டாரிகளுங் கரணத்தார்களும் உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் நாட்டுப் பண்டாரத்தேப் பெறவும்' என்றும் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

பண்டாரிகளும், மாணிகளும் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறக்கூடாது என்பது இதனுல் தெரிகிறது. ஏனெனில் அது அவர்கள் நேர்ப்பார்வையில் உள்ளதாலாகும்.

திரு மெய்காப்பாளர்கள்

உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார்க்குத் திரு மெய்காப்பாளர்கள், ஊர்கள் அனுப்பவேண்டும் என்றும், அவ்வவ் ஊர்களிலாரே ஒரு ஆண்டுக்கு 100 கலம் நெல் தர வேண்டும் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. இப்படி நிபந்தம் சந்திராதித்தவல் தரவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த வாக்குப்படிப் பார்த்தால் வெள்ளான்வகை ஊர்கள் மட்டும்தான் திரு மெய்காப்பாளர்கள் அனுப்ப வேண்டும் என்பதாகத் தெரியும். ஆனுல் சதுர்வேதி மங்கலங்களில் உள்ள சபையார்களும் மெய்காப்பாளர்களை அனுப்பி யிருப்பதிலிருந்து, அங்கு ஊரார் என்று குறிப்பிடப்பட்டிருப்பது ஒவ்வொரு கிராமத்தையும் என்று கொள்ளல் தகும்.

ஊர்கள்

ஸ்ரீ ராஜராஜதேவர் தேவதானமாகச் சோழ மண்டலத்தும் புற மண்டலங்களிலும் ஸ்ரீராஜராஜீச்வரமுடையார்க்குக் கொடுத்த ஊர்களைப் பற்றி மிகத் தெளிவாகக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊரிலும் இறையிலி நிலம் எவ்வளவு, இறைகட்டின நிலம் எவ்வளவு, இறை கட்டின காணிக்கடன் எவ்வளவு என்பனவும் இறையிலி நிலங்கள் என்பவை எவைஎவை என்பனவும் கொடுக்கப்பட்டுள்ளன.

"ஊர் நத்தமும் ஸ்ரீ கோயில்களுங் குளங்களும் ஊடறுத்துப்போன வாய்க்கால்களும் பறைச்சேரியும் கம்மாணஞ்சேரியுஞ் சுடுகாடும் உள்ளிட்டு இறையிலி நிலங்கள்" என்று குறிக்கப் பெறுகிறது.

"தென்கடுவாயான அருள்மொழி தேவ வளநாட்டு இங்கணாட்டுப் பாலையூர் பள்ளியும் கணி முற்றூட்டும் உட்பட அளந்தபடி நிலம் நூற்றுமுப்பத்து நான்கேய் எட்டுமாவின் கீழ் முக்காலே மும்மாவரை யாரைக்காணி முந்திரிகக்கீழ் நான்கு மாவிலும்,

ஊர் நத்தமுங் குளமுங் கம்மாணசேரியும் பறைச்சேரியும் சுடுகாடும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன வாய்க்கால்களும் இறை இலி நிலம் ஒன்பதேய் காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரை நீக்கி, இரை கட்டின நிலம் நூற்று இருபத்து.ஐஞ்சேய் ஏழுமாவரை முந்திரிகைக்கீழ் எண்மாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினால் இறை கட்டின காணிக்கடன் ராஜகேஸரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லுப் பன்னீராயிரத்து ஐந்நூற்று முப்பதின் கலனே இருதூணிக் குறுணி ஒரு நாழி."

என்று தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. இதில் இறையிலி நிலம் நீக்கி

யுள்ள இறை கட்டின நிலத்திலிருந்து இறை கட்டின காணிக் கடனுகப் பன்னிராயிரத்து ஐந்நூற்று முப்பதின்கலம் .இரு தூணிக் குறுணி ஒரு நாழி என்று வருகிறது.

காணிக்கடன்

காணிக்கடன் என்ருல் நில வரி என்று பொருள் கொள்வர். இறை என்ருல் அரசுக்கு செலுத்தக்கூடிய வரி என்று பொருள். இறை கட்டின காணிக் கடன் என்பதை அரசுக்கு வரி செலுத்தியதுபோக மீதி உள்ள நிலவரி என்று நேரிடையாகப் பொருள் கொள்ளலாம். ஆனுல் இங்கு இறை கட்டின காணிக்கடன் என்பதை இறையாகிய காணிக்கடன் என்று பொருள் கொண்டு அரசனுக்குச் செலுத்தவேண்டிய வரி என்று கொள்ளவேண்டும்.

காணிக்கடனுகிய நெல் கங்கபாடி நாட்டிலுள்ள ஆலுர் என்ற ஊரிலிருந்தும், நுளம்பபாடியான நிகிரிலி சோழபாடிப் பறிவை நாட்டுத் தேவதான பிரம்மதேயம் குசவூரிலிருந்தும், மலைநாட்டு வெள்ளப்ப நாட்டுப் புதுக்கோடியிலிருந்தும், ஈழ மான மும்முடி சோழமண்டலத்து மாப்பிசும்பு கொட்டியார மான ராஜராஜ வளநாட்டிலுள்ள ஒரு ஊரிலிருந்தும், அதே மண்டலத்து கணக்கன் கொட்டியாரமான விக்கிரமசோழ வளநாட்டு மாசாரிலிருந்தும் வந்திருக்கிறது. இப்படிக் கொடுக்கப்பட்ட காணிக்கடன் நெல் சந்திராதித்தவல் கொடுக்கப்படவேண்டும் என்று குறிக்கப்படவில்லை. தனக்கு இறையாகத் தரப்படவேண்டிய நெல்லை இறைவனுக்கு அனுப்பும்படி கட்டளை இட்டிருக்கிருன். நிலத்தையே கோயிலுக்குத் தேவதானமாக அளித்து, அதைத் தங்கள் மேற்பார்வையில் பயிரிடச் செய்து அதிலிருந்து வருமானத் தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று இராஜராஜன் கூறிய தாகக் கல்வெட்டுகளில் காணமுடியவில்லை.

ஆண்டு

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள பல கல் வெட்டுகள் "உடையார் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை" கொடுக்கப்பட்ட கொடை யையே குறிக்கின்றன. இதிலிருந்து அவருடைய ஆட்சி 29ம் ஆண்டில்தான் பல ஆண்டுகளாகக் கொடுத்து வந்தவைகளை ஆராய்ந்து ஒரே சமயத்தில் அவைகளைக் கல்லில் வெட்டு வித்தான் என்பது புலனாகிறது.

செப்பேடுகள்

1965 வரையில் தமிழ்நாட்டில் மொத்தம் 373 செப்பேடு கள் கிடைத்துள்ளன. இவற்றில் சோழர்கள் காலத்தவை சுமார் 10 ஆகும். இராசராசன் காலத்திய செப்பேடுகள் இது வரையில் 3 தான் கிடைத்து உள்ளன.

1. திருச்செங்கோடு செப்பேடுகள் I
2. திருச்செங்கோடு செப்பேடுகள் II
3. பெரிய லெய்டன் செப்பேடு.

திருச்செங்கோடு செப்பேடுகளில் ஒன்று இராசராசனின் 5-ஆம் ஆண்டிலும், மற்றொன்று 10ஆம் ஆண்டிலும் எழுதப் பெற்றுள்ளன. முதல் செப்பேடு 5 தகடுகளில் 42 வரிகளா லும், இரண்டாம் செப்பேடு 2 தகடுகளில் 12 வரிகளாலும் எழுதப்பட்டுள்ளன.

பெரிய லெய்டன் செப்பேடு 21 செப்புத் தகடுகளில் 443 வரிகளை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது. இராசராசனின் 21-ஆம் ஆட்சி ஆண்டில் எழுதப்பெற்றுள்ளது. கடாரத்தர சன் சூளாமணி வர்மன் என்ற மன்னனால் நாகப்பட்டினத்தில் அமைக்கப்பட்ட சூளாமணி விஹாரத்துக்குப் பள்ளிச் சந்த மாக ஆனைமங்கலம் என்ற ஊர் அளிக்கப் பெற்றதை அது குறிக்கிறது.

அரசனது ஆணையை நிறைவேற்றுவதற்காக ஒப்பமிட்ட அதிகாரிகளின் பெயர்களும் அவ்வாணையைச் செயல்படுத்து வதற்காக ஒத்துழைக்க வேண்டிய நாட்டார், ஊரார், சபையார், நகரத்தார் ஆகியவர்களின் பட்டியல்களும் விரிவாகத் தரப்பட்டிருக்கிறது.

பெரிய லெய்டன் செப்பேட்டில் உள்ள சமஸ்கிருதப் பகுதி இம்மன்னனின் முன்னோர்களைப் பற்றியும் அவர்கள் வாகை சூடிய போர் நிகழ்ச்சிகளையும் நன்கு விளக்குகிறது. இராஜேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேடும், கரந்தைச் செப்பேடும், முதலாம் குலோத்துங்க சோழனின் சிறிய லெய்டன் செப்பேடும் இவனது புகழை விரித்துரைக்கின்றன. கன்னியாகுமரியிலுள்ள குமரி அம்மன் கோயிலில் உள்ள தூணில் பொறிக்கப்பட்டுள்ள வீரராஜேந்திரன் கல்வெட்டும் இராசராசனைப் பற்றிக் குறிக்கிறது.

இருப்பினும் 1000-க்கு மேற்பட்ட கல்வெட்டுகளுக்கு உரிமையாளனாகிய இம்மன்னன் காலத்தில் மூன்றே மூன்று செப்பேடுகள் மட்டும்தான் எழுதப்பட்டனவா? வினா எழுகிறது.

பல செப்பு பட்டயங்கள் எழுதப் பெற்றிருக்க வேண்டும். அவை பிற்காலத்தில் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் வேறு ஒன்றையும் இங்கு நோக்குதல் வேண்டும்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகள் அனைத்தும் 'கல்லில் வெட்டிந' என்றுதான் காணப்படுகிறது. சில கல்வெட்டுகளில் காணப்படுகிறபடி 'செம்பிலும் சிலையிலும் வெட்டுவித்துக் கொள்க' என்று காணப்படவில்லை. எனவே அக் கல்வெட்டுகள் அனைத்தும் கல்லில் மட்டும்தான் வெட்டப் பெற்றுள்ளன என்பது உறுதியாகிறது. இதிலிருந்து அரசன் தன்னால் எழுப்பப் பெற்ற

கோயிலுக்குத் தன்னால் அளிக்கப் பெற்ற கொடைகளை செப் பேட்டில் எழுதி வைக்க வேண்டும் என்று எண்ணவில்லை போலும் என்றும் ஊகிக்கலாம்.

காசுகள்

தமிழகத்தில் எந்தப் பகுதியில் காசுகள் கண்டெடுக்கப் பட்டன என்றாலும் அவற்றில் பெரும்பகுதி இராசராசனால் வெளியிடப் பெற்ற காசுகளாகத்தான் இருக்கின்றன. பெரும் பாலான காசுகளில் ஒரு பக்கத்தில் ஈழ மனிதனுடைய நின்ற உருவமும் மறுபக்கத்தில் ஈழமனிதனுடைய அமர்ந்த உருவ மும் காணப்பெறும். அமர்ந்த மனிதனின் இடது கையின் கீழ் ''ஸ்ரீராஜராஜன்'' என்று நாகரி எழுத்தில் எழுதப் பெற் றிருக்கும்.

இவனுடைய மற்றொரு வகையான காசில் முன்பக்கம் புலி, இணைக்கயல், வில் ஆகிய மூன்றும் அதன் கீழ் ''ஸ்ரீராஜ ராஜசோழ'' என்று நாகரி எழுத்திலும் காணப்படும். பின் பக்கமும் அதே சின்னங்கள் காணப்படும்.

இலக்கியங்கள்

இலக்கியங்கள் சிலவும் இராசராசனைப்பற்றிக் குறிப்பிடு கின்றன. விக்ரம சோழன் உலா, இராசராசன் சேரமன்ன னிடம் அனுப்பிய தூதுவனை அவன் அவமானப்படுத்தியதால் வெகுண்டெழுந்து போர் தொடுத்தான் என்பதை,

'' ....தூதற்காப்
பண்டு பகலொன்றில் ஈரொன்பது சுரமுங்
கொண்டு மலைநாடு கொண்டோன்''

என்று கூறுகிறது. அதே நிகழ்ச்சியை,

'' ....சூழவும்
ஏறிப்பகலொன்றில் எச்சுரமும் போயுதகை
நூறித்தன் தூதனை நோக்கினன்''

என்று குலோத்துங்க சோழன் உலாவும்,

"மதகயத்தால் ஈரொன்பது சுரமுட்டி
உதகையைத் தீத்த வுரவோன்"

என்று இராஜராஜன் உலாவும் பாடுகின்றன.

முதற்குலோத்துங்கன் கலிங்க மன்னன் அநந்தவர்மன் மீது போர் தொடுத்து வெற்றி பெற்றதைப் பரணி பாடும் கலிங்கத்துப் பரணியும் இந்நிகழ்ச்சியை,

"சதய நாள் விழா உதியர் மண்டலந்
தன்னில் வைத்தவன் தனியோர் மாவின்மேல்
உதயபானுவொத்து தனக வென்ற கோன்
ஒரு கை வாரணம் பலகவர்ந்ததும்"

என்று கூறுகிறது.

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த திருமுறை கண்ட புராணம் இராசராசன் தில்லையம் பதியில் அடைபட்டுக் கிடந்த மூவர் தேவாரத்தை நம்பி யாண்டார் நம்பி பெருதவியால் கண்டு வெளிப்படுத்தினன் என்ற உண்மையைக் கூறும்

இவ்வாறு தன்னைப்பற்றிய பல வரலாற்று உண்மைகளை யும் பல வடிவில் தமிழகத்தில் விட்ட நளிய ஒரு சில மன்னர்களில் இராசராசன் முதன்மையான இடத்தைப் பெறுகிறான். அவன் புகழ் ஓங்குக! அவன் வரலாறு சிறக்க!

சோழர் காலத்தில் வேளாளர் நிலை

"வேளாளர் என்பார் விருந்திருக்க உண்ணுதார்" என்கிறது திரிகடுகம். அவ்வாறெனில் வேளாளர்கள் இயற்கையிலேயே செல்வச் செழிப்பும் விருந்தோம்பும் பண்பும் உடையவர்களாய் இருந்திருக்கிருர்கள் என்று ஊகிக்கலாம். வேளாண்மைத் தொழிலைச் செய்வதால் வேளாளர் என்று அழைக்கப்பட்டனர்.

'சுழன்றும் ஏர் பின்னது உலகு' என்று கூறிய தெய்வப் புலவர் சுழன்றும் வேளாளர் பின் உள்ளது உலகு என்பதையல்லவா சொல்லாமல் சொல்லிவிட்டார். வேளாளர் என்று குறிப்பிடுவது ஒரு சாதியை என்று கருதாது வேளாண்மை செய்தோரை என்று கொள்ளுதல் நலம்.

இந்திய நாட்டின் பெருமையை உலகெங்கும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கும் மொஹஞ்சோதரோ, ஹரப்பா நாகரீகக் காலத்திலிருந்தே வேளிர் வாழ்ந்து வந்துள்ளனர் என்று அங்கு கிடைத்திருக்கும் உருவ எழுத்துப் பொறிக்கப் பட்டுள்ள முத்திரைகளிலிருந்து அறிய முடிகிறது. மொஹஞ் சோதரோ ஹரப்பாவின் புற நாகரீகப் பகுதிகளில் வேளிர்கள் வாழ்ந்தனர் என்று திரு. ஐ. மகாதேவன் அவர்கள் கூறுகிருர்கள்.[1]

தமிழகத்தில் சங்ககாலத்தில் இருந்த கடை யேழு மன்னர்களும் வேளிர் குல மன்னர்கள் என்று போற்றப் படுகின்றனர்.

பல்லவர் காலத்தில் வடார்க்காடு மாவட்டம் செங்கம் பகுதி வேள்நாடு (வேணாடு) என்று அழைக்கப்பட்டு வந்தது. அதுவும் இரு பிரிவுகளாகப் பிரிந்து கீழ்வேணாடு என்றும் மேல் வேணாடு என்றும் வழங்கலாயிற்று.

கி. பி. 12, 13 ஆம் நூற்றாண்டில் கொங்குப் பகுதியில் கொங்கு வேளிர் என்ற இனத்தவர் ஆண்டு வந்தனர். பிற் காலத்தில் இந்த கொங்கு வேளிருள் பல பிரிவுகள் ஏற்பட்டு இருந்தமை தெரிய வருகின்றன.

சைவ அல்லது வைணவக் கோயிலுக்கு நிலம் அளித் திருந்தால் தேவதானம் என்றும்; பௌத்த, சமண ஆலயங் களுக்கு நிலம் அளித்திருந்தால் பள்ளிச்சந்தம் என்றும் கல்வெட்டுகள் கூறும். குடிகள் உழுது பயிரிடும் நிலத்துக்கு "வெள்ளான்வகை" என்ற பெயர் காணப்படுகிறது. இந்த வெள்ளான் வகை நிலத்தைப் பயிரிடுபவர் வெள்ளார்கள் அல்லது வேளார்கள் என்று ஆகி பின்னர் வேளாளர் என்று மாறியிருக்கக் கூடும். இவ்வேளாளர்கள் சோழர் காலத்தில் எவ்வாறு மதிக்கப்பட்டனர் என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சோழர்கள் காலத்தில் வேளாளர்கள் தங்களுக்குள் ஒரு குழு ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். அக்குழு "சித்திரமேழி பெரிய நாட்டார்" குழு என்று கல்வெட்டுகளில் குறிக்கப் படுகிறது அவர்கள் தங்களுக்கென்று தனிக்கொடியும், தங்கள் உடைமைகளைக் காக்கத் தனிப்படையும் வைத்திருந்தனர் என்று தெரிகிறது. அவர்களது கொடியில் 'ஏர்' சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது.

அத்தகைய ஒரு குழு வடார்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்திலுள்ள தாமரைப்பாக்கத்திலிருந்தது. அக்குழுவினர்

தங்களை "ஸ்ரீ பூமி தேவிக்கு மக்களாகி அறம் வளர புகழ்க் கலி மெலயச் செங்கோலே தெய்வமாகத் திசையனைத்துஞ் செவிடுபடாமைச் சித்திரமேழி தம்மம் இனிது நடாத்தும் ஸ்ரீ ராஜேந்திர சித்ரமேழிப் பெருக்காளரோம்" என்று கூறிக்கொள்கின்றனர். இங்கு "பெரியநாட்டார் என்பதற்குப் பதிலாகப் "பெருக்காளரோம்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

இக்குழு சோழ மன்னன் இரண்டாம் இராஜேந்திரன் காலத்தில் இருந்ததாகும். இக்குழுவின் முன்னே ஒரு வழக்கு வருகிறது. குழு உறுப்பினர்களாகிய வேளாளர்கள் கூடுகின்றனர். வழக்கைக் கொண்டுவந்தவன் பங்கள நாட்டுத் தெற்கில் வகைச் 'செளூறூர் நாடான புதநல்ப்பாடி'யைச் சார்ந்த வேளாளன். அவன் பெயர் தருப்பேறுடையான் தாழி தென்னவன். அவன் "என் மகன் சங்காத்தடியனும் என் மகன் பெரியானும் தடுபடுக்கிறடத்துத் தம்பியைத் தமையன் அரிசப்பட்டு அடித்தான். அடிக்க தம்பியும் தமையனை யெதிரே யடித்தான். தம்பியடிச்ச அடியிலே தமையன் பட்டான்" என்று கூறுகிறுன்.

உடன் குழுவினர் "உனக்கு இல்விருவரு மல்லாது மக்களுளரா"வென்று கேட்கின்றனர். அதற்கு அவன் "மற்று மக்களாருமில்லை. இவர்கள் தாயும் நானுமேயுள்ளோம்" என்று கூறுகிறுன். அவ்வாறெனின் செல்வந்தானுண்டோ என்று கேட்கின்றனர். செல்வமும் இல்லை என்று விடை பகர்கிறுன்.

குழுவினர் ஆராய்கின்றனர். முடிவில் "இந்தக் கொலையால் வேறு எந்தக் குடியும் கெடாமையாலும், இவர்களைப் பாதுகாப்பார் வேறு யாருமில்லாமையாலும், செல்வம் ஏதும் இல்லாமையாலும் திருத்தாமரைப் பாக்கத்து அக்னீஸ்வர முடையார்க்கு அரை திருநந்தா விளக்கு அளித்து விட்டுத் தாயையும் தந்தையையும் காப்பானுக, தர்மம் செய்துவிட்ட காரணத்தால் அடித்தவன் இறக்க வேண்டாம்" என்று தீர்ப்புக் கூறுகின்றனர். மேலே கூறப்பட்டுள்ள செய்திகள் தாமரைப் பாக்கத்திலிருந்து கிடைத்துள்ள ஒரு கல்வெட்டின் மூலம் புலனுகிறது.[2]

அந்தச் செய்திகளிலிருந்து சோழர் காலத்தில் வேளாள ரின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை அறிய முடிகிறது. தங்கள் இனத்தைச் சார்ந்தவர்களுக்குள் வழக்கு ஏற்பட்டால் தாங்களே தங்கள் குழுவின் முன் கூடித் தீர்த்துக் கொள்வர் என்பது தெரிய வருகிறது. தர்மம் செய்துவிட்ட காரணத் தாலும் மற்ற காரணங்களாலும் அவன் இறக்க வேண்டாம் எனக் கூறுகிறது. அவ்வாறான சூழ்நிலை இல்லையென்றால் அவன் இறக்க வேண்டும் என்ற நியதியும் இருந்திருப்பது தெரிய வருகிறது.

வேளாளப்பெண்கள் எவ்வாறு மதிக்கப்பட்டனர் என்பது மற்றொரு கல்வெட்டால் புலனாகிறது.[3] "படுவூர்க் கோட்டத் துக் காவிரிப் பாக்கமாகிய அவ்விநாராயணச் சதுர்வேதி மங்கலத்து இவ்வாட்டை ஊர் வாரியப் பெருமக்களும், ஏரி வாரிகப் பெருமக்களும், கழனிவாரிகப் பெருமக்களும், பட்டர் களும், வஸிஷ்டர்களும் உள்ளிட்ட மஹாசபையோம் காமக் கோட்டத்தே கூடியிருக்கப் பெருமானடிகள் அரிளிப் பாட்டால் வெண்பைக்குடி நாட்டு வெள்ளார் வந்து நுங்களுக்கு எப்பேர்பட்ட கரணங்களும் சங்கிராந்தியும் உவாவும் பிரிதியமும் பெறுததாகவும் மற்றும் எப்பேர் பட்டன காட்டுமிடத்தும் புருஷரையும் ஸ்திரீகளை யும் கொண்டு போந்து அம்பலத்துப் பெறுதராகவும் ஸ்திரீகளைக் கொண்டு போதுவார் பெருமானடிகளுக்கும் ஸபையார்க்கும் பிழைத்தாதாராகவும் இப்பரிசு வியவஸ்த்தை யாக ஸிலாலேகை செய்கவென்று இவ்வெண்பைக் குடி வேளார் மஹாசபையார்க்கு வந்து சொன்னமையில் எப்பேர்பட்ட கரணங்களும் ஸங்கிராந்தியும் உவாவும் பிரிதியமும் இந்நாளால் காணப்பெறப் பெறுததாகவும் கரணங்கள் காட்டினவிடத்தும் மற்றும் எப்பேர்பட்டது காட்டுமிடத்தும் காட்டப்பட்ட புருஷரைக் கொண்டு போருவாராகவும் (புருஷரை) காணாவிடிலும் ஸ்திரீகளைக் கொண்டு போதப் பெறுதாராகவும் கொண்டு போந்தார் ஸபையோருக்கும் பெருமானடிகளுக்கும் பிழைத்ததாராக வும்" என்று அக்கல்வெட்டு கூறிச் செல்கிறது. இக்

கல்வெட்டு முதலாம் இராஜராஜன் (கி. பி. 985–1014) காலத்தைச் சார்ந்தது. வடார்க்காடு மாவட்டம் காவிரிப் பாக்கம் என்ற ஊரில் உள்ளது.

காவிரிப்பாக்கத்தின் மாஹசபை கூடுகிறது. அப்பொழுது வெண்பைக்குடி நாட்டு வெள்ளார் ஒருவர் வந்து ஒரு கருத்தைக் கூறி, தீர்மானமாக நிறைவேற்றுங்கள் என்று முறையிடுகிறார். அதாவது அரசனுக்குச் சேரவேண்டிய வரி வகைகளை வசூல் செய்யும்போது வரி செலுத்தாத ஆண்களை யும் பெண்களையும் அம்பலத்துக்குக் கொண்டு சென்று கேட் டல் கூடாது. அதிலும் பெண்களை அம்பலத்துக் கொண்டு செல்வது ஆளும் அரசனுக்கே பிழைத்ததாகும் என்பது அத் தீர்மானமாகும். மஹாசபையாரும் உடன் ஆலோசித்து வரிகளை வசூல் செய்யும்போது ஆண்களை மட்டும் கேட்டுப் பெறுவதாகவும் பெண்களை அம்பலத்துக்குக் கொண்டு போகப் பெறுதாராகவும் என்று தீர்மானம் நிறைவேற்று கின்றனர். சாதாரணமாகப் பார்த்தால் இத்தீர்மானம் எல்லா ஆண், பெண்களையும் குறிப்பதாகத் தோன்றும். ஆனால் அம்மஹாசபையில் கூடியிருக்கின்ற வாரியப் பெரு மக்களையும் முறையிடுகின்ற வெண்பைநாட்டு வெள்ளாரை யும் கருத்தில் கொள்ளும்போது இத்தீர்மானம் வெள்ளார் பெண்களை அம்பலத்துக்கு அழைத்துச் சென்று பொது மக்கள் மத்தியில் வரிகேட்டு இழிவுபடுத்தல் கூடாது என்பதைக் குறிப்பதாகத் தெரிவிக்கிறது. அவ்வாறெனில் எந்த அளவுக்கு வெள்ளார் இனப் பெண்கள் அன்றும் அரசனாலும் மதிக்கப் பட்டார்கள் என்பது வெள்ளிடைமலை.

வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்தவன் என்ற ஒரு காரணத்தாலேயே ஒருவன் கொலைக் குற்றத்திலிருந்து விடுக்கப்பட்டதை மற்றொரு கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.[4] திருச்சி மாவட்டம் கண்டிராதித்தம் என்னும் ஊரில் உள்ள இக்கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்கன் காலத்தைச் (கி.பி. 1144) சார்ந்ததாகும். இந்தக் கல்வெட் டும் ஒரு வழக்கைப் பற்றித்தான் குறிக்கிறது. இந்த வழக்கு

முன்னர் கூறப்பெற்ற வழக்கைக் காட்டிலும் மிகவும் சுவையானதாகும். காந்தங்குடியில் வாழும் வெள்ளாளரில் ஒருவரான நெய்யாடி என்பவன் தியாக சமுத்திரத் தெரிந்த வில்லிகள் என்ற படையைச் சேர்ந்த சோரன் மணவாளன் என்பனின் மனைவி இறப்பதற்குக் காரணமாக இருந்தான் என்பது வழக்கு. இவ்வழக்கு மன்னரின் அதிகாரியான காங்கராயன் என்பனிடம் செல்கிறது. அதிகாரி சட்டத்துறை நிபுணர்களை அழைத்து ஆலோசித்த பின்னர் நெய்யாடி வெள்ளாள இனத்தைச் சாந்துள்ளதால் இவன் இறக்கவேண்டாம், கோயிலில் நந்தாவிளக்கு எரித்து விட்டால் போதுமானது என்று தீர்ப்பு வழங்குகிறார். இத் தீர்ப்பு சோழர் காலத்தில் வெள்ளாளர் இனம் உயர்ந்த ஒழுக்க நிலையில் வைத்து மதிக்கப் பட்டது என்பதைக் காட்டும் காலக் கண்ணுடியாக விளங்குகிறது அல்லவா?

அரசன் ஒரு ஊரில் உள்ள நிலத்தைக் கோவிலுக்குத் தேவ தானமாகவோ அல்லது பிராமணர்களுக்குப் பிரமதேயமாகவோ அளிக்கும்படி ஆணைப் பிறப்பித்துவிட்டு அந்த ஆணையைத் தொடர்புடைய ஊர் நாட்டார் காண்க என்று கூறியதாகக் காணப்படுவனவற்றில் உள்ள நாட்டார் எனும் சொல் வேளாளர்களைத்தான் சுட்டும். அவர்கள் சித்ரமேழி பெரிய நாட்டார் என்று தங்களை அழைத்துக்கொள்வதாலும் நிலத்திலே உழுது பயிரிடுவோர் அவர்களே ஆவதாலும் அவர்களையே குறிப்பதாகக் கொள்ளுதல் வேண்டும். அரசனது திருமுகத்தைக் (ஆணையை) கண்ட நாட்டார்கள் அரசனுல் கொடையளிக்கப்பட்ட நிலத்தினுடைய எல்லைகளை வரையறுத்து அறையோலை எழுதித் தருவர். அதன் பின்னர் பெண் யானையின் மீதேறிக் கொண்டு ஒருவன் நிலத்தின் எல்லைகளை வலம் வருவான். வந்தபின் எல்லைக் கற்கள் நடப்படும். அவ்வாறு எல்லைகளை வரையறுக்கும் பெரும் பொறுப்பில் வேளாளர் இருந்திருக்கின்றனர் என்பதை இராஜராஜனின் பெரிய லெய்டன் செப்பேடு, திருவாலங்காட்டுச் செப்பேடு முதலியவற்ருல் அறிய முடிகிறது.

1. I. Mahadevan, Decipherment of Harappan Script, paper presented in the third World Tamil Conference held at paris.

2. டாக்டர். இரா. நாகசாமி, கல்வெட்டு, காலாண்டு இதழ்–2, பக்கம் 6–11.

3. S.I.I. Vol. XIII, No. 312.

4. A.R.E. 200 of 1929.

நிலக் குத்தகை

உழுபவனுக்கே நிலம் சொந்தம்
என்பது இக்கால முழக்கம்.
நமது முன்னோர் என்ன செய்தனர்?

பரந்த நிலப்பகுதி ஒரு சிலரிடத்தில் அடைக்கலம் புகுந்து காணப்படுகின்றபோது மக்களில் பெரும்பாலோர் நிலமற்ற ஏழையராக நிறுத்தப்படுகிறார்கள். அந்நிலமற்ற ஏழை எளியவர்களும் எவ்வகையாலும் பிழைக்க வேண்டிய காரணத்தால் நிலச்சுவான்தாரர்களிடம் சென்று வாரத்திற்கு ஒரு சில காணிகளைப் பயிரிட வேண்டுகின்ற நிலை ஏற்படுகிறது. நிலம் பெற்றிருக்கும் முதலாளியும் அனைத்தையும் தாமே பயிரிட முடியாத காரணத்தால் அவ் வேண்டுகோளுக்கு இணங்கி நிலமற்ற உழவனைப் பயிரிடும்படி கூறி ஒப்புகிறான். விதை தூவி, நாற்று நட்டு, பயிர் களைத்து, கதிர் முற்றி, அறுவடையில் கிடைத்த கண்டு முதலைப் பிரித்துப் பங்கிட்டுக்கொள்ளும் முறைக்குத்தான் வாரமுறை என்று பெயர்.

இவ்வாரமுறை தமிழகத்தில் பழங்காலந்தொட்டே இருந்து வரும் பழக்கமாயினும் சங்க இலக்கியங்களிலிருந்து இதுபற்றி நாம் ஒன்றும் அறிய முடியவில்லை. ஆனால் இதுபற்றி கல்வெட்டுகள் ஓரளவு கூறுகின்றன. பிற்காலத்தில் சோழர்

காலக் கல்வெட்டுகளும், பிற்காலத்திய பாண்டியர்களது கல்வெட்டுகளும் இவ்வகையில் விரிவாகவும், விளக்கமாகவும் சில செய்திகளைத் தருகின்றன.

தஞ்சை மாவட்டம், ஆலங்குடியில் பாண்டியர் காலக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இது மாறவர்மன் குலசேகர தேவனின் நான்காம் ஆட்சி ஆண்டைச் (கி.பி.1272) சார்ந்தது. இக்கல்வெட்டு அக்காலத்தில் நிலவிய வாரமுறையைப் பற்றி மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் கூறுகிறது. முடிச் சோணுட்டு பிரமதேயம் ஸ்ரீ ஆலங்குடியான ஜனனுதச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி மஹாசபையார் செய்த வியவஸ்தையை (நிறைவேற்றிய தீர்மானங்களைக் குறிக்கிறது.)

''நம்மூர் முடிச்சோணுட்டு நாட்டிற்கு இவ்வாண்டு முதல் காரும், ஒரு பூவும், மறுவும் பயிர் செய்த நிலத்துக்கு வாரம் பெறுமிடத்து பொதுவில் கழியும் கணக்கு; மாநெல்லும், பள்ளி, பாடிகாவல், பெரும்பாடிகாவல், பணிமக்களுக்கிடும் சூடு, அறைபடை, ஆள்கூலி பொதுவிலே இடவும்; நின்ற நெல்லுக்கு நாலிலொன்று வாரம் பெறவும்; வைக்கோல், பயறு செவ்வாரம் பெறவும்; குடிமைக்குக் காரும் ஒரு பூவுக்கு மாத்தால் அறையாக வந்த பணமும் மறுவுக்கு மாத்தால் காலால் வந்த பணமும் இடவும்; கணத்துக்கு காலும், ஒரு பூவும் மாத்தால் தூணிப் பதக்காக வந்த நெல்லும், தூணிப் பதக்காக வந்த நெல்லுக்கு முடிச்சூடும், மறுவுக்கு ஒன்று பாதியாக தந்த முதலும் பொதுவிலே இடவும்; புன்பயிருக்கும் மஞ்சள், ஆமணக்கு, பருத்தி, எள்ளு உள்ளிட்ட புன்பயிருக்கு விதை முதலுக்கு வேண்டு முதல் குடுத்துப் பயிர் செய்வித்துச் செவ்வாரம் பெறவும்; குரம்பு, அணைகுலை உள்ளிட்ட தேவைகள் தாங்கள் செய்யவும்; நெட்டாள் தேவைக்கு மேல் வாரத்திலே கூலி இட தாங்கள் ஆள் போகவும்; மேல்வார நெல்லு படாகைகளில் கொட்டாரத்தில் எடுத்துக் கட்டித் தரவும்; இப்படி செய்யுமிடத்து பொருந்தின பெருங்குடிகள் கீழே பயிர் செய்யவும்; இப்படி செய்யுமிடத்து இந்த வியவஸ்தை ஒழிய சபையாரில் அழிவுசெய்தார் உண்டாகில் கிராமத்

துரோகிகள் பட்டது படவும். நாட்டாரில் அழிவு செய்தார் உண்டாகில் நாட்டுத் துரோகிகள் பட்டது படவும்''. இவை தான் அத்தீர்மானங்கள்.

நிலங்களில் மூன்று போகம் விளைந்தன. அவை கார் பயிர், முதற்பூ, மறுபூ என்றழைக்கப்பட்டன. விளைந்த நெல்லில் வேலையாட்கள், காவற்காரர்களுக்கான கூலிநெல், கட்டுநெல் (அரி) முதலியவை முதலில் பொதுவில் கொடுத்துத் தீர்க்கப் படும். மீதி நெல்லில் கால்பாகம் நிலச் சொந்தக்காரன் வாரமாக எடுத்துக் கொள்ளலாம். வைக்கோலை ஆளுக்குப் பாதி பாதியாக எடுத்துக் கொள்ளலாம். அரசனுக்குத் தர வேண்டிய குடிமை(வரி)க்கு கார்ப் பயிரிலும், முதற் பூவிலும், மா நிலத்திற்கு அரைப்பணம் விதமும் மறுபூவில் கால்பணம் விதமும் தரவேண்டும். முதற்பூவில் மா நிலத்திற்கு ஆறு மரக்கால் (தூணிப்பதக்கு) நெல்லும், மறுபூ விளைச்சலில் பாதியும் பொதுவில் முட்டுவலிச் செலவுக்காக இடவேண்டும்.

மஞ்சள், ஆமணக்கு, பருத்தி, எள்ளு போன்ற புஞ்சைப் பயிருக்கு விதைப்புக்கு வேண்டிய செலவைக்கொடுத்து, விளைச்சலில் பாதியை வாரமாகப் (சொந்தக்காரர்) பெற்றுக் கொள்ளலாம். அணையைச் செப்பனிடுதல், குரம்பு (தற்காலிக) அணை கட்டுதல் போன்றவைகளை உழுபவன் செய்யவேண்டும். நிலக்கிழார் கொட்டாரத்தில் மேல்வார நெல்லை வைத்துப் பாதுகாப்பதற்கு சேர் கட்டித் தருதல் வேண்டும்.

இந்த முறைப்படி பெருங்குடி (நிலக்கிழார்)களின் நிலத்தை உழுது பயிரிடலாம். இத்தீர்மானங்கள் சரிவர நிறைவேற்றி வைக்க வேண்டிய ஊர்ச் சபையார், இதில் தவறினால் கிராமத் துரோகிகள் அனுபவிக்கிற தண்டனையை அடையவேண்டும். நாட்டு மக்களில் தவறு செய்பவர் நாட்டுத் துரோகிகள் படுகின்ற தண்டனை அடைவார்கள்.

இக்கல்வெட்டு அக்காலத்தில் நிலவிய வார முறையைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. விளைவில் பெரும் பகுதி

உழுபவனுக்கும், சிறுபகுதி நிலக்கிழானுக்கும் சேர்ந்தது. குறிப்பிடத்தக்கது அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைப் பொதுவில் செலுத்தியது ஆகும். இன்று அவ்வரியை நிலக் கிழார் செலுத்துகிறார். புஞ்சைப் பயிருக்கு வாரம் விளைச்சலில் பாதி; இன்றும் அதே நிலை ஒரு சில இடங்களில் நிலவுகிறது.

விஜய நகர மன்னர் ஹரிஹரரின் அமைச்சர் வித்யா ரண்யர் என்பவர் வெளியிட்டதாகக் கூறப்படும் அறிக்கை யில் விளைவில் கால்பங்கை நிலச்சுவான்தாரரும், அரை பங்கை உழுபவனும், அரசு ஆறில் ஒன்றையும், கோயில் முப்பதில் ஒன்றையும், பிராமணர் இருபதில் ஒன்றையும் பெறவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கொடுக்கவேண்டிய வாரத்தைக் கொடுக்காமல் விவசாயி மறுத்தாலோ அல்லது தீர்மானிக்கப்பட்ட வாரத்திற்கு மேலாக முதலாளி கேட்டாலோ இன்று நீதி மன்றத்திற்குச் சென்று முறையிட்டு குற்றமிழைத்தோர் தண்டிக்கப்படுவது போல் அன்றும் தீர்மானத்தில் பின்வாங்கியவர்கள் கடும் தண்டனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இவ்வாறு சீரிய முறையில், எந்தவித சச்சரவுக்கும் இடமில்லாமல் வார வகைகளை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்தார்கள் என்று அறிகிறபோது மகிழ்ச்சி மேலிடுகிறது.

குத்தகையைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒருசில கல்வெட்டுகள் உதவுகின்றன. அதிலும் கோயில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது பற்றியும் அப்பொழுது எந்த முறையில் குத்தகை அளக்கப்பட்டது என்பது பற்றியும்தான் தெரியவருகின்றன. குத்தகைக்கு நிலம் விட்டபொழுது தரம் பிரித்து விடப்பட்டு அதற்கேற்ப குத்தகை வசூலிக்கப் பட்டதைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது.

முதலாம் இராஜராஜன் காலத்தில் சுசீந்திரம் கோயிலைச் சேர்ந்த தேவதானக் கிராமத்திலுள்ள நிலங்கள் இருதரமாகப் பிரிக்கப்பட்டு, முதல்தர நிலங்கள் மா ஒன்றுக்கு மூன்று கலம்

முதல் மூன்று கலம் நான்கு மரக்கால் வரையிலும் குத்தகைக்கு விடப்பட்டும், அந்த அளவு கொடுக்க இயலாத இரண்டாம் தர நிலங்கள் கோயில் அதிகாரிகளாலேயே நேரிடையாகப் பயிரிடப்பட்டும் வந்தன என்று அறிகிறோம்.

அவ்வாறு இருதரப்பினரும் ஒப்புக் கொண்ட குத்தகை முறையில் ஏதேனும் தகராறுகள் ஏற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அம்மாதிரி கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசனுடைய ஒப்புதல் பெற வேண்டியிருந்ததென்பதுவும் புலனாகிறது.

தஞ்சை மாவட்டத்து திருமாளம் என்ற ஊரில் காணப் படும் முதற்குலோத்துங்கனின் (1070–1120) கல்வெட்டு, தேவ தான நிலத்தைப் பயிரிட்டு வந்த குத்தகைக்காரர்கள் மேல் வாரம் சரிவர கொடுக்காது பாக்கி மிகுதியாக நின்று விட்ட காரணத்தாலும், முறையாகப் பயிரிடாது சில சமயங்களில் நிலத்தைப் பாழாகப் போட்டுவிட்ட காரணத்தாலும் அவர் களை நீக்கிவிட்டு புதுக் குத்தகைக்காரர்களிடம் விடுவதற்கு முதற் குலோத்துங்கசோழன் ஒப்புக் கொண்டு அனுமதியும் அளித்தான் என்று தெரிவிக்கிறது.

இதிலிருந்து குத்தகைக்கு ஒருவரிடம் விட்ட நிலத்தை மாற்றி வேறொருவருக்கு விடவேண்டும் என்று நினைத்தால் முன்கூட்டியே அரசனது ஒப்புதல் பெற்றாக வேண்டும் என்பது தெரியவருகிறது. இந்த முறை குத்தகைக்குப் பயிரிடும் ஏழை உழவனுக்குப் பெருமளவு பாது காப்பளித் திருக்கும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

பண்டைய நிலவிற்பனை முறைகள்

பலமுறையில் நிலவிற்பனை

நில விற்பனையைப் பல சூழ்நிலை காரணமாகப் பல விதங்களில் நமது முன்னோர் நடத்தியிருக்கின்றனர். நிலத்தின் சொந்தக்காரர் தமது நிலத்தை விற்பதும் அதை மற்றொருவர் வாங்குவதும் பொதுவான முறை. இந்தப் பொதுவான முறையில் மட்டும் அல்லாது நிலத்தைப் பொதுவில் ஏலத்தில் விட்டு அதை ஒருவர் அதிக விலையில் ஏலம் (Auction) கேட்டும் வாங்கியிருக்கின்றனர்.

மற்றொரு முறை மிகவும் வியப்பானதாக இருக்கிறது. அதாவது ஒருவர் ஒரு நிலத்தைத் தாம் வாங்குவதற்குப் பதிலாகப் பிறர் ஒருவரின் பெயரில் நிலத்தை வாங்கியிருக்கிறார். அந்த முறைக்கு **'அந்நிய நாமகரண நிலவிலை** என்று கல்வெட்டு கூறுகிது.

வேறொரு முறை **'கற்பூரவிலை'** என்று வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறைக்கும் ஒவ்வொரு கல்வெட்டை உதாரணமாக எடுத்துக்கொண்டு பார்க்கலாம்.

பொது முறை

முதல் முறைக்குச் சிறந்த உதாரணமாகத் திருவானைக் காக் கோயிலில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டைக்[1] கொள்

1. S. I. I. Vol, IV, No. 424

ளலாம். இக்கல்வெட்டு சோழ மன்னன் மூன்றாம் இராச ராசனின் காலத்தில் பொறிக்கப்பட்டதாகும். பாண்டி குலாசனி வளநாட்டு வினைநாட்டைச் சேர்ந்த திருவானைக் காவில் உள்ள கோவிலில் திருவெண்ணாவல் நிழலின்கீழ் இனிது அமர்ந்தருளிய திரிபுவனபதிக்கு மூலப்ருத்யராகிய ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு ராஜராஜ வள நாட்டுப் பாச்சிற் கூற்றத்தில் உள்ள கீழ்ப்பலாற்றைச் சேர்ந்த வாளாடி என்னும் ஊரில் வாழும் சிலம்பன் பிச்சதேவன் என்பான் தமது நிலத்தை விற்பனை செய்ய ஒப்புக் கொண்டு முதலில் நிலவிலைப்ரமாண இசைவு தீட்டு (Receipt of agreement of selling his land) எழுதித் தருகிறான்.

நிலவிலைப்ரமாண இசைவுத் தீட்டு

நிலவிலைப்ரமாண இசைவுத் தீட்டு என்பது நிலவிலை ப்ரமாணத்துக்கு (Registration of the sale of land) ஒரு முன்னோடி உறுதிச் சீட்டு. அந்த உறுதி அல்லது ஒப்பந்தச் சீட்டில் சிலம்பன் பிச்சதேவன் தனக்கு அந்த நிலம் எப்படி கிடைத்தது என்பதையும் அதனுடைய நான்கு பக்க எல்லைகள், மொத்த நிலத்தின் பரப்பு, அதற்கான விலை ஆகிய அனைத்தையும் கூறிவிட்டு, எதிர்காலத்தில் அதற் கொரு வில்லங்கம் (குத்துக்கால்) ஏற்பட்டால் அதைத் தாமே தீர்த்து வைப்பதாகவும் உறுதிகூறி எழுதித் தருகிறான்.

யார் யாரிடமிருந்து நிலத்தைப் பெற்றான்

சிலம்பன் பிச்சதேவன் செம்பியன்கூற்றிலுள்ள அனைத்து :நிலங்களையும் விலையாக விற்றுத்தருகிறான். அந்நிலங்களை அவன் செம்பியன் கூற்றூர் கிழவன் சீயாரு தேவன் திருவானைக்காவுடையான், அவன் தம்பி திரு நட்டப்பெருமான் கூற்றூர் கிழவன் ஆதித்த தேவன் கூத்தன், கூற்றூர் கிழவன் திருப்பூவணமுடையான் ஆதித்த தேவன், கூற்றூர் கிழவன் உடையபிள்ளை சொக்க ஞான சம்பந்தன், அவன் தம்பி சீயாருதேவன், கூற்றூர் கிழவன்

அவயம்புக்கான் திருநட்டப்பெருமான் ஆகியோரிடமிருந்து விலைக்கு வாங்கியிருக்கிறான்-

நிலத்தின் எல்லை

அந்நிலத்தின் நான்கு பக்க எல்லைகளும் குறிக்கப் பட்டுள்ளன. கிழக்கெல்லையாவது பைங்கணி, பிராய்க்குடி, குமாரங்கலம் ஆகிய ஊர்களின் எல்லைகளுக்கு மேற்கு; தெற்குப்பக்க எல்லை கிரமங்கலம், இலத்துவாணியச் சேரி ஆகிய ஊர்களின் எல்லைக்கு வடக்கு; மேற்குப் பக்க எல்லை பங்கயச் செல்வி நல்லூர் ஆளப்பிறந்த நல்லூர் பேரூர், சிறுதவூர் ஆகிய ஊர்களின் எல்லைக்குக் கிழக்கு; வடக்கு எல்லை நின்றியூர் எல்லைக்குத் தெற்கு. அத்தோடு இவ்வூரைச் சேர்ந்த நிலம் புறவூரில் இருந்தால் அதுவும் இந்நிலத்தோடு சேர்க்கப்படவேண்டும் என்றும் புறவூரைச் சேர்ந்த நிலம் இவ்வூரில் இருந்தால் அது நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மொத்தப் பரப்பும் அதன் விலையும்

நிலத்தின் மொத்த பரப்பு முப்பத்து மூன்றே முக்காணிக் கீழ் அரையே இரண்டுமா. அதற்கான விலை அன்றாடு நற்காசு (Coins that w-re currenti n those days) பதினாறாயிரத்து ஐநூற்று இருபது ஆகும். இவற்றை யெல்லாம் கூறிவிட்டு பின்னால் கூறியிருப்பதுதான் மிகவும் முக்கியமானதாகும்.

"இக்காசு பதினாறாயிரத்தைஞ்ஞூற்றிருபதும் ஆவணக் களரியே காட்டேற்றிக் கைச் செலவறக் கொண்டு விற்று விலைப்ரமாண இசைவு தீட்டுக் கொடுத்தேன் ஆதிசண் டேஸ்வர தேவற்கு இந்த வாளாடி உடையான் சிலம்பன் பிச்சதேவன்...இக்காசு பதினாறாயிரத் தைஞ் நூற்றிரு பதுமே விலையாகவும் இதுவே பொருள் மாவறுதிப் பொருட் செலவோலையாவதாகவும், இதுவல்லது வேறு பொருள்

மாவறுதிப் பொருட் சேலவோலை காட்டக்கடவதல்லாத தாகவும்...'' என்று தொடர்ந்து கூறப்பட்டுள்ளது.

பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை

இதுவே பொருள் மாவறுதிப் பொருட்செலவோலையா வதாகவும் என்பது இந்நிலவிலைப்ரமாண இசைவுத்திட்டே, பொருள் மாவறுதிப் பொருட் செலவோலையாகக் கொள் ளுதல் வேண்டும் என்பதாகும். நிலவிலைப்ரமாண இசைவுத் திட்டு என்ன என்று மேலே கூறப்பட்டுள்ளது. பொருள மாவறுதிப் பொருட்செலவோலை என்பது (Deed of exchanging cash for the object) ஒரு பொருளுக்கு இவ்வளவுதான் விலை என்று நிர்ணயித்து அதை எழுதித் தரும் ஓலையாகும். எனவே இதைப்போன்ற தொரு தனியான ஓலைத் தேவை யில்லை, அந்த நிலவிலை ப்ரமாண இசைவுத்திட்டே போது மானது என்று கருதப்பட்டுள்ளது. அத்தோடு,

'இந்நிலத்துக்கும் இந்நிலத்தால் வந்த ப்ராத்திகளுக்கும் திருவாய் மலர்ந்தருளியபோதே பிரமாணம் பண்ணிக் குடுக்க கடவேனாகவும் குடுத்திலேனேயாகில் இந்தப்ரமாண இசைவு திட்டே பிரமாணமாவதாகவும் இப்படி சம்மதித்து விலைக் கற விற்றுப் பொருளறக் கொண்டு விற்று விலை ப்ரமாண இசைவு திட்டு குடுத்தேன்' என்று தொடர்ந்து எழுதப் பட்டுள்ளது.

ப்ரமாணம் (Registration)

இந்நிலத்தை வாங்கிய ஆதிசண்டேஸ்வர தேவர் எப்பொழுது வேண்டும் என்று கூறுகிறாரோ அப்பொழுதே ப்ரமாணம் பண்ணிக் கொடுப்பேன் என்று விற்பவன் உறுதி யளிக்கிறான். ப்ரமாணம் பண்ணித்தருதல் என்பது இன்றைய பதிவுசெய்து தருதல் (Registration) போன்றது ஆகும். அவ்வாறு பிரமாணம் செய்து தரவில்லையென்றால் நிலவிலை ப்ரமாண இசைவுத் திட்டையே அத்தாட்சியாக

வைத்துக்கொண்டு அவ்வுடைமையை ஆண்டு வரலாம் என்று உறுதி கூறுகிறான்.

மேலே கூறப்பட்டவைகளிலிருந்து நமக்கு ஒன்று புலனாகிறது. அதாவது ஒரு நிலத்தை விற்பனை செய்ய வேண்டுமெனில் முதலில் நிலவிலை ப்ரமாண இசைவுத் தீட்டு எழுத வேண்டும் என்பதும், பின்னர் பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை தர வேண்டும் என்பதும், பின்னர், இறுதியாகப் ப்ரமாணம் பண்ணித் தருதல் வேண்டும் என்பதும் ஆகும்.

சிவன் கோயிலுக்கு நிலம் விற்றல்

மற்றொன்று சிவன் கோயிலுக்கு நிலம் விற்பனை செய்தால் சண்டேஸ்வரசுவாமி பேரில்தான் விற்பனை செய்யப்படும் என்பது இக்கல்வெட்டினாலும் வேறுசில கல்வெட்டுகளினாலும் தெரிய வருகின்றன. பெருமாள் கோயிலுக்கு நிலம் விற்பனை செய்தால் ஸ்ரீ ஸேநாபதிப் பெயரில் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

கையொப்பம்

இறுதியில் அவ்விசைவுத் தீட்டை எழுதியவனின் கையொப்பம் 'பணியால் இந்த நிலவிலை ப்ரமாண இசைவு தீட்டு எழுதினேன் இவ்வூர் மத்யஸ்தன் மாதான மங்கலமுடையான் தேர்பொலிய நின்றான் பஞ்சனெதிவாணன் இவை என் எழுத்து' என்று பொறிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அந்நிலத்தை விற்பனை செய்த வாளாடி உடையான் சிலம்பன் பிச்சதேவனின் கையெழுத்தும், சிலம்பன் பிச்சதேவன் யார் யாரிடமிருந்து அந்நிலத்தை வாங்கினானோ அவர்களின் கையெழுத்துக்களும், மற்றும் சில நாட்டுத் தலைவர்களின் கையொப்பங்களும் காணப்படுகின்றன.

ஏலத்தின் மூலம் நிலம் விற்பனை (பெரு விலை)

இதுவரையில் கூறிவந்தவை பொதுவான முறையில் நில விற்பனை செய்துவந்த முறை. எல்லார்க்கும் பொதுவில்

ஏலம் விட்டு நிலம் விற்பனை செய்யும் முறையை மற்ருெரு கல்வெட்டின் துணை கொண்டு காணலாம். காஞ்சிபுரத்திலுள்ள அருளாளப் பெருமாள் கோயிலின் தாயார் சன்னதியின் நுழைவாயிலில் வலதுப்பக்கத்தில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது[2]. கல்வெட்டு விஜயநகர மன்னர் வீரகம்பண உடையார் காலத்தில் அதாவது சக ஆண்டு 1288-இல் (கி.பி. 1366) எழுதப்பெற்றிருக்கிறது. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நகரமான காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திருவத்தியூரில் நின்றருளும் பெருமாள் கோயிலில் தாதிச்சிகளாய்ப்[3] பணிபுரிவாரில் அக்கச்சி மகள் முதலியார் நாச்சியார் ஆன எல்லாந் தலையான பெருமாள், அருளாளப் பெருமாள் கோயிலில் திருப்புறக்கொடையாக அளித்துத் தாம் காணியாட்சியாக அனுபவித்துவரும் இரண்டு கோல் அளவுள்ள மனையைக் கொள்வார் யாரேனும் உளரோ என்று கூற, இம்மொழி கேட்டு எதிர்மொழி கொடுத்தோன் ஆபஸ்தம்ப ஸூத்ரத்து பாரத்வாஜ கோத்திரத்து அண்ணர் கொப்பண்ணங்கள் பிள்ளைகளில் ஐயண்ணங்களென், விலைகுறித்தால் கொள்வேன் என்று கூற, முற்கூறிய முதலியார் நாச்சி ஆன எல்லாந் தலையான பெருமாள் தாதிச்சியும் பிற்கூறிய அண்ணர் கொப்பணங்கள் மகனார் ஐய்யணங்களும் ''எம்மிலசைந்த விலைப் பொருள் அன்ருடு நடக்கும் வாசிப்படா நற்பணம் உயஎ(27)'' என்று ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

ப்ரமாணம் செய்வதில் விரைவு

இக் கல்வெட்டில் மனையை விற்பவர் எல்லாருக்கும் பொதுவில் வந்து தம் மனையைக் கொள்வார் (வாங்குவார்) யாரேனும் உளரோ என்று வினவுகிருர். அப்பொழுது ஒருவர் 'என்ன விலை என்று தெரிவித்தால் வாங்குவேன்' என்று அறிவிக்கிருர். பிறகு இருவரும் ஒரு விலைக்குச்

2. S. I. I. Vol. IV, No. 504

3. தாதிச்சிதான் பிற்காலத்தில் தாசி என்று மருவியது போலும்.

சம்மதிக்கின்றனர். இம்மாதிரி எல்லாருக்கும் மத்தியில் தற்காலத்தில் ஏலம் விடுவதைப் போன்று கேட்டு பின்னர் விற்பதைக் கல்வெட்டுகள் பெருவிலை என்று கூறுகின்றன. இம்மாதிரி விற்பனை செய்தால் நேரே விலை ப்ரமாணம் செய்துவிடுகிறார்கள்.

இத்தகைய விற்பனையில் நிலவிலை ப்ரமாண இசைவுத் தீட்டு பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை ஆகியவை தேவைப்படவில்லை. இது எதைக் காட்டுகிறது எனில் ஏலத்தில் விற்பவன் உடனே காசைப் பெற்றுக் கொள்கிறானல்லவா, அதைப் போன்று உள்ளது. ஏனெனில் காலம் கடந்தால் இன்ன விலைக்கு வாங்குகிறேன் என்று கூறியவன் வாங்க மறுத்தாலும் மறுக்கலாம். விற்பவனும் வேறு விலையை எதிர்பார்க்கலாம். இவ்விலை திடீரென்று கேட்ட விலைதானே, எனவே காலத்தைக் கடத்தாது நேராக ப்ரமாணம் செய்து கொடுத்து விடுகின்றனர். ஆனால் இத்தகைய விற்பனையிலும் விற்கும் பொருளுக்கு ஏதேனும் கலம் இருந்தால் (வில்லங்கம் இருந்தால்) அதை விற்பவர் தீர்த்துத் தருவதாக உறுதியளிக்கிறார்.

அந்நிய நாமகரணத் தீட்டு

மூன்றாவது முறையில், நிலத்தைக் காசு கொடுத்து வாங்குபவர் ஒருவராகவும் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்வது வேறொருவராகவும் காணப்படுகிறது. இவ்வகைக்கு உதாரணமாகத் தில்லை நடராசப் பெருமான் கோயிலில் இரண்டாம் திருச்சுற்றில் காணப்படும் கல்வெட்டைக் காட்டலாம்.[4] இக் கல்வெட்டு சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது, இராஜாதிராஜ வளநாட்டுத் தனியூர், பெரும்பற்றப்புலியூர் வாச்சியன் திருச்சிற்றம்பலமுடையான் சங்கரநான தென்னவன் பிரமாயராயன் என்பான், இராஜேந்திர சோழரான சுங்கந்தவிர்த்தருளின குலோத்துங்க சோழ தேவர் மகளார் அம்மங்கையாழ்வாரான பெரிய நாச்சியார்க்கு 'அந்நிய நாம

4. S. I. I. Vol, IV. No. 356

கரணத்தீட்டு எழுதித் தந்திருக்கிறான். அவ்வாறு அந்நிய நாமகரணத்தீட்டு எழுதும்பொழுது அந்நிலம் அந்நிய நாம கரண விலையால் வாங்கப்பெற்றது என்பதையும் குறிக்கிறான்.

யார் காசு கொடுத்து, யார் உரிமை பாராட்டுவது

திருச்சிற்றம்பலமுடையான், இவன் மகன் திருச்சிற்றம் பலமுடையான் நக்கன், மேலும் சிலர் ஆகிய "இவ்வனைவரும் ஆக இவ்விருவரும் பக்கல் அம்மங்கை ஆழ்வார் வாச்சியன் திருச்சிற்றம்பலமுடையான் சங்கரனான தென்னவன் பிரமாய ராயன், இவர் (அம்மங்கை ஆழ்வார்) தம்முடைய காசை யிட்டு, என் பேராலே (தென்னவன் பிரமாயராயன்)" அந்நிய நாமகரணத்தால் விலைக்கு நிலத்தைப்பெற்றிருக் கிறார். அதைத்தான் பெற்றுக்கொண்டு தென்னவன் பிரமாயராயன் அந்நிய நாமகரணத் தீட்டு எழுதித் தருகிறான்.

எதிர்கால விளைவுகளுக்குத் தீர்வு

இந்நிலம் வாங்குவதற்குக் காசு தந்தது அம்மங்கை ஆழ்வார். ஆனால் தென்னவன் பிரமாயராயன் பெயரில் விலை ப்ரமாணம் எழுதப்பட்டு அனுபவிக்கும் உரிமை தென்னவன் பிரமாயராயனுக்குச் சேர்கிறது. அவ்வாறு சேர்வதால் எதிர் காலத்தில் அந்நிலம் தனக்குச் சொந்தம் என்று பிரமாய ராயன் உரிமை பாராட்டிவிடக் கூடாதே என்று கருத்தில் கொண்டு பிரமாயராயனிடமிருந்தே அந்நிய நாமகரணத் தீட்டு எழுதி வாங்கப்படுகிறது. அத்தீட்டின் மூலம் யார் அந்நிலம் வாங்குவதற்குக் காசு தந்தது என்பதையும் தம் பெயரில் அது எவ்வாறு எழுதப்பெற்றது என்பதையும் நன்கு விளக்கி அவன் கையொப்பம் இட்டு தருகிறான். இதன்மூலம் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய தேவையற்ற பிரச்சினைகள் தடுக்கப்படுகின்றன.

கற்பூர விலை

மற்றொரு முறையிலும் நில விற்பனை நடந்திருக்கிறது. இதைக் 'கற்பூரவிலை' என்று கல்வெட்டுகள் அழைக்கின்றன.

இம் முறையில் நிலத்தை விற்பவர்கள் ஒரு கோவிலைச்சார்ந்த எல்லாருமாகவும் வாங்குபவன் ஒருவனுகவும் காணப்படுகின்றனர். இது சில சமயங்களில் மாறுபட்டும் காணப்படலாம். பயிரிடப்படாமல் தரிசாகக் கிடக்கும் ஒரு நிலத்தை ஒருவனிடம் கற்பூரவிலைக்கு விற்று, அவனிடம் ஆண்டுக்காண்டு ஒரு குறிப்பிட்ட அளவு நெல்லைப் பெறுவது இம் முறையாகும்.

மதுரைக் கல்வெட்டு

மதுரையிலுள்ள சுந்தரேசுவரர் கோயிலில் காணப்படும் வீரபாண்டிய தேவன் காலத்தியக் கல்வெட்டை[5] இம் முறைக்கு எடுத்துக் காட்டாகக் காட்டலாம். உடையார் திருவாலவாயுடைய நாயனார் கோயில் பங்காளர் தேவகன்மி மாஹேஸ்வரக் கண்காணி செய்பவர்கள், உயைடாரீ வாதுசெய்தவாரணமுடைய நாயனுர் கோயிலைச் சேர்ந்த கைக்கோளரில் மாதேவர் அழகிய சொக்கனாரான சுந்தரபாண்டிய கோனார்க்குக் காராண்மைக் காணியாக 'கற்பூரவிலை' கொண்டு விலை ப்ரமாணம் செய்துகொடுக்கிருர்கள். அவர்கள் விலை ப்ரமாணம் செய்துகொடுக்கும் நிலம் 'நெடுங்காலம் வரம்பழிந்து பருமாக் காடாய்க் கிடைக்கயால்' அதைக் காராண்மை செய்து காராண்மைக் காணியாக அனுபவிப்பதற்காக கற்பூரவிலை நிச்சயித்த புதுக் குளிகை பணம் உளருய (250). இந்நிலத்தை வாங்கியவர் எவ்லாவித வரிகளையும் செலுத்திக்கொள்ளல் வேண்டும். அதோடு முதலாண்டு அவ்வூர் 'பதினெட்டடிகோல்ப்படி மாத்தால் (மா ஒன்றுக்கு) நாற்கலமும், இதனெதிராமாண்டு (இதன் அடுத்த ஆண்டு) மாத்தால் நெல்லறுகலமும், இதன் எதிராமாண்டு நெல்லுப் பதின் கலமும், இதன் எதிராமாண்டு மாத்தால் நெல்லுப் பன்னிருகலமும், இதனெதிராமாண்டு முதல் நிலைவரிசை மாத்தால் நெல்லு பதினைங்கலமாக கோயிலுக்கு இறுப்பித்து வரவேண்டும்.

---

5. S. I. I. Vol. IV, No. 226

முழு உரிமை இல்லை

இம்முறைப்படி நிலத்தை வாங்கியவன் நிலத்தின் மீது முழு உரிமையைப் பாராட்ட முடியாது போன்று தெரிகிறது. நிலத்தில் கிடைக்கும் வருமானத்தை அதிக அளவில் பயன் படுத்திக் கொள்ளலாம் அவ்வளவுதான். நிலம் வாங்கிய பிறகு முதல் ஐந்து ஆண்டுகள் அவன் அந்நிலத்தைச் செம்மைப்படுத்துவதற்காக மிகவும் குறைந்த அளவில் கோயிலுக்குப் பங்கு செலுத்துகிறான். பின்னர் ஒரு நிலையான அளவு பங்கு செலுத்த வேண்டியவனாகக் காணப் பெறுகிறான்.

பண்டைய மக்களின் நுண்ணறிவு

இவ்வாறு பல முறைகளில் மிகுந்த பாதுகாப்பான முறையில் நிலவிற்பனைகள் நடைபெற்றிருக்கின்றன. இவை அனைத்தும் அக்கால மக்களின் நுண்ணிய அறிவுக்கும், முறையான வாழ்வுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன.

கட்டிணைபருமர்

சென்ற சில ஆண்டுகளில் தமிழ் நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை தருமபுரி மாவட்டத்தில் நடத்திய கல்வெட்டு ஆய்வில் நான்கு புதிய கல்வெட்டுகளைப் படி யெடுத்துள்ளது. இவை கட்டிணைபருமர் என்ற மன்னன் காலத்தில் எழுதப்பெற்றவையாகும். நான்கு கல்வெட்டு களும் வட்டெழுத்தில் எழுதப்பெற்றுள்ளன.

ஊத்தங்கரை வட்டம், இராமகிருஷ்ணம்பதி, நாயக்க னூர், போத்தன்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து ஊருக்கு ஒன்றாக மூன்று கல்வெட்டுகளும், அரூர் வட்டம் கூட்டுத் துறை, கைலாவரம் என்னுமிடங்களிலிருந்து இரு கல்வெட்டு களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இராமகிருஷ்ணம்பதிக் கல் வெட்டு மன்னனின் பத்தாம் ஆட்சி ஆண்டிலும், போத்தன் கோட்டைக் கல்வெட்டு இருபத்தாறும் ஆட்சி ஆண்டிலும், நாயக்கனூர்க் கல்வெட்டு நாற்பத்தேழாம் ஆட்சி ஆண்டி லும், கூட்டுத்துறைக் கல்வெட்டு ஐம்பத்தேழாம் ஆட்சி ஆண்டிலும், கைலாவரம் கல்வெட்டு முப்பத்தேழாவது ஆட்சி ஆண்டிலும் பொறிக்கபெற்றுள்ளவை.

இக்கல்வெட்டுகளில் குறிக்கப்படும் கட்டிணைபருமர் எந்த குலத்தைச் சார்ந்த மன்னன் என்பதையும், எந்த

---

1. தருமபுரி நடுகற்கள். 1972/41
2. Ibld. 1973/5

நூற்ருண்டுகளில் அவன் ஆட்சி செய்தான் என்பதையும் காணுதல் அவசியம். ஊத்தங்கரை வட்டம் போத்தன் கோட்டையிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இம்மன்னனை 'ஸிரி பிருதி கங்கதி கட்டிணைபருமர்' என்று குறிக்கிறது. இதன் மூலம் இவன் கங்ககுலத்தைச் சார்ந்த மன்னன் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இவன் ஆண்ட நூற்ருண்டை வரையறுப்பது அவ்வளவு எளிதாக இல்லை. ஏனெனில் இதுவரையில் நமக்கு அறிமுகமாகியுள்ள கங்க மன்னர்களில் கட்டிணைபருமர் என்ற மன்னர் குறிக்கப்படவில்லை. ஆகவே கிருட்டிணவர்மன் என்ற சொல்லின் திரிபாகக் கட்டிணைபருமர் இருக்கலாமோ என்று எண்ணலாம். கங்க குலத்தில் கிருட்டிணவர்மன் என்ற மன்னன் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டில் தான் (சுமார் கி. பி 450) ஆட்சி புரிந்திருக்கிருன். இக்கல்வெட்டுகளின் வட்டெழுத்து அமைதியைக் கொண்டு பார்க்கையிலும், அதில் குறிக்கப்பெறும் பிற குல அரசர்களைக் காண்கையிலும், கி. பி. எட்டாம் நூற்ருண்டுக்கு முந்தியதாக இக்கல்வெட்டுகளைக் குறிக்க இயலாது.

இராட்டிரக் கூட மன்னன் முதலாம் கிருஷ்ணன் (கி. பி. 756–775) இக்காலக் கட்டத்தில் ஆட்சி செய்திருக்கிருன். ஆனுல் போத்தன் கோட்டைக் கல்வெட்டில் 'பிருதி கங்கதி கட்டிணைபருமர்' என்று தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்த லால் இம்மன்னன் இராட்டிரகூட மன்னனுக இருத்தல் முடியாது. அவ்வாறெனில் இக்கட்டிணைபருமர் யார்?

மைசூர் மாநிலத்தில் ஹிரே மதுரே என்னும் ஊரிலிருந்து ஒரு நடு கல் கல்வெட்டு படியெடுக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டு 'கத்திஅரசர கொங்குனி அரசர' என்று குறிக்கிறது. இதைப் பதிப்பித்தவர்கள் 'கொங்குனி அரசர் கத்தி அரசரின் மகனுகவோ அல்லது கீழ்படிந்த, சிற்றரசராகவோ இருத்தல் வேண்டும் என்று கூறிவிட்டு, 'கங்க மன்னன் சிவமாரவர்மனுக்குக் கத்தி அரசன் என்ற ஒரு

பட்டப்பெயர் இருந்ததுவோ என்று தெரியவில்லை' என்று கூறியிருக்கிறார்கள். இந்த சொற்றொடர் கட்டிணைபருமர் யார் என்று அடையாளம் காண்பதற்குத் துணை நிற்கிறது.

கட்டிணைபருமரின் ஐம்பத்தேழாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு கிடைக்கப்பெற்றுள்ள கூட்டுத்துறை என்ற ஊரின் அண்மையில் கட்ரசம்பட்டி என்ற ஓர் ஊர் உள்ளது. இவ்வூருக்கும் கணப்பனூருக்கும் நடுவில் உள்ள நொண்டி வேடியப்பன் கோயிலிலிருந்து வட்டெழுத்திலுள்ள சிவமார வர்மனின் 47 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.[3] இக்கல்வெட்டின் எழுத்தமைதியும் கூட்டுத்துறைக் கல்வெட்டின் எழுத்தமைதியும் ஒன்றாகவே காணப்படுகிறது. எனவே இச்சிவமாரன்தான் கட்டிணை பருமர் என்ற ஒரு பட்டப் பெயரையும் பூண்டிருந்தானோ என்று எண்ணலாம்.

அத்தோடு கட்ரசம்பேட்டை என்று இன்று வழங்கும் இவ்வூரும் 'கட்டி அரசன் பேட்டை' என்பதின் திரிபாக இருக்கலாமோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. ஹிரே மதுரே கல்வெட்டில் காணப்படும் 'கத்தியரசர்' கட்டிணை பருமரைக் குறிப்பதாக இருக்கலாமோ என்றும் ஊகிக்கத் தோன்றுகிறது. மேலே உள்ள ஊகங்கள் இப்போதைக்குச் சரி என்று கொண்டால் கட்டிணைபருமர், கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த கங்க மன்னன் சிவமாரன்தான் என்ற முடிவுக்கு வரலாம். ஹிரே மதுரே கல்வெட்டும் கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததே.

கட்ரசம் பேட்டைக்கு அருகில் கிடைத்துள்ள சிவ மாரனின் கல்வெட்டில் 'கந்த வாண்ணதி அரைசர் புறமலை நாடாள' என்று குறிக்கப்படுகிறது. அதே போன்று கூட்டுத் துறையில் கிடைத்துள்ள கட்டிணைபருமர் கல்வெட்டிலும் 'கந்தவாணதி அரையர் புறமலை நாடாள' என்று எழுதப் பெற்றுள்ளது. இந்த இரண்டு கல்வெட்டுகளும் புறமலைப்

3. தருமபுரி நடுகற்கள். 1973/6

பகுதியைக் கந்தவாணதி அரையர் ஆண்டார் என்று குறிப்பிடுவதால் கட்டிலேணபருமர், சிவமாரபருமர் ஆகிய இருவருமே ஒருவராக இருக்கலாம் என்று கொள்ளலாம்.

கங்க மன்னன் சிவமாரபருமர் தனது ஆட்சியின் தொடக்கக் காலத்தில் சாளுக்கியர்களோடு சேர்ந்து பல்லவர்களையும் ராட்டிர கூடர்களையும் எதிர்த்திருக்கிறுன். பல்லவ மன்னனுல் சிறையிடப்பட்டு, பின்னர் கி. பி. 813இல் திரும்பவும் தலேக்காட்டில் பல்லவ ராட்டிர கூட அரசர்களால் முடிசூட்டப் பெற்றிருக்கிறுன்.

சிவமாரபருமர் 57 ஆண்டுகள் வரை ஆண்டுள்ளார் என்பது கூட்டுத்துறை கல்வெட்டு மூலம் புலனுவதால் அவர் கி.பி. 788 முதல் கி. பி. 845 வரை ஆண்டுள்ளார் என்பது உறுதியாகிறது. இவர் காலத்தில் கோலூர் நாட்டைச் சிங்கபருமர் என்பவர் ஆண்டிருக்கிறுர். இச் சிங்கபருமர் நுளம்ப மன்னராக இருக்கலாம். சுமார் கி. பி. 790ஐச் சேர்ந்த நுளம்ப மன்னன் சிங்கபருமனுடைய கல்வெட்டு ஒன்று ஹிரே மதுரேவிலிருந்து சிறிதே தொலேவிலுள்ள சிக்க மதுரே என்னும் ஊரில் கிடைத்துள்ளது.

திருவிடை மருதூரில் ஒரு வழக்கு

இன்று நாட்டிலே ஏற்படுகின்ற பலவித வழக்குகளையும் அவைகள் நீதிமன்றங்களில் தீர்க்கப்படுகின்ற முறைமையினையும் நாம் அனைவரும் அறிவோம். சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தை அடுத்துள்ள திருவிடை மருதூரில் ஒரு வழக்கு நிகழ்ந்திருக்கிறது. அது தீர்க்கப்பட்ட விதம் இன்றைய நீதித் துறையினரும் கடைப்பிடிக்கவேண்டிய விதத்தில் அமைந்திருப்பதை இங்குக் காணலாம்.

அப்பொழுது திருவிடை மருதூர்ப் பகுதி விஜயநகர மன்னன் சதாசிவ தேவராயரின் ஆட்சிக்குள் அடங்கிய பகுதியாகும். காலம் சக ஆண்டு 1466. அதாவது கி. பி. 1544.

இராமராஜ விட்டலதேவ மஹாராஜர் என்பவர் சோழ மண்டலத்தில் காவேரி தீரத்தில் தென்பகுதியில் உள்ள உய்யக் கொண்ட சோழ வள நாட்டில் அடங்கிய திரைமூர் நாட்டுத் திருவிடை மருதூர் உடைய தம்பிரானாற்கு, புத்து ஆற்றுக்கு வடக்கே உள்ள ஆவணம், சிற்றாடி ஆகிய ஊர்களை மருதப்பர் திருநாமத்துக்காணி யாகக் கொடையளித்து, அவ்விரு ஊர்களும். நெடு நாட்களாகக் கோயில் பற்றாக இருந்து வந்திருக்கின்றன.

அவ்வாறாக இருந்து வருகின்ற நாளில் அவ்வூர்க் கருவூல அதிகாரி, அது தமக்கு அளிக்கப்பட்ட பண்டார

வாடை என்று கூறி அனுபவித்துவந்தார். அத்தகாத செயலைத் திருவிடை மருதூருடைய தம்பிரானார் திருக் கோயில் தேவகன்மிகளில் (தேவர் பணி புரிவார்) திருச் சிற்றம்பல பட்டர் மங்காமற் காத்தார் என்பவர் அரசனிடத் தில் சென்று முறையிடுகின்ருர். அந்நிகழ்ச்சியைக் கல்வெட்டு,

> "வீரப்பிரதாப ஸ்ரீமந் மஹா மண்டலேஸ்வர இராமராஜ விட்டலதேவ மகா இராஜர் சோழ மண்டலத்து காவேரி தீரத்து தென்கால் உய்யக் கொண்ட சோழ வளநாட்டுத் திருவிடை மருதூர் திருவிடை மருதூருடைய தம்பிரானாற்கு தற்மசிலா சானம் பணிக்குடுத்தபடி, மருதப்பர் திருநாமத்துக் காணியாய் பூறுவம் நடந்து புத்து ஆற்றுக்கு வடக்கு ஆவணமும் சிற்ருடியும் இந்த இரண்டு கிருமமும் பூறுவம் கோயிற்பற்ருக நடக்கயிலே, அன்னாளிலே பண்டார வாடைக்காரர் கட்டிக்கொண்டு பண்டார வாடை ஆகப் போகையில், இப்பொழுது இது காரியமாக திருவிடை மருதூருடைய தம்பிரானுர் திருக்கோயில் தேவகன்மிகளில் திருச்சிற்றம்பல பட்டர் மங்காமற் காத்தார் இன்னயினுர் கோயிற் பற்று என்று நமக்கு விண்ணப்பம் செய்து" என்று கூறிச்செல்கிறது.

பண்டார வாடைக்காரர் தமது நிலமென்று ஆக்கிர மித்துக் கொண்ட நிகழ்ச்சி பற்றி பலமுறை முறையீடுகள் வந்ததின் பேரில், அரசர் வரி வசூலுக்காகத் தெற்கே அநந்தசயநம் வரையிலும் வடக்கே முதுகல்லு வரையிலும் வந்தபோது, தாம் முதுகல்லிலே இருந்துகொண்டு, முத்திரை வாங்கி (அரச முத்திரை உள்ளதா என்று சோதிப்பவர்) என்ற பதவி வகித்த இலிங்கயர் மனுஷ்யரையும், தூளி நயினாரையும் திருச்சிற்றம்பல பட்டர் சொன்னது போன்று 'கோயில் பற்று' என்று நிரூபிப்பதற்கு ஆவணம், சிற்றாடி ஆகிய ஊர்களில் மருதப்பர் முத்திரை பொறித்த எல்லேக்கல் நிற்கிறதா என்று ஆய்ந்து வருவதற்கு அனுப்புகிருர்.

அவர்கள் அவ்வூர்களுக்குச் சென்று ஆய்ந்து வந்து அவ் வண்ணமே எல்லைக் கற்கள் நிற்பதாகக் கூறுகின்றனர். அவர்கள் கூறிய செய்தியின் அடிப்படையில் அவ்வூர்கள் திருவிடை மருதூருடைய தம்பிரானாரின் கோயிற்பற்றுதான் என்று அரசர் தீர்ப்பளித்து அதற்கான அரசாணையைத் (இராயஸம்) திருச்சிற்றம்பல பட்டர் கையில் கொடுக் கின்றார். இந்த முக்கியச் செய்தியைக் கீழ்வரும் கல்வெட்டுப் பகுதி புலப்படுத்துகிறது.

> ''நாம் திருவடி பேரிலே தண்டு வந்தபொழுது நம்முடனே கூட தெற்கு அநந்த சயநம் வடக்கு முதுகல்லு ஸஹிதமாகத் தண்டுபண்ணி பூறுவம் கோயிற்பற்று என்று பலகாலும் விண்ணப்பம் செய்து நாமும் அந்தக் கிருமங்களிலே மருதப்பர் முத்திரை எல்லைக் கல்லு நிற்கிறது உண்டோ என்று நம்முடைய முத்திரை வாங்கி இலிங்கயர் மனுஷரையும், தூளி நாயினாரையும் நாம் முது கல்லிலே இருந்து திருச்சிற்றம்பல பட்டர் சொன் ளுப் போல எல்லைக்கல்லு நிற்கிறதோ என்று பாற்க அனுப்பி வரக் காட்டி விசாரித்து பூறுவம் கோயிற்பற்று என்கிறதுக்கு இரண்டு ஊரிலும் கல்லு நிற்குது என்று பார்த்து வந்து நமக்கு விண்ணப்பம் செய்கையில் நாமும் அந்தப் படிக்கு இராயஸமும் (அரசாணை) வாங்கிக் குடுத்து சங்கிறம புண்ணிய காலத்திலே திருச்சிற்றம்பல பட்டர் கையிலே உதகம் பண்ணிக் குடுத்து...''

அக் காலத்தில் மக்களுக்கு ஏதேனும் ஒரு குறை யென்றால் நேரே மன்னரிடம் சென்று முறையிடுவதற்கு வாய்ப்பு இருந்தது என்பதும்; மன்னன் எதையுமே தீர விசாரித்த பின்னர்தான் தீர்ப்பு வழங்கினான் என்பதும்; முத்திரைகளைச் சோதிப்பதற்காக 'முத்திரை வாங்கி' என்று ஒரு அதிகாரி இருந்திருக்கிறார் என்பதும் இக்கல் வெட்டினால் தெளிவாகின்றன.

நினைவுச் சின்னங்கள்

மிகப் பழங்காலந் தொட்டு இந்தியாவில் பலருக்குப் பல காரணங்களுக்காக நினைவுச் சின்னங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் போரில் வீர மரணம் எய்தினுலோ, அல்லது ஒருவர் செயற்கரிய செயல் ஏதேனும் புரிந்தாலோ, அல்லது மிகவும் பயனுள்ள கொள்கையைப் பரப்பினுலோ அவருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்புவதும் அவரது பெயரை ஊருக்கு, தெருவுக்கு, வேறொரு பொருளுக்கு இட்டு அழைப்பதும் எல்லாரும் விரும்பி ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒரு செயலாக இருந்து வந்திருக்கிறது.

மஹாவீரர், புத்தர்

நாட்டிலே அற உரைகளைப் போதித்து வந்த மஹாவீரர், புத்தர் போன்ற மதப் பெரியார்களுக்கு உருவச் சிலைகள் வைத்து வணங்கப்பட்டு வருகிறது. புத்தரின் பல், எலும்புத் தூண்டு ஆகியவற்றை உள்ளடக்கிய புத்த சைத்தியங்கள் ஏற்படுத்தப்பட்டவை புத்தருக்காக எடுப்பிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாகும். புத்தருடைய தீரச்செயல்களை விவரிக்கும் புத்த ஜாதகக் கதையைச் சைத்யங்களின் தோரண வாயில்களில் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டிருப்பது புத்தரின் தீரச் செயல்களை நினைவு கூறும் வகையில் அமைக்கப்பட்டிருப்பவைகளாகும்.

சைவ, வைணவப் பெரியார்களின் பிரதிமங்கள்

தமிழகத்தில் சைவத்தையும், வைணவத்தையும் தங்களது திருப்பாசுரங்களால் பரப்பி வந்த சைவ சமயக் குரவர்களுக்கும், வைணவப் பெரியார்களுக்கும் செப்புப் பிரதிமங்களும், கற்சிலைகளும் செய்துவைத்து பெருமன்னர்களும், முக்கிய அரசு அதிகாரிகளும் வணங்கிவந்தவை அவர்களுக்காக எடுக்கப்பட்ட நினைவுச் சின்னங்களேயாகும்.

தமிழகத்திலே உள்ள ஒவ்வொரு கோயிலிலும் இப் பெரியார்களின் உருவச்சிலைகளையும், செப்புப் பிரதிமங்களை யும் நாம் காணலாம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பெருவேந்தன் இராஜராஜனின் முக்கிய அதிகாரியொருவர் சைவ அடியார்களைச் செப்புப்பிரதிமங்களாகச் செய்து வைத்த செய்தி கல்வெட்டிலே பொறிக்கப்பட்டுள்ளது.

பெரு மன்னர்களுக்கும் பேரரசிகளுக்கும் நினைவுச் சின்னங்கள்

பல்லவ, சோழ, பாண்டியர்களின் பெயர்களால் பல சிவ, விஷ்ணு ஆலயங்கள் தமிழகத்தில் எடுக்கப்பட்டிருந்த செய்தி கல்வெட்டுகளால் புலப்படுகின்றன. உதாரணமாக மாமல்லையில் இராஜசிம்ம பல்லவீச்சுரம் க்ஷத்திரிய சிம்ம பல்லவீச்சுரம் ஆகிய கோயில்கள் பல்லவ மன்னன் இராஜசிம்மனின் பெயராலும், நார்த்தாமலையில் உள்ள விஜயாலய சோழீச்சுரம், தொண்டைமானுற்றூரில் காணப் படும் ஆதித்திய சோழீச்சுரம், தஞ்சையிலுள்ள இராஜராஜீச் சுரம் ஆகியவை முறையே விஜயாலயன், ஆதித்தன், இராஜராஜன் ஆகியவர்களின் நினைவாக எழுப்பப்பட்ட கோயில்கள் ஆகும்.

முதலாம் பராந்தகனின் மகனுன கண்டராதித்தன் சைவப்பழமாகத் திகழ்ந்து திருவிசைப்பா பாடி புகழ் பெற்றிருக்கிருன். அவனது திருவுருவத்தைச் செய்தமைத்து வணங்கி வந்திருக்கிருள் அவனது பேரரசி செம்பியன்

மாதேவி. முதலாம் இராஜராஜனின் திருவுருவச்சிலை தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் செப்புத் திருமேனியாக இருந்த செய்தியும் அறிந்த ஒன்று.

சோழப் பேரரசிகளாகிய செம்பியன்மாதேவி, ஒலோக மாதேவி ஆகியவர்களுக்கும் செப்புப் பிரதிமங்கள் செய்யப் பட்டிருக்கின்றன.

மன்னர்கள், அரசிகள் பெயரால் ஊர்கள், அங்காடி, பெருவழி

மதுராந்தக நல்லூர் என்று பராந்தகனின் பெயராலும், கேரளாந்தக நல்லூர், சிங்களாந்தகநல்லூர் என்று முதல் இராஜராஜனின் பட்டப்பெயர்களாலும், வீரராஜேந்திரச் சருப்பேதிமங்கலம் என்று வீரராஜேந்திரனின் பெயராலும் ஊர்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

செம்பியன் மாதேவி, ஒலோகமாதேவி நல்லூர், குந்தவைச் சதுர்வேதிமங்கலம் என்று முறையே கண்டராதித்தனின் பேரரசி செம்பியன்மாதேவி, முதலாம் ராஜராஜனின் பட்டத்தரசி ஒலோகமாதேவி, இராஜ ராஜனின் தமக்கை குந்தவை ஆகிய அரசிகளின் பெயராலும் ஊர்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

நாளங்காடி பல முதலாம் இராஜராஜனின் பல்வேறு பட்டப் பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கின்றன என்பது தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகளால் புலப்படுகிறது.

அதேபோன்று பெருவழிகளும் மன்னர்களின் பெயர் களால் அழைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக இராச கேசரிப் பெருவழி, அதியமான் பெருவழி ஆகியவைகளைக் காட்டலாம். தெருக்களும் மன்னர்களின் பெயர்களால், வழங்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக விக்கிரம பாண்டியன் திருவீதியைக் குறிப்பிடலாம்.

அளவுகோல்கள், முகத்தல் அளவுக்கருவிகள், இசை வாத்தியங்கள், திருப்பரிகலங்கள் ஆகியவைகூட மன்னர் களின் பெயர்தாங்கி இருந்திருக்கின்றன. இவைகள் அனைத் தும் அம்மன்னர்களின் நினைவாக ஏற்படுத்தப்பட்டனவே யாகும்.

ஏரி, கிணறு ஆகியவற்றுக்கு மன்னர் பெயர்

தமிழகத்திலே உள்ள மிகப் பெரிய ஏரிகளில் மதுராந் தகன் ஏரி, வீரநாராயணன் ஏரி ஆகியவை முக்கியமானவை யாகும். மதுராந்தகன், வீரநாராயணன் போன்ற பெயர்கள் முதலாம் பாரந்தகனின் பட்டப்பெயர்களாகும். எனவே பராந்தகனின் பெயரை ஏரிக்கும் சூட்டி தமிழினம் மகிழ்ந் திருக்கிறது.

மாற்பிடுகு பெருங்கிணறு என்று கிணற்றுக்குப் பெயர் இருந்திருக்கிறது. மாற்பிடுகு, பல்லவ மன்னர்களின் பட்டப் பெயராகும். எனவே கிணற்றுக்கும் மன்னர்களின் பெயரை வைத்து அழகு பார்த்திருக்கிற சிறப்பைத் தமிழர்கள் பெற் றிருக்கிறார்கள்.

நாட்டுப் பெரும் பிரிவுக்கு மன்னனின் பெயர்

தமிழகத்தை மண்டலம், வளநாடு, கூற்றம், ஊர் என்று பலபிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். முதலாம் இராஜராஜன் தமது பட்டப் பெயர்கள் அனைத்தாலும் வளநாட்டுக்குப் பெயரிட்டு க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, இராஜராஜ வள நாடு, முடிகொண்ட சோழவளநாடு, உய்யக் கொண்டார் சோழ வளநாடு போன்று பல பெயர் இட்டு அழைத்திருக்கிறான்.

வெற்றியின் சின்னங்கள்

போரில் இறந்து வீழ்ந்த வீர மறவர்களுக்குக் கல் எடுத்து, உரு பொறித்து, வீர மரணத்தின் காரணத்தை எழுத்துக்களால் எழுதி நினைவு கூர்ந்திருக்கிறது தமிழினம்.

வீரனோடு உயிரிழந்த நாய்க்குக்கூட கல் எடுத்து புகழ்பாடிய நன்றியுள்ள மக்கள் தமிழ் மக்கள். போரிலே தந்தை மரணம் எய்தி அவனது தலைமகன் எடுப்பித்த நடுகல்லும், தமையன் உயிரிழக்க நேரிட்டபோது தம்பி எடுப்பித்த நடுகல்லும், தலைவன் இறந்து பட்டால் ஊர் மக்கள் எடுப்பித்த நடுகற்களும் ஏராளமாகத் தமிழக அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்நடுகற்கள் அனைத்தும் வீர மறவர்களின் நினைவுச் சின்னங்கள் ஆகும்.

வெற்றியின் சின்னம் சோழ கங்கம்

திருச்சி மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள இராஜராஜீச்சுரத்தின் அருகில் உள்ள பெரிய ஏரி முதலாம் இராஜேந்திரனால் உருவாக்கப்பட்டது. அப்பெரு மன்னன் கங்கைவரை படையெடுத்துச் சென்று வெற்றிக் கொடி நாட்டி வந்ததின் நினைவாக ஏற்படுத்திய நினைவுச் சின்னமே அப்பெரு ஏரி, அதன் காரணமாகவே அம்மன்னன் அவ்வேரியைச் சோழ நாட்டின் கங்கை என்று பொருள் படும் படியாக 'சோழகங்கம்' என்ற பெயரிட்டழைத்தான்.

பள்ளிப் படைகள்

இற்றை நாளில் இறந்தவர்களின் உடலை வைத்து சமாதி எழுப்பப்படுவது போன்றே பண்டைக்காலத்திலும் சமாதிகள் எழுப்பப்பட்டன. அவற்றுக்குப் பள்ளிப்படை என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டன. அவ்வாறான பள்ளிப் படை பெருமன்னர்களுக்கும் பேரரசர்களுக்கும் எழுப்பப் பட்டன. சோழ மன்னன் ஆதித்ய சோழனுக்கு தொண்டைமானாற்றூரில் பள்ளிப்படையும், அரிஞ்சயனுக்கு வடார்க்காடு மாவட்டம் மேற்பாடியில் பள்ளிப்படையும் எடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாம் இராஜராஜனின் பட்டத்து அரசிகளுள் ஒருத்தியான பஞ்சவன்மாதேவி என்ற அரசிக்கு எழுப்பப் பட்ட பள்ளிப்படை இன்றும் பட்டீச்சுரத்துக்கு அருகில்

காணப்படுகிறது. இப்பள்ளிப் படைகள் இறந்தவர்களை நினைவு கூர்வதற்காக எழுப்பப்பட்ட நினைவுச் சின்னங்கள் ஆகும்.

சரபேந்திர ராஜப்பட்டினம் மனோரா

ஆங்கிலேயர் காலத்தில், ஆங்கிலேயர்களுக்கும் நெப்போலியனுக்கும் ஏற்பட்ட போரில் ஆங்கிலேயர்கள் வெற்றியடைந்ததைக் கொண்டாடும் பொருட்டு தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன் பட்டுக்கோட்டை வட்டம் சரபேந்திர ராஜப் பட்டினத்தில் ஒரு உப்பரிகையை எழுப்பியுள்ளான். அதை இன்றும் காணலாம்.

தமிழகத்துக் காசுகள்

ஒரு நாட்டின் வரலாற்றை எழுதுவதற்குக் கல்வெட்டுக்களைப் போலவே அந்நாட்டில் கிடைக்கும் காசுகளும் பெருந்துணை புரிகின்றன. நமது இந்தியாவில் பேரரசன் அசோகனுக்கு முன்னர் ஆண்ட மன்னர்களைப் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு அக்காலத்தியக் காசுகள் தான் பெரிதும் பயன்பட்டன. வரலாற்றை உருவாக்குவதற்கு இப்பொழுது மிகவும் இன்றியமையாத மூலமாக இருக்கும் கல்வெட்டைப் படிப்பதற்கும் காசுகளின் மீது இரு மொழிகளில் பொறிக்கப் பெற்றிருக்கும் குறிப்புகளே பெரிதும் உதவின.

மௌரிய மன்னர்களின் காலத்தில் எழுதப்பெற்ற பிராமிக் கல்வெட்டுகளை முதன் முதலில் படிப்பதற்கு அக்காலத்துக் காசுகளே பெரிதும் துணையாயின. காசுகளின் மூலம் மன்னனது பெயரை மட்டும் அல்லாமல் அவன் கொண்டிருந்த சமயப்பற்று, நாட்டின் வணிகச்சிறப்பு ஆகியவற்றையும் உணர முடிகிறது.

எடுத்துக் காட்டாகக் குப்தர் காலக் காசுகளில் முருகன் உருவமும் மயிலின் உருவமும் பொறிக்கப் பெற்றிருக்கும்; அவைகளிலிருந்து குப்த அரசர்கள் முருகனை வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்று நாம் அறிய முடிகிறது.

தக்கணத்தை ஆண்ட சாதாவாகன மன்னர்களின் காசு களில் கப்பல் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அவர்கள் காலத்தில் கடல் கடந்த வாணிபம் நடைபெற்றி ருக்கிறது என்பதை நாம் உணரலாம்.

இலக்கியத்தில் காசுகள்

இவ்வாறுகப் பல வகைகளில் உதவக்கூடிய காசுகளைத் தமிழகத்தை ஆண்ட மன்னர்களும் வெளியிட்டிருக்கிறுர்கள். தமிழ் இலக்கியங்களில் காசுகளைப் பற்றி பெருமளவில் பேசப் படுகின்றன.

பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன் அரிசில் கிழார் என்ற புலவருக்கு 9,00,000 காணத்தைப் பரிசாக அளித்ததைப் பதிற்றுப்பத்து குறிக்கிறது.

ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்ற மன்னன், காக் கைப் பாடினியார் என்ற பெண்பாற் புலவருக்கு நூறு ஆயிரம் பொன்காணத்தைப் பரிசாக வழங்கியதை அறிகிறும்.

உருத்திரன் கண்ணனுர் எழுதிய பட்டினப்பாலை என்ற நூலுக்காகக் கரிகாலன் 16,00,000 பொன்னைப் பரிசாக அளித்துள்ளான்.

காணம் என்பது பொன் நாணயங்களிலே ஒரு வகை யாக இருக்கலாம். பதிற்றுப் பத்து மற்றுமொரு நாணயத் தையும் குறிக்கிறது. 'காப்பொன்' என்று அதற்குப் பெயர். இது பொன்னிலே கால் பகுதியாக இருக்கலாம். இங்கே எடுத்தாளப்பட்ட மேற்கோள்களிலிருந்து அப்பொழுது வழங்கப் பெற்ற நாணயங்களின் உருவ அமைப்பை நாம் உணர முடியவில்லை.

காசு ஆய்வு பற்றிய எண்ணம்

தென்னிந்தியாவில் கிடைக்கும் காசுகளையெல்லாம் சேகரித்து ஆராயவேண்டும் என்ற எண்ணம் சென்ற நூற்

ருண்டில் தான் தோன்றிற்று. முதன் முதலில் 1858-இல் ஸர் வால்டர் எலியட் என்பார் காசுகளைப் பற்றி இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்கினர். ஒரு கட்டுரையில் அச்சு குத்தப்பெற்ற காசுகளைப் பற்றியும், சாதவாகனர் களின் காசுகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

1896-இல் "தென் இந்தியக் காசுகள்" என்ற அருமை யான நூலை அவர் எழுதினர். ஜே. யி. ட்ரேசி என்பவர் பாண்டியர்களின் பதினைந்து செப்புக்காசுகளைப் பற்றி ஆய்வுக் கட்டுரை வழங்கினர்.

சென்ற நூற்ருண்டில் லாவன்தால் என்னும் அறிஞர் "திருநெல்வேலிக் காசுகள்" என்ற நூலை ஆக்கினர். தென் னிந்தியக் காசுகளைப் பற்றி ஆய்வு நடத்தியவர்களுள் காட்ரிங்டன், ரேப்சன், ஸ்மித், ஹுல்ட்ஷ், கன்னிங்ஹாம், டி. தேசிகாச்சாரி ஆகியோர் குறிப்பிடப்பட வேண்டியவர் கள் ஆவர்.

அச்சு குத்தப்பெற்ற காசுகள்

தமிழகத்தில் இதுவரையில் கிடைத்துள்ள காசுகளிலே மிகவும் பழமையானவை அச்சுக் குத்தப்பெற்ற வெள்ளிக் காசுகளேயாகும். இவைகள் பெரும்பாலும் தமிழகத்தின் தென் பகுதிகளில்தான் அதிகமாகக் கிடைத்துள்ளன. காசுகள் நீண்ட சதுரமான கெட்டித் தகடுகளில், சில முத்திரைகள் அழுத்தப்பட்டு விளங்குகின்றன. தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய மூன்று உலோகங்களிலும் இவை உள்ளன.

அக்காசுகளோடு சேர்ந்து கிடைக்கும் மற்ற காசுகளைக் கொண்டும், மற்றப் பொருட்களைக் கொண்டும்தான் அவை களின் காலத்தைக் கணிக்க இயலும்.

கோவை மாவட்டம், பெண்ணூர் என்ற இடத்தில் இக்காசுகள் கிரேக்க மன்னன் அகஸ்டஸ் வெளியிட்ட

"டினேரியஸ்" என்ற காசோடு கிடைத்துள்ளன. தென்னாற்காடு மாவட்டம் தொண்டமாநத்தம் என்ற ஊரிலும், சென்னையில் மாம்பலத்திலும் அச்சுக் குத்தப்பெற்ற காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோமானியக் காசுகளோடு கிடைத்துள்ளன. இதிலிருந்து கி. மு. முதல் நூற்றாண்டு முதல் கி. பி. முதல் நூற்றாண்டு வரை அச்சுக் குத்தப்பெற்ற வெள்ளிக் காசுகள் தமிழகத்தில் பழக்கத்தில் இருந்தன என்பது தெரிய வருகிறது.

இதே காலத்தின்தான் தக்கணப்பகுதியிலும் இக்காசுகள் பழக்கத்தில் இருந்திருக்கின்றன. இதற்கு ஆதாரமாக மைசூர் மாநிலத்தில் சந்திரவல்லி என்ற இடத்தில் நடத்திய அகழ்வாய்வில் அச்சுக் குத்தப்பெற்ற காசுகளோடு கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த சாதவாகன மன்னர் ஒருவரின் காசு கிடைத்திருப்பதைக் கூறலாம்.

வட இந்தியக் காசுகள்

இது போன்ற காசுகள் வட இந்தியாவில் ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவைகளை மோரியர் காலத்துக்கு முந்தியவை என்றும், மோரியர் காலத்துக்குப் பிந்தியவை என்றும் பிரித்துள்ளனர். தமிழகத்தில் கிடைத்துள்ள காசுகளையும் இதேபோன்று பிரிக்கலாம்.

சங்க இலக்கியங்களில் அச்சு குத்தப்பெற்ற காசுகளைப் பற்றி ஒரு இடத்திலும் குறிக்கப் படவில்லை. தமிழகத்தில் கிடைத்துள்ள அச்சு குத்தப்பெற்ற காசுகள் உரோமானியக் காசுளோடு கிடைத்தபோதிலும், அக்காலத்துக்கு முற்பட்டவையாகவும் இருக்கலாம். அத்தோடு தென்னிந்தியாவில் கிடைக்கும் அச்சுக் குத்தப்பெற்ற காசுகளிலும் வட இந்தியாவில் கிடைக்கும் இத்தகைய காசுகளிலும் ஒரே மாதிரியான உருவங்கள் காணப்படுகின்றன. சான்றாகச் சில காசுகளில் மலைமேல் மயில் அமர்ந்துள்ளது போல் உருவம் உள்ளது. இவ்

உருவம் மோரியர் காலத்தியக் காசுகளிலும், தமிழகத்தில் மதுரைப் பகுதியில் கிடைத்த காசுகளிலும் காணப் படுகின்றன.

தென்னிந்தியாவில் கி. மு. 5-ம் நூற்றுண்டு முதல் கி. பி. 4-ம் நூற்றுண்டு வரை வழக்கிலிருந்த "கறுப்பு-சிவப்பு" பானை ஓடுகளில் காணப்படும் சில குறிகளும் அச்சுக் குத்தப்பெற்ற காசுகளில் காணப்படும் சில குறிகளும் ஒத்திருக்கின்றன. எனவே, இவ்வகையான காசுகள் கி. மு. 5-ம் நூற்றுண்டிலிருந்தே பழக்கத்தில் நிலவி கி. பி. முதல் நூற்றுண்டோடு நின்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

வெளியிட்டவர் யார்

இக்காசுகளை வெளியிட்டவர்கள் யார்? சில காசுகளில் காணப்படும் குறிகள் இன்றைக்கு ஏறக்குறைய 4500 ஆண்டு களுக்கு முற்பட்ட மொஹஞ்சாதாரோ, ஹரப்பா காலத்திய முத்திரைகளின் மீது காணப்பெறும் குறிகளை ஒத்திருக் கின்றன. ஆதலின் இக்காசுகள் அந்நாகரிகக் காலத்தின் தொடர்ச்சிக் காலத்தில் வாழ்ந்தவர்களால் வெளியிடப்பட்டு இருக்கலாம்.

சங்க காலக் காசுகள்

அச்சு குத்தப்பெற்ற காசுகளுக்குப் பிறகு சங்க காலத் தில் வழங்கிய காசுகள் பழக்கத்தில் இருந்திருக்க வேண்டும். இக்காசுகளில் அரசர்களின் தலைகள் அச்சிடப்படவில்லை. புலி, யானை, அமரர் தரு, திருமறு (ஸ்ரீவத்ஸம்) போன்ற உருவங்களையே காணமுடிகின்றன. பெரும்பாலான காசு களில் எழுத்துக்கள் பொறிக்கப்படவில்லை. எல்லாக் காசு களும் சதுர வடிவிலேயே அமைந்துள்ளன.


இவற்றில் சிலவற்றைச் சேரர்கள், பாண்டியர்கள் காசுகள் என்றும், சோழர்கள் காசுகள் என்றும் பிரித் திருக்கிறுர்கள் ஆராய்ச்சியாளர்கள். சதுரமாக உள்ள

காசுகள் சிலவற்றில் ஒரு புறம் யானை உருவம் பொறிக்கப் பட்டு மறுபுறம் எந்த ஒருகுறியும் இல்லாது இருக்கின்றன. அவற்றைச் சேரர் காசுகள் என்கின்றனர். ஒரு சில சதுரக் காசுகளில் நிற்கும் குதிரை காணப்படுகிறது. அக்குதிரையின் உருவம் அஸ்வமேத யாகம் செய்ததைக் குறிக்கலாம் என்றும், பாண்டிய மன்னர்களில் பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதி என்பான் பல யாகங்கள் செய்து புகழ் பெற்றவனாதலால் அவன் காலத்தில் இக்காசு வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அண்மையில் காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த அகழ்வாய்வில் சங்க காலச் சோழ மன்னர்களின் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகள் சதுரமாக உள்ளன. இவற்றில் ஒருபுறம் ஒரு காலைத் தூக்கி நிற்கும் புலியின் உருவமும், மறுபுறம் யானையின் உருவமும் காணப்படுகிறது. சில காசுகளில் புலிக்கு மேற்பகுதியில் சூரியன் உரு தெரிகிறது. சோழர்கள் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இது குறிப்பதாகக் கருதப்படுகிறது. இக்காசுகள் சோழமன்னன் கரிகால் பெருவளத்தான் காலத்ததாக இருக்கலாம் என்று எண்ணப்படுறது. இக்காசுகளோடு அரச மரச் சின்னம் பொறித்தக் காசுகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

ஆண்டிப்பட்டி காசுகள்

சில ஆண்டுகளுக்கு முன்பாக வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டத்தில் ஆண்டிப்பட்டி என்ற ஊரில் சுமார் நூற்றுக்கு மேலாகச் சங்க காலக் காசுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அவைகள் ஈயத்தால் செய்யப் பெற்றவை. இக்காசுகளிலும் அரசனது உருவம் காணப்படவில்லை. இவைகளில் 'தமிழி' எழுத்தால் சில எழுத்துக்கள் எழுதப் பெற்றுள்ளன. ஒருகாசில் 'அதிணன் எதிரன் சேந்தன்' என்று எழுதப்பெற்றிருக்கிறது என்றும்; அது சேந்தன் என்பவனால்



பூம்புகாரில் கண்டெடுக்கப்பட்ட
சங்ககாலச் சோழர் காசு



பல்லவர் காசு

...நன்றி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.



“எல்லாந் தலையானான்”

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காசு



“சமரகோலாகலன்”. சுந்தரத் தோளுடைய

மாவலி வாணராயன் காசு

—நன்றி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.

வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் பேராசிரியர் திரு. டி. வி. மகாலிங்கம் அவர்கள் கருதுகிருர்கள்.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நாகசாமி அவர்கள், அதை "திண்ணன் எதிரான் சேந்தன் அ" என்று படித்து திண்ணனுடன் முரணிய சேந்தன் என்பான் இதை வெளியிட்டிருக்க வேண்டுமென்று கருதுகிருர்.

இந்த வாக்கியத்தில் 'திண்ணன்', 'சேந்தன்' என்ற சங்க காலப் பெயர்கள் காணப்படுவது அறிந்தின்புறத்தக்கதாகும். அதில் காணப்பெறும் எழுத்தமைதியைக் கொண்டு இக் காசுகள் கி.பி. இரண்டாம் நூற்ருண்டைச் சேர்ந்தவை களாகக் கொள்ளலாம் என்றும் கருதப்படுகிறது.

பல்லவர் காசுகள்

தமிழகம் பல்லவர்களது ஆட்சியில் கி.பி. 3ம் நூற்ருண்டு தொடங்கி 9ம் நூற்ருண்டு வரை சிரும் சிறப்புடனும் விளங் கியது. கலையிலே கருத்துக் கொண்டு கண்டோர் வியக்கத் தக்க அளவிற்குக் கலைப் படைப்புகளை உருவாக்கிய இம் மன்னர்கள் காசுகளையும் வெளியிட்டிருக்கிருர்கள்.

இவர்களுடைய காசுகள் பெரும்பாலும் செப்புக் காசு களாகவே உள்ளன. மெல்லியத் தகடுகளால் செய்யப் பட்டுள்ளன. இத்தகைய காசுகள் தொண்டை மண்டலத் திலும், தொண்டை மண்டலத்துக்குப் புறம்பேயும் கிடைத் திருக்கின்றன.

இக் காசுகளில் ஒரு புறத்தில் காளை நின்ற அல்லது கிடந்த நிலையில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றி கிரந்த எழுத்துக்களில் மன்னனுடைய பெயர் காணப்படு கிறது. ஸ்ரீநிதி, ஸ்ரீபரன், மானபரன் என்ற மூன்று பெயர் களே அவற்றில் குறிக்கப்படுகின்றன. ஸ்ரீநிதி, ஸ்ரீபரன் என் பவை கி. பி. 700முதல் 730 வரை ஆண்ட இராஜ சிம்ம பல்ல

வனுடைய பட்டப் பெயர்களாகும். எனவே அக்காசுகள் அம்மன்னனது காலத்தில் வெளியிடப்பட்டவையாக இருக்க வேண்டும்.

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் ''மானுபரன்'' என்ற விருதுப் பெயரைப் பெற்றவன். ''மானுபரன்'' என்று எழுதப்பட்டுள்ள காசு இம்மன்னனல் வெளியிடப்பட் டிருக்கும்.

இக்காசுகளின் மறு பக்கத்தில் சக்கரம், அசோக மரம், மீன், வில், விளக்கு, சங்கு, கவரி, கொற்றக்குடை முதலிய சின்னங்கள் காணப்படுகின்றன. சில காசுகளின் முன்புறம் காளையும், பின்புறம் சங்கமும் உள்ளன. ஒரு காசில் பின் புறம் கப்பல் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. பல்லவர் கடற் படையில் சிறந்திருந்ததையும், அக்காலத்தில் கடல் வாணிபம் சிறந்து விளங்கியதையும் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்துக் கல்வெட்டு களிலும், நிருபதுங்கவர்மன் காலத்துக் கல்வெட்டுகளிலும் காணம், காசு ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

காஞ்சிபுர அகழ்வாய்வில் ஏழு ஈழக் காசுகள் கண்டெடுக் கப்பட்டுள்ளன. எல்லாக் காசுகளிலும் காளை உருவம் பொறிக்கப்பட்டு, எந்தவித குறிப்பும் இல்லாதிருக்கின்றன. அவை கி. பி. 3ம் நூற்ருண்டைக் சார்ந்தவை என்று கருதப் படுகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத் தொல் பொருள் ஆய்வுத் துறை, காஞ்சிபுரத்தில் அகழ்வாய்வு நடத்தியபோது காசுகள் செய்யக்கூடிய அச்சு ஒன்று கண்டுப்பிடிக்கப் பட்டுள்ளது. அதிலும் காளையின் உருவம் பொறிக்கப் பட்டிருக்கிறது.

''தென்னிந்தியக் காசுகளின் தந்தை'' என்று அழைக்கக் கூடிய எலியட் அவர்கள் தமது நூலில் குறித்துள்ள பல்லவர் காசுகளையே இவை ஒத்து காணப்படுகின்றன.

சோழர் காலக்காசுகள்

சோழர்கள் காலத்தியக் காசுகளைப் பற்றிக் கல்வெட்டுகள் மிகுதியாகக் குறிப்பிடுகின்றன. ஏறக்குறைய ஐம்பது வகையான காசுகளைப் பற்றிக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அதற்கேற்றாற்போல் தமிழகமெங்கணும் சோழர் காலத்தியக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

''மதுராந்தகன் மாடை.'' ''இராஜராஜன் மாடை''. "இராஜேந்திர மாடை' போன்ற காசுகளைப் பற்றி கல்வெட்டுகள் அதிக அளவில் கூறுகின்றன.

''மாடை'' என்பது இரண்டு காசுகளுக்குச் சமமானது. மாடை என்ற சொல்லே மாடு என்று சொால்லின் அடிப்படையில் வந்திருக்க வேண்டும் என்ற கருதப்படுகிறது. மாடு என்பதற்குச் செல்வம், பொன் என்றும் பொருள்கள் உண்டு.

இதுவரையில் கிடைத்துள்ள சோழர் காலத்துக் காசுகளிலே மிகவும் பழமை வாய்ந்தது சோழ மன்னன் உத்தம சோழன் காலத்தியக் காசுதான். இக்காசுகள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களால் ஆனவை. இம்மன்னர் காலத்தியக் காசுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. முன்பக்கம் : புலி, இருகயல்கள், வில் ஆகியவைகளின் சின்னங்கள்.

   மறுபக்கம் : உத்தம சோழன் என்று நாகரி எழுத்தால் எழுதப்பட்டிருக்கும்.

2. முன் பக்கத்திலும், மறு பக்கத்திலும் புலியும் மீனும் பொறிக்கப்பட்டு ஓரத்தில் 'மதிராந்தகன்' என்று தமிழ், கிரந்த எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டிருக்கும்.

3. முன் பக்கத்திலும், மறுபக்கத்திலும் புலியும் ஒரு கயலும் பொறிக்கப்பட்டு ஓரத்தில் 'உத்தம சோழன்' என்று தமிழில் எழுதப்பட்டிருக்கும்,

முதலாம் இராஜராஜன் காசுகள்

இதற்கடுத்து முதலாம் இராஜராஜனுடைய காசுகள் தான் நிரம்ப கிடைத்துள்ளன. இவன் காலத்தில் இரு வகையான காசுகள் புழக்கத்தில் இருந்திருக்கின்றன.

1, முன்புறமும் பின்புறமும், புலி இணைகயல் வில் ஆகிய மூன்றும் பொறிக்கப்பட்டு. 'ஸ்ரீராஜ ராஜசோழ' என்று நாகரி எழுத்தில் எழுதப் பட்டிருக்கும்.

2. முன்புறம், ஈழ மனிதனின் நின்ற உருவம், பின்புறம் ஈழ மனிதனின் அமர்ந்த உருவம். அமர்ந்த உருவத்தின் கையின் கீழ் "ஸ்ரீ ராஜராஜ" என்று நாகரி எழுத்தில் எழுதப்பட்டிருக்கும்.

முதலாம் இராஜேந்திரன் காசுகள்

முதலாம் இராஜராஜனின் மகன் முதலாம் இராஜேந் திரன் காலத்தியக் காசுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இம் மன்னன் மூன்று வகையான காசுகளை வெளியிட்டிருக் கிறான்.

1. முன்புறமும், பின்புறமும் புலி, இரு மீன்கள், வில் ஆகிய உருவங்கள் வரிசையாகப் பொறிக்கப் பட்டு அவைகளின் கீழ் 'கங்கை கொண்ட சோழன்' என்று நாகரி எழுத்தில் எழுதப் பெற் றிருக்கும்.

2. முன்புறமும், பின்புறமும் புலி, இருமீன்கள், வில் ஆகியவை பொறிக்கப்பட்டு கீழே 'ஸ்ரீராஜேந் திர சோழன்' என்று நாகரி எழுத்தில் எழுதப் பெற்றிருக்கும்.

3, முன்புறம் புலி, கயல், வில் சின்னங்கள் நடுவில் பொறிக்கப்பட்டு, சுற்றிலும் 'கங்கை கொண்ட சோழன்' என்று கிரந்த எழுத்தில் எழுதப் பெற்றுக் காணப்படும்.

பின்புறம் குழிவாக யாதொரு சின்னமும் இன்றி உள்ளது. (இந்த காசுகள் ஆந்திர மாநிலத்தில் தவளேச் சுவரம் என்ற இடத்திலிருந்து கிடைத்துள்ளன.)

இராஜாதிராஜன் காசுகள்

முதலாம் இராஜேந்திர சோழனின் மகன் இராஜாதிராஜனும், தன் ஆட்சிக் காலத்தில் சில காசுகளை வெளியிட்டுள்ளான். இவன் காலத்தியக் காசுகள் இருவகையில் காணப்படுகின்றன. ஒன்றில் 'மலை நாடு கொண்ட சோழன்' என்று தமிழில் எழுதப் பெற்றுள்ளது. மற்றொன்றில் மன்னர் குதிரை மீதேறிச் செல்லும் உருவம் பொறித்துக் காணப்படுகிறது. குழலூதும் பிள்ளையாகக் கண்ணனின் உருவம் பொறித்த காசுகளும், இவன் காலத்தவையே என்று கருதப் படுகிறது.

முதலாம் குலோத்துங்கன் காசுகள்

சுங்கந் தவிர்த்த சோழன் என்று இலக்கியங்களில் போற்றப்படும் முதலாம் குலோத்துங்கன் காலத்திலும் காசுகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. அவற்றில் 'சுங்' என்று தமிழில் எழுதப்பட்டுள்ளன. அதை வெளியிட்டவன் 'சுங்கந் தவிர்த்தவன்' என்பதைக் குறிப்பிடுவதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பாண்டியர் காசுகள்

சங்க காலப் பாண்டியர்களின் காசுகளைப் பற்றி முன்னரே காணப்பட்டது. சங்கக் காலத்துக்குப் பிறகு கி. பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் பாண்டியர்கள் திரும்பவும்

வலிமை பெற்று ஆளத் துவங்கி விட்டனர். கலி அரசை வீழ்த்தியக் கடுங்கோனின் வழிவந்த பாண்டியர்கள் கி. பி. 10 ஆம் நூற்றுண்டு வரை தொடர்ந்து ஆண்டிருக்கின்றனர். அவர்களுடைய காசுகள் இதுவரையில் கிடைத்தில.

பின்னர் கி. பி 13–ஆம் நூற்றுண்டிலிருந்து திரும்பவும் பாண்டியர்களின் அரசு எழுந்தது. இவ்வரசு கி. பி. 10–ஆம் நூற்றுண்டு வரை ஆட்சி செய்தது. இக்காலத்தில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் ஆகிய மன்னர்கள் சீரோடும் சிறப்போடும் ஆட்சி புரிந்தனர். இவர்கள் காலத்தில் காசுகள் வெளியிடப் பட்டுள்ளன. இவர்களுக்குப் பின் வந்த பாண்டிய மன்னர் களின் காலத்திலும் காசுகள் அச்சாக்கப் பட்டிருக்கின்றன. இந்த காசுகள் பல வகைகளில் காணப்படுகின்றன.

1. முன்புறம்: நந்தி பின்புறம்: மீன்

2. முன்புறம்: ஈழ மனிதனின் நின்ற உருவம்

   பின்புறம்: ஈழமனிதனின் அமர்ந்த உருவம். அமர்ந்த உருவின் இடது கையின் கீழே ஒரு மீன் அல்லது இரு மீன்கள் அல்லது எழுத்துக்கள் காணப்படு கின்றன.

சில காசுகளில் பாண்டியர்களுடைய இலச்சனையாகிய மீன் பல அமைப்புகளில் காணப்படுகின்றன.

1. இரு விளக்குகளின் மத்தியில் ஒரு மீன்.

2. இரு விளக்குகளின் மத்தியில் இரு மீன்கள்.

3. இரு கயல்கள் மட்டும்

4. இரு கயல்களுக்கு நடுவில் செண்டு.

5. மீனைச் சுற்றிலும் எழுத்து

6. இரு கயல்களுக்கிடையில் எழுத்து.

மற்றும் சில காசுகளில் இருபுறமும் எழுத்துக்கள் மட்டும் எழுதப் பெற்று காணப்படுகின்றன.

'சோணுடு கொண்டான்' என்று சில காசுகளில் எழுதப் பெற்றுள்ளது. முதலாம் மாறவர்மன் 'சோணுடு கொண்டருளிய சுந்தர பாண்டியன்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப் படுவதால் 'சோணுடு கொண்டான்' என்று எழுதப் பெற்றுள்ள காசு அவனைச் சார்ந்தது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

'எல்லாந் தலையாணுன்' என்று மற்றும் சில காசுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. ஜடாவர்மன் சுந்தர பாண்டியனுக்கு 'எம்மண்டலும் கொண்டருளிய' என்ற பட்டப் பெயர் காணப்படுவதால் அவன் காலத்தில் இக்காசு வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுடுறது.

இதைப் போன்று குலசேகரன், வீரபாண்டியன் ஆகிய பெயர்கள் பொறித்த காசுகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. குலசேகரன், வீரபாண்டியன் என்று பெயர் பெற்ற பல பாண்டிய மன்னர்கள் ஆட்சி புரிந்திருக்கின்ற காரணத்தால் இக்காசுகள் யாரால் வெளியிடப் பெற்றவை என்று அறிய இயலவில்லை.

'சமர கோலா கலன்', 'புவனேகவீரன்' என்று எழுதப் பெற்றிருக்கும் காசுகள் கி. பி. 16–ஆம் நூற்ருண்டில் திருவில்லப் புத்தூர்ப் பகுதியில் ஆட்சி புரிந்த சுந்தரத் தோளுடையான் மாவலி வாணராயன் என்ற அரசன் காலத்தில் வெளியிடப் பெற்றவை என்று இந்நூல் ஆசிரியரால் பிறிதோரிடத்தில் நிருபிக்கப்பட்டுள்ளது.

விஜயநகரக் காசுகள்

விஜயநகர மன்னர்கள் வெளியிட்ட காசுகள் பல உருவங்களைத் தாங்கி நிற்கின்றன. விஜயநகர மன்னர்களான

ஹரிஹரர், தேவராயர் இருவராலும் வெளியிடப் பெற்ற தங்கக் காசுகளில் உமா மஹேச்சுரர் உருவம் காணப்படுகிறது.

புக்கர், தேவராயர் ஆகியோர் காலத்தியக் காசுகளில் திருமால், பிராட்டியர்களுடன் காட்சி தருகிறார்.

அச்சுதராயர் காசுகளில் இரண்டு தலைகளைக் கொண்ட கண்ட பேருண்ட பறவை, தன் அலகுகளால் யானைகளைக் கொத்தி நிற்பதைக் காணலாம். சில காசுகளில் பன்றியின் உருவத்தையும், சிலவற்றில் கருடன், நடமாடும் கண்ணன் ஆகிய உருவங்களையும் காணலாம்.

விஜய நகர, மன்னர்கள் காலத்தில் 'ராமடங்கா' என்று அழைக்கப் பெற்ற தங்கக்காசுகள் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒருபுறம் இராமரும், சீதையும் அமர்ந்திருக்கும் நிலையிலும், மறுபுறம் அனுமன் நிற்கும் நிலையிலும் உருவங்களைக் காணலாம். அனுமனுக்குப் பக்கத்தில் நாகரி எழுத்து எழுதப் பெற்று காணப்படுகின்றன.

விஜய நகரக் காசுகளில் காலத்தால் முந்தியவற்றில் கன்னட எழுத்துக்களிலும், பிந்தியவற்றில் நாகரி எழுத்துக்களிலும் அரசர்களுடைய பெயர்கள் எழுதப் பெற்றுள்ளன.

நாய்க்கர் காசுகள்

தமிழகத்தில் விஜய நகர மன்னர்களை அடுத்து ஆட்சி புரிந்த நாயக்கர்கள் காலத்திலும் பல விதமான காசுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மதுரைப் பகுதிகளில் இவர்களது காசுகள் நிரம்ப கண்டெடுக்கப் பட்டுள்ளன. அனைத்தும் செப்புக் காசுகள்.

தருமபுரிப் பகுதியை 'இராமண்ண நாயக்கன்' என்பான் கி. பி. 16 ஆம் நூற்றாண்டளவில் ஆட்சி செய்திருக்கிறான். அவன் தம்முடைய பெயரால் காசு வெளியிட்டிருக்கிறான். அவனது காசில் முன்புறம் ''இராமண்ணன்'' என்று எழுதப் பட்டும், பின்புறம் நரசிம்மர் உருவம் அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டும் காணப்படுகிறது.

கொங்கு நாட்டுக் காசுகள்

கொங்கு நாடு என்பது இன்றைய சேலம், தருமபுரி, கோவை மாவட்டங்கள் அடங்கிய பகுதியாகும். இம் மூன்று மாவட்டங்களில் அடங்கிய ஊர்களிலிருந்து கிடைக்கப் பெற்ற காசுகளையும், பிற மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற கொங்கு சேரர் காசுகளையும் ஒரு தொகுப்பாகத் தொகுத்து அதன் மூலம் என்ன அறிய முடிகிறது என்பதை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மாவட்டங்களும் ஊர்களும்

கோவை மாவட்டத்தில் 34 ஊர்களிலிருந்தும், தருமபுரி மாவட்டத்தில் 18 ஊர்களிலிருந்தும், சேலம் மாவட்டத்தில் 14 ஊர்களிலிருந்தும், மதுரை மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் 2 ஊர்களிலிருந்தும், திருச்சி மாவட்டத்தின் வடமேற்குக் கோடியில் ஒரூரிலிருந்தும், தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரூரிலிருந்தும் காசுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தின் பகுதியும், திருச்சி மாவட்டத்தின் பகுதியும் கொங்கு நாட்டில் சேர்க்கப்பட்டதன் நோக்கம் அம்மாவட்டங்களின் சில பகுதிகள் முன்னர் கொங்கு நாட்டோடு இணைந்திருந்தவை என்பதாலேயாகும். தென்னார்க்காடு மாவட்டம் திருச்சின்னபுரம் என்ற ஊரிலிருந்து கொங்கு சேரர் காசுகள் கிடைக்கப் பெற்றதால் அவ்வூர் இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது.

முத்திரை குத்தப்பெற்ற காசுகள்

கொங்கு நாட்டில் கிடைக்கப் பெற்ற காசுகளிலே மிகவும் பழமையானவை முத்திரை பதிக்கப்பெற்ற காசுகள் தான் (Punch marked coins). இந்த முத்திரை பதிக்கப் பெற்ற காசுகள் கி. மு. மூன்றும் நூற்றுண்டிலிருந்து வழங்கி வந்தன. கொங்கு நாட்டில் மூன்று ஊர்களில் இக்காசுகள் கிடைத்துள்ளன. அவை மூன்றும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவை. தாராபுரம் வட்டம் ஆலம் பாளையத்திலிருந்து 30-ம், பொள்ளாச்சி வட்டம் வக்கம்பாளையத்திலிருந்து 48-ம் ஈரோடு வட்டம் தயிராபாளையத்திலிருந்து 193-ம் கிடைத்துள்ளன. அனைத்தும் வெள்ளிக் காசுகள். தமிழகத் தில் கிடைத்துள்ள இவ்வகைக் காசுகளில் இப்பகுதியில்தான் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

உரோமானியக் காசுகள்

கொங்குப் பகுதியில் இக்காசுகள் மொத்தம் 1521 கிடைத்திருக்கின்றன. அனைத்து இந்தியாவிலும் கிடைத்துள்ள உரோமானியக் காசுகளைக் கணக்கில் கொண்டால் எண்பது சதவிகிதம் தமிழ் நாட்டில், அதுவும் கொ்ங்கு நாட்டில், கிடைத்துள்ளன.

இக்காசுகள் கிரேக்க மன்னர்கள் அகஸ்டஸ், டைபீரியஸ், நீரோ, ட்ராஜன் போன்ற மன்னர்களால் வெளியிடப் பெற்றவை. அவை கி. மு. முதல் நூற்றுண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு வரை அடங்கிய காலத்தில் வெளியிடப் பெற்றவை ஆகும். எனவே அந்தக் கால கட்டத்தில் தமிழகம், அதுவும் இப்பகுதி உரோமானியர் களோடு வாணிபத் தொடர்பை மிகவும் அழுத்தமாகக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

இங்கு ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். இங்கு கிடைத்துள்ள உரோமானியக் காசுகளில் பெரும்பாலான வற்றில் அதை வெளியிட்ட மன்னனின் தலைப்பகுதி வேண்டு மென்றே சிதைக்கப்பட்டு காணப்படுகிறது. இதைக் காசு

ஆய்வு செய்யும் அறிஞர்கள் உரோமானியர்கள் வேண்டு மென்றே செய்திருக்கிறார்கள் என்றும், அவ்வாறு செய்யப் பெற்றது, நாணயமாக வழக்கில் இந்தியாவில் இருக்கக் கூடாது என்றும், அணியாகவோ அல்லது இருப்பாகவோ வைத்து கொள்ளுவதற்குத்தான் அனுமதிக்கப்பட்டதென்றும் கூறுகின்றனர். அப்பொழுது இந்நிலத்தை ஆண்ட தமிழ் வேந்தர்கள் அவைகளை இந்நாட்டில் புழக்கத்தில் விடக் கூடாது என்று இவர்களாகவும் தடை செய்திருக்கலாம் அல்லவா? யோசிக்க வேண்டிய ஒன்று.

உரோமானியக் காசுகள் தமிழ் நாட்டில் கிடைக் கின்றன- ஆனுல் தமிழ்நாட்டுக் காசுகள் உரோமில் கிடைத் திருக்கின்றனவா? கிடைக்கவில்லையெனில் ஏன்? ஆராயப் படவேண்டும்.

உரோமானியக் காசுகள் பொள்ளாச்சி வட்டம் அகிலாண்ட புரத்திலிருந்தும், உடுமலைப்பேட்டை வட்டம் வடக்கு பூதிநத்தத்திலிருந்தும், கோவை வட்டம் வெள்ளலூரி லிருந்தும், மதுரை வட்டம் கலயம்புத்தூரிலிருந்தும், திருச்சி வட்டம் கரூரிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் வடக்கு பூதிநத்தத்திலிருந்து மட்டும் மொத்தம் 1398 காசுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வெள்ளலூரில் இக்காசுகளோடு 4 மோதிரங்களும் 2 வேலைப்பாடமைந்த மணிகளும், 1 தங்கத் தாம்பாளமும் சில பொருட்களும் எடுக்கப்பெற்றிருக் கின்றன.

சங்ககாலக் காசுகள்

நியாயமாக உரோமானியக் காசுகளுக்கு அடுத்தபடி யாகச் சங்க காலக் காசுகள்தான் இடம்பெற வேண்டும். அவை இப்பகுதியில் இதுவரையில் கிடைக்கவில்லை. அல்லது கிடைத்திருந்தது என்றால் என்னுல் சேகரிக்க முடியாமலும் இருக்கலாம். அவ்வாறு கிடைக்காமல் இருந்திருந்தால் ஏன் இப்பகுதியில் கிடைக்கவில்லை என்ற வினு எழுகிறது. இப் பகுதி சங்க காலத்தில் தமிழகத்தின் மற்ற பகுதிகளோடு

ஒட்டாமல் தனித்தே இருந்தாகவும் ஒரு கருத்துண்டு. ஆனால் இந்த காலத்தில் பூம்புகாரில் காசு வெளியிடப்பட்டிருப் பதற்கு ஆதாரமாக சோழர் காசு ஒன்று கிடைத்துள்ளது.

கொங்கு சேரர் காசுகள்

கொங்கணி வமிசத்தைச் சேர்ந்த மன்னர்கள் கி. பி. நான்காம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் ஒரு சிறு பகுதியை ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் காலத்தில் வெளியிடப் பெற்ற சில காசுகள் கிடைத்திருக்கின்றன.

இக்காசுகள் எல்லாவற்றிலும் ஒரு பக்கம் யானை ஒன்று வலது பக்கம் பார்த்து நிற்கும் நிலையிலும், மறுபக்கம் சில பூ வேலைப்பாடுகளும் காணப்படும். இந்த காசுகளைப் போன்றே காஷ்மீரத்திலும் பல காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை ஹர்ஷதேவன் என்ற மன்னனால் வெளியிடப்பட்டவை.

இக்காசுகள் மொத்தம் 16 கிடைத்துள்ளன. கோபி வட்டம் கணக்கம்பாளையத்திலிருந்து 4 காசுகளும், கிருஷ்ண கிரி வட்டம் மேடப்பட்டிலிருந்து 1 காசும், தென்னார்க்காடு மாவட்டம் திருச்சின்னபுரத்திலிருந்து 11 காசுகளும் எடுக்கப் பெற்றுள்ளன.

இந்தக் காசுகளில் காணப்படும் யானையின் உருவமும், கங்க மன்னர்களின் செப்பேடுகளில் உள்ள முத்திரையில் காணப்படும் யானையின் உருவமும் ஒன்றே போல் காணப்படு வதால் இக்காசுகளைக் கொங்கு சேரர் காசுகள் என்று கொள்கின்றனர்.

கல்வெட்டுகளில் காசுகள்

இப்பகுதியில் காணப்படும் கி. பி. 10, 11, 12–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் சில காசுகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பொன், காணம், ஈழக்காசு போன்றவைகள் குறிப்பிடப்படுகின்றன.

சோழர், பாண்டியர் காசுகள்

இப்பகுதி சோழ மன்னன் ஆதித்யன் காலம் முதல் பிற்காலச் சோழர்கள் காலம் வரை சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்திருந்தாலும் தமிழகமெங்கணும் பரவிக் கிடக்கும் முதலாம் இராஜராஜன் காசுகள் இப்பகுதியில் மிகக்குறைந்த அளவிலே கிடைத்திருக்கின்றன. அதைப் போன்றே பாண்டியர் காசுகளும் இப்பகுதியில் குறைவாகக் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

பவானிக்குப் பக்கத்தில் சோழர் காலக் காசுகள் கிடைத்துள்ளன என்பதாகச் செய்தி கிடைத்துள்ளது. அதைப் போன்றே தருமபுரி மாவட்டம், கடத்தூரிலும் சோழர் காலக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விஜய நகர் காலத்தியக் காசுகள்

ஹரிஹரர் புக்கர் ஆகியோரை முதன்மையாகக் கொண்டு தொடங்கிய விஜய நகர ஆட்சி பல காசுகளை வெளியிட்டிருக்கிறது. இராமதங்கா என்பது மிகவும் சிறப்புப் பெற்ற காசு ஆகும். அந்தக் காசு கூட இப்பகுதியில் கிடைக்கவில்லை.

பிற்காலத்தில் விஜயநகர மன்னர்களிடத்தே சிற்றரசர்களாக விளங்கிய சிலரது காசுகள் கிடைத்துள்ளன. கிருஷ்ணகிரி வட்டம் கங்காதேவியிலிருந்து 22 செப்புக் காசுகளும், ஓமலூர் வட்டம் மூக்கானூரிலிருந்து 20 தங்கக் காசுகளும், தருமபுரி வட்டம் எச்சனஹல்லியிலிருந்து 6 தங்கக் காசுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மைசூர் உடையார் காசுகள்

மைசூர் மன்னர்கள் கி. பி. 16–ஆம் நூற்றாண்டு முதல் ஆண்டு வந்திருக்கின்றனர். அவர்களில் கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த காந்திரவ நரச ராஜா என்பவர் சிறந்த அரசராகத் திகழ்ந்திருக்கிறார். அவருடைய ஆட்சி

யில் சேலத்தின் ஒரு பகுதி அடங்கியிருந்தது என்பதை அங்கு கிடைத்துள்ள அவர் காலத்தியக் காசுகள் நிரூபிக்கின்றன. ஓமலூர் வட்டம் மூக்கானூரிலிருந்து அவர் காலத்திய 24 தங்கக் காசுகள் கண்டெடுக்கப்பட்டன. அண்மையில் ஈரோட்டுக்கு அருகில் உருது எழுத்துப் பொறித்த சில வெள்ளிக் காசுகளும், வேறு சில தங்கக் காசுகளும் கிடைத்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

கேஷ், பணம், பகோடா

இந்த காசுகள் கி. பி. 18–ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் புழக்கத்தில் இருந்திருக்கின்றன- 80 கேஷ் 1 பணம் என்றும், 42 பணம் 1 பகோடா என்றும் வழங்கியிருக்கின்றன. இந்த மூன்று வகைக் காசுகளும் கொங்கு நாட்டில் கிடைத்துள்ளன.

கேஷ்

இது மிகச் சிறிய காசாகும். ஒரே ஒரு தங்கக் காசு மூக்கானூரிலிருந்து கண்டெக்கப்பட்டுள்ளது.

பணம்

இந்தக் காசு கொங்கு நாட்டில் மொத்தம் 29 ஊர்களிலிருந்து 717 காசுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை அனைத்தும் தங்கக் காசுகள். இவை உருவத்தில் மிகச் சிறுயதாகவும், இரு பக்கங்களிலும் சில உருவங்கள் பொறிக்கப்பெற்றும் காணப்படும்.

பகோடா

இந்தக் காசுகளும் தங்கக் காசுகளாகவே கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவற்றில் மூன்று பிரிவுகள் இருந்திருக்கின்றன. 1. ஒரு சுவாமி பகோடா (Single Swami pagoda), 2. மூன்று சுவாமி பகோடா 3. பழைய நட்சத்திர பகோடா என்பனவாகும். மூன்று சுவாமி பகோடாவில் நடுவில்

திருமாலும் இரு பக்கமும் இரு தேவியரும் இருப்பர். ஒரு சுவாமி பகோடாவில் நெடியோன் உரு மட்டும் காணப்படும். பழைய நட்சத்திர பகோடாவில் நட்சத்திரங்கள் பொறிக்கப் பட்டிருக்கும். இத்தகையக் காசுகள் 8 ஊர்களிலிருந்து 54 காசுகள் கிடைத்துள்ளன.

முகம்மதியர் காசுகள்

தமிழகத்தில் விஜயநகர ஆட்சி முடிவுற்ற பின் சில பகுதிகளில் முகம்மதியர் ஆட்சி தொடங்கியது. கி. பி. 1707–ல் ஔரங்கசிப் இறந்த பிறகு பலர் தில்லி அரியணையில் அமர்ந்தார்கள். கி. பி. 18-ஆம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் இரண்டாம் ஆலங்கிரும் அவரது மகன் இரண்டாம் ஷா ஆலமும் சிறிது காலம் ஆட்சி செலுத்திஞர்கள்.

அவர்கள் காலத்தியக் காசுகள் கொங்குப் பகுதியில் பெருமளவில் கிடைத்துள்ளன. உடுமலைப் பேட்டை வட்டம், கொண்டம் பட்டி என்ற ஊரிலிருந்து மட்டும் ஆலங்கீர் காலத்தியக் காசு 97-உம், இரண்டாம் ஷாஆலத்தின் காசு இரண்டும் கிடைத்துள்ளன. மேலும் இதே வட்டத்தில் பழவடி என்ற ஊரிலிருந்தும், கோபி வட்டம் பழனி கவுண்டன் பாளையம்பட்டூரிலிருந்தும், ஈரோடு வட்டம் அத்தயம் பாளையத்திலிருந்தும் (திப்புவின் காசுகள் 25 ஆலங்கிருடையதும் இரண்டாம் ஷா ஆலத்தினுடையதும் 28.) இவர்கள் காலத்தியக் காசுகள் நிரம்பக் கிடைத்துள்ளன. இவர்கள் காசுகள் அனைத்தும் வெள்ளிக் காசுகள்.

திப்பு, ஹைதர் காலத்தியக் காசுகள்

கி, பி. 18–ஆம் நூற்றுண்டில் ஆங்கிலேயர்களுக்குப் பெரும் தலைவலியாக இருந்தவர்கள் மைசூரில் ஆட்சிபுரிந்து வந்த ஹைதர் அலியும் அவரது மகன் திப்புசுல்தானும் ஆவர். அவர்கள் பிரெஞ்சுக்காரர்களோடு சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரை கடைசி வரையில் எதிர்த்து

வந்திருக்கின்றனர். அவர்கள் காலத்தியக் காசுகளும் இப் பகுதியில் கிடைத்துள்ளன.

ஹைதர் அலி

ஹைதர் அலி காசுகள் அனைத்தும் தங்கக் காசுகள். மொத்தம் 2 காசுகள் கிடைத்துள்ளன. அவைகளில் ஒரு புறம் உமாமஹேஸ்வரரின் உருவமும், மற்றொரு புறம் 'ஹை' என்று தேவநாகரியில் எழுதப் பெற்றும் காணப்படுகின்றன. ஹிஜிரா ஆண்டு 1216 என்று குறிக்கப்பட்டுள்ளது.

திப்பு

திப்புக் காசுகள் தங்கத்திலும் வெள்ளியிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 213 காசுகள் 6 ஊரிலிருந்து கிடைத்திருக்கின்றன. அவைகளில் சிலவற்றில் இரு பக்கங்களிலும் பர்ஷியன் எழுத்தில் பெயர் பொறிக்கப்பெற்றுள்ளன.

இந்தோ ஆங்கிலக் காசுகள்

இந்தியாவை ஆங்கிலேயர் கைப்பற்றியதும் அவர்கள் வெளியிட்ட பல காசுகளும் இங்கு கிடைத்துள்ளன. இக் காலத்தியக் காசுகளில் முக்கியமானவை பேரரசி விக்டோரியா, ஏழாம் எட்வர்ட், நான்காம் வில்லியம் ஆகியோரது காசுகளாகும். இவைகள், தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் காணப்படுகின்றன. மேற் கூறப் பெற்றவை அல்லாது 3 வெனீசு நாட்டுக் காசுகளும் கிடைத்துள்ளன. அவை தங்கக் காசுகளாக உள்ளன.

நாம் அறிந்து கொள்வது

கொங்கு நாடு கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதற் கொண்டே வாணிபத்தில் சிறந்து விளங்கியது என்றும், அதுவும் கிரேக்க நாட்டோடு பெருமளவில் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது என்றும் தெரிந்து கொள்ள முடிகிறது. சோழர் பாண்டியர் காலங்களில் இப்பகுதி ஓர

ளவு செல்வாக்குக் குறைந்து காணப்பட்டது என்பதும், பின்னர் விஜயநகர் காலம் தொட்டு திரும்பவும் இப்பகுதி தனது பெருமையை நிலைநாட்டியிருக்கிறது என்பதும் தெரிய வருகிறது. ஹைதர்அலி போன்ற மன்னர்கள் தாங்கள் முதம்மதிய மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து 'உமா மஹேஸ்வரர்' போன்ற இந்துக் கடவுளர்களின் உருவங்களைக் காசுகளில் பொறித்து இந்து மக்களிடையே நல்லுறவை வளர்த்துக் கொண்டனர் என்பதும் அறிதற்பாலது.

திருமேனிகள், திருப்பரிகலங்கள் மீது எழுத்துக்கள்

தமிழக மக்கள் மிக்க பழங்காலம் தொட்டே எந்த ஒரு பொருளையும், அது என்ன பொருள், எப்பொழுது, யாரால் அளிக்கப்பெற்றது போன்ற செய்திகளை அப்பொருளின் மீது பொறித்து வைக்கும் பழக்கத்தை ஒரு மரபாகக் கடைப் பிடித்து வந்திருக்கிறார்கள்.

கல்வெட்டுச் சான்று

தஞ்சை மாவட்டம், திருவெண்காட்டில்[1] காணப்படும் கல்வெட்டில் வில்லன் மஹாதேவியாரின் தங்கை ஒலோக சிந்தாமணியாரால் நிலைவிளக்கு ஒன்று கொடையளிக்கப் பட்டது குறிக்கப்படுகிறது. அந்நிலைவிளக்கைப் பற்றிக் கூறுகையில் "இவரே குடுத்த நிலைவிளக்கு தந் பாதத்தில் எழுத்து வெட்டி தராவிளக்கு நால்முழமேய், ஐய்விரல் நீளத்தில்'' என்று சொல்கிறது.

அதே போன்று தஞ்சை மாவட்டம், கோயில் தேவராயன் பேட்டையில் காணப்படும் கல்வெட்டு[2] "ஈச்சொப்பிகைய் 1-திறல் பொன் தன்னில் எழுத்து வெட்டிக் கிடந்தபடி நிறை 19 கழஞ்சு'' என்று தெரிவிக்கிறது.

---

1. S. I. I. Vol. V, No. 989.
2. S. I. I. Vol. XIX, No. 236.

"வெள்ளி கொண்டு செய்த திருப்பரிகலங்க ளுள்ளிட்டன வும் சிவபாதசேகரனென்றும் ஸ்ரீ ராஜராஜனென்றும் திருநாமம் உடையன" என்று தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு கூறுகிறது[3]. இவ்வாறு கல்வெட்டுகள் மூலம் அறிவதோடல்லாமல் கண்கூடாகவேப் பார்த்து மகிழும் அளவுக்குக் கடவுளர்களின் செப்புத் திருமேனிகள், திருப்பரி கலங்கள் ஆகியவற்றின் மீது எழுதப்பட்டிருப்பவை ஓரளவுக்குக் கண்டுபிடிக்கப்பட்டும் உள்ளன.

திருச்சேறை சேனைமுதலி

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டத்திலுள்ள திருச்சேறை வைணவத் தலங்களுள் ஒன்றாகும். இக்கோயி லில் உள்ள சேனை முதலி செப்புத்திருமேனியின் பீடத்தில்,

"ஸ்ரீபட்டர் நாராயண தாஸன்
ஸேநாபதிகளயும் சுற்று மதிளும்
எடுப்பிச்சு"

என்று எழுதப்பட்டுள்ளது. அச்சேநாபதி திருமேனியை (செம்பினால் செய்யப்பெற்ற கடவுளர் திருவுருவங்களைத் திருமேனிகள் என்றும், மனித உருவங்களைப் பிரதிமம் என்றும் அழைப்பது பண்டைய மரபு) நாராயணதாசன் என்பான் செய்தளித்தான் என்ற செய்தி புலனாகிறது. அத்தோடு அதில் காணப்படும் எழுத்தமைதி, அத்திருமேனி கி. பி. 8–9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று அறுதியிடுவதற்கு உறுதுணை புரிகிறது.

திருத்துறைப்பூண்டி அம்பாள்

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஔஷத புரீஸ்வரர் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வரும் செப்புத்திருமேனிகளுள் அம்பாள் திருமேனியும் ஒன்று.

---

3. த. பெ. கோ. கல். பக்கம் 260, இரா. நாகசாமி



தமிழ்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள சங்கு

—நன்றி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.



தமிழ்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள குடமுழா
—நன்றி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.

இத்திருமேனி நின்ற நிலையில் உள்ளது. இருகரங்கள். இதனுடைய பீடத்தில்;

> " ஸ்வஸ்தி ஸ்ரீ உமாபரமேஸ்வரிக்குத்
> தம்பநா யடுப்பன சேதான் தேவன்
> பழிப்பிலி"

என்று எழுதப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு இத்திருமேனி கி. பி. 9-10-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது என்று கூறலாம். தேவன் பழிப்பிலியென்பவன் உமா பரமேஸ்வரி வீதிவலம் எழுந்தருளுவதற்காக இத்திருமேனி யைச் செய்தான் என்று கூறப்பட்டுள்ளது.

சிவகாமி; திரிபுராந்தகர் திருமேனிகள்

அண்மைக் காலத்தில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தஞ்சை மாவட்டத்தில் இரு செப்புத் திருமேனிகளில் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றிருப்பதைக் கண்டு பிடித்துள்ளது.

ஒன்று சிவகாமியினது உருவம். அது முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்தது. இச் செப்புத்திருமேனியின் பீடத்தில் பராந்தகன் காலத்தியக் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. எனவே இத்திருமேனி கி. பி. பத்தாம் நூற்றுண்டைச் சேர்ந்தது என்று உறுதியாகக் கூறமுடிகிறது.

மற்றொன்று திரிபுராந்தகர் திருமேனி. இதன் பீடத்திலும் கல்வெட்டு காணப்படுகிறது. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் சோழப் பேரரையன் என்பான் இத்திருமேனிக்கு அமுது படைப்பதற்காக நிலக்கொடையளித்ததைக் குறிக்கிறது.

குடமுழாவில் எழுத்து

மேலே கூறப்பெற்றிருப்பவை திருமேனிகளில் எழுதப் பெற்றிருப்பவை ஆகும். இனி திருப்பரிகலங்களில் எழுதப்

பெற்றிருப்பவைகளைக் காணலாம். திருத்துறைப் பூண்டியில் சோமாஸ்கந்தர் திருமேனிக்கு முன்பாக புரட்டாசி மாதம் நிறைமதி நாளன்று குடமுழா என்னும் இசைக்கருவி வாசிக்கப்படும். குடமுழா என்பது ஒருவகைப் பறை. இவ்வாத்யம் பற்றி இலக்கியங்கள் பெரிதும் வியந்து பேசுகின்றன. இங்குள்ள வாத்யம் அளவில் மிகப் பெரியதாகக் காணப்படுகிறது. இவ்வாத்யத்தின் கீழ்ப்பகுதியில்.

''ஸ்வஸ்திஸ்ரீ இக்குடவிழா சமைப்பித்
திட்டார் சிகாருடையார் மல்லாண்டா
ரான சோழகோனுர்'' என்றும்;

இதன் எடை ''2330 பலம்'' என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதைக்கொண்டு இக்குடமுழா, குடவிழா என்றும் அழைக்கப் பட்டது என்றும் (தவருகவும் எழுதப் பெற்றிருக்கலாம்); சிகாரைச் சேர்ந்த மல்லாண்டார் என்னும் சோழகோனுர் இதனைச்செய்தமைத்திட்டார் என்றும்; இதன் எடை 2330 பலம் என்றும்; எழுத்தமைதியைக் கொண்டு. கி. பி. 12-13-ஆம் நூற்ருண்டைச் சார்ந்தது என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்தொட்டிகளில் எழுத்து

பெருமன்னன் இராசராசன் தம்மால் அளிக்கப் பெற்ற எல்லாப் பொருட்களுக்குமே ஏதாவது ஒரு பெயரினை இட்டு அழைத்தும், அதன் மீது அப்பெயரைப் பொறித்தும் வந்திருக்கிருன். எடைக் கற்களுக்கு 'ஆடவல்லான்', 'தக்ஷிணமேரு விடங்கன்' என்று பெயரிட்டும், அவைகளின் மீது பொறித்தும் மகிழ்ந்திருக்கிருன். அதே போன்று காளம் என்னும் வாத்யத்துக்குக் கூட ஸ்ரீஇராஜராஜன், சிவபாதசேகரன் என்ற பெயரிட்டழைத்தும், எழுத்துக்களில் பொறித்தும் வந்திருக்கிருன். பெரிய கோவில்ல் உள்ள பெரிய தேவரை நீராட்டுவதற்காக நிரப்பப்படும் நீர்த்

தொட்டிகளில் கூட அவை எவ்வளவு நீர் கொள்ளத்தகுவன என்பதையும் எழுதி வைத்திருந்தமை இன்றும் காணக்கூடிய வகையில் உள்ளன.

காட்சியகத்தில் உள்ள கல்தொட்டி

தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருச்சுற்றில் மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் அமைக்கப் பட்டுள்ள காட்சியகத்தில் ஒரு கல்தொட்டி வைக்கப் பட்டுள்ளது. அதில் அத்தொட்டி 13 கலம், 1 பறை அளவு தண்ணீரைக் கொள்ளக் கூடியது என்று குறிக்கப்பெற் றுள்ளது.

அம்மன் ஆலயத்தில் உள்ள கல்தொட்டி

அதே போன்று, பெருவுடையார் கோயிலின் திருச் சுற்றில் உள்ள அம்மன் சந்நிதியிலும் ஒரு கல்தொட்டி உள்ளது. அதில் சில குறியீடுகள் காணப்படுகின்றன. அவை 10 கலம் 12 மரக்கால் 7 நாழி அளவு தண்ணீர் அத் தொட்டியில் நிரப்பமுடியும் என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். திருச்சுற்றில் உள்ள முருகன் சந்நிதியிலும் கல் தொட்டி ஒன்று இருப்பதாகவும்; அதிலும் எண்கள் பொறிக்கப் பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

திருப்பரிகலங்களில் எழுத்து

தஞ்சாவூரில் உள்ள கலைக்கூடத்தில் இரு செப்புக் கலங்கள் திருவெண்காட்டில் கிடைத்தவை என்று கலைக் கூடத்தின் காப்பாளர் திரு. இரத்தினசபாபதி அவர்கள் தெரிவித்தார்கள். ஒரு கலத்தில் அதன் நிறை 21 7/8 பலம் என்றும், இரண்டாமவதில் அதன் எடை 22 7/8 பலம் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. வேறொரு இடத்தில் ஒரு செப்புப்படியில் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றிருப்பதாக அக்காப்பாளரே கூறினர். அக்கல்வெட்டு வெண்பா அமைப் பில் அமைந்திருப்பதாகவும் தெரிகிறது.

ஊதுசங்கில் எழுத்து

வடார்க்காடு மாவட்டம் வேலூரிலிருந்து காட்பாடிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கழிஞ்சூர் சுவர்ண புரிஸ்வரர் கோயில் திருச்சுற்றைச் செப்பனிடுகையில் சில செப்புத் திருமேனிகளும், பரிகலங்களும், மூன்று ஊதுசங்கு களும் கிடைத்தன. மூன்று சங்குகளில் ஒன்றில் எழுத்துக்கள் காணப்படுகின்றன.

''ஸ்ரீ கெஞ்சூர் இறையா நீசர
முடையார்க்கு நகருடையாந்
செய்யகோவந் இட்ட சங்கு''

என்று அதில் எழுதப்பட்டுள்ளது. எழுத்தமைதி கி.பி. 10-ஆம் நூற்றுண்டைக் காட்டுகிறது. இக்குறிப்பையும், அக் கோயில் முகமண்டப விதானத்தில் காணப்படும் முதலாம் இராசராசன் கல்வெட்டில் வரும் குறிப்பையும் பார்க்கையில் இந்தச் சங்கை வழங்கிய செய்யகோவனே முதலாம் இராசராசன் காலத்தில் இக்கோயிலுக்கு இரண்டு திருநுந்தா விளக்குகளை அளித்திருக்கிறுன் என்ற செய்தி புலனுகிறது. முதலாம் இராசராசனின் கல்வெட்டு.

''...சோழ மண்டலத்து கேரளாந்தக வள நாட்டு...ரில் நகருடையான் கா...கோவனென் திரு நுந்தா (விளக்கு) இரண்டும்'' என்று உள்ளது.

அழகர் கோயில் கல் அம்மியில் எழுத்து

மதுரைக்கு அருகில் உள்ள அழகர் கோயிலில் கல் அம்மி ஒன்று காணப்படுகிறது. அதில்,

''திருமாலிருஞ்சோலை நின்றுன் மாவலி
வாணுதராயர் உறங்காவில்லி தாஸன்
ஆன சமரகோலாகலன்''

என்று எழுதப்பட்டுள்ளது. எதித்தமைதியைக் கொண்டு கி. பி. 16–17–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கூறலாம். மதுரை நாயக்கர்களுக்கு அடங்கி பணிபுரிந்த மாவலி வாணாதராய அரசர்களுள் ஒருவன் இதை அளித்திருக்கிறான் என்று கருதலாம்[4].

சங்கின்மீது வட்டெழுத்து

தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம் திருவிடைவாசலில் ஒரு கிணற்றிலிருந்து 6 சங்குகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றில் இரண்டு சங்குகளில் எழுத்துகள் காணப்படுகின்றன.

ஒன்றில் வட்டெழுத்திலும், மற்றொன்றில் தமிழ் எழுத்திலும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

எழுத்தமைதியைக் கொண்டு பார்க்கையில் இரண்டும் கி. பி. 10–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கூறலாம்.

திருவதிகைச் சங்கு

தென்னார்க்காடு மாவட்டம், பண்ருட்டிக்கு அருகாமையில் அமைந்திருக்கிற திருவதிகையிலிருந்தும் கல்வெட்டு பொறித்த சங்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சங்கின் மீது காணப்பெறும் எழுத்து கி. பி. 12–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் போன்று தோன்றுகிறது.

மேலே காட்டப்பட்டுள்ளவாறு மேலும் சில திருமேனிகளும் திருப்பரிகலங்களும் தமிழ் நாட்டில் கிடைக்கக்கூடும். அவைகளையெல்லாம் சேகரித்து ஆய்வு செய்தால் செப்புத் திருமேனிகளின் காலங்களைக் கணிப்பதற்குப் பெரும் உதவி புரிவனவாக அமையும்.

---

4. கல்வெட்டு Vol. 4, தொல் பொருள் ஆய்வுத்துறை காலாண்டு இதழ், பக்கம் 34.



இந்நூலாசிரியரைப் பற்றி...

தென்னார்க்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டம் தொப்பளிக்குப்பம் என்னும் சிற்றூரில் 1-11-1940-இல் பிறந்தார். இவரது பெற்றோர்: திரு. நடனசபாபதி, திருமதி. ருக்மணி.

சிதம்பரம் இராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளியில் தன் பள்ளிக் கல்வியைப் பயின்ற இவர், பி.ஏ. வரலாறு அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும், எம்.ஏ., தொன்மை வரலாறும் தொல்லியலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பயின்றார்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் 1967-ஆம் ஆண்டு ஏப்ரல்வரை கல்வெட்டாய்வாளராகப் பணியாற்றினார்; 1974 மே முதல் அதே துறையில் பழங்கலைப் பதிவு அலுவலராகப் பணியாற்றி வருகிறார்.

கல்வெட்டு, வரலாறு, தமிழ் ஆகியவற்றில் மிகவும் ஈடுபாடுள்ள இவர், கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகளை மூன்று தொகுதிகளாகத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். காலச்சுவடுகள், முத்தரையர் போன்ற வரலாற்றுத் தொடர்பான நூல்களை ஆக்கியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏறத்தாழ அறுபதுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.

தமிழக அரசின், தமிழ் நாட்டு வரலாற்றுக் குழு எழுதும் தமிழ் நாட்டு வரலாற்று நூலுக்குப் பல்லவர் பாண்டியர் காலக் கல்வெட்டு, செப்பேடுகள் என்னும் தலைப்பில் எழுதியுள்ளார்.

தமிழகத்தில் வரலாற்றுத் தொடர்பான பல கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரை வழங்கியுள்ள இவர் 1976-ஆம் ஆண்டில் இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்வெட்டுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு தமிழ்நாட்டு நடுகற்கள் என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வுக்கட்டுரை வழங்கியுள்ளார்.